இரண்டாம் பதிப்பு

# உதயன்

மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

விலை - 20
பக்கங்கள் - 28

சுடர் 32 | கதிர் 90 | வள்ளுவர் ஆண்டு 2048 | மாசி 12, வெள்ளிக்கிழமை 24.02.2017

# மாகாண அதிகாரத்தை அதிகரிப்பதானால் நிறைவேற்றதிகாரம் தொடரவேண்டும்

## அடித்துக் கூறியது சுதந்திரக் கட்சி

கொழும்பு, பெப்ரவரி 24

ஆளுநரின் அதிகாரங்களைக் குறைத்து மாகாண சபைகளின் அதிகாரங்களை அதிகரிக்கவேண்டுமாயின் நிறைவேற்று அரச தலைவர் முறைமை தொடரவேண்டும் என்று சிறிலங்கா சுதந்திரக் கட்சி திட்டவட்டமாகத் தெரிவித்தது.

கொழும்பு டார்லி வீதியில் அமைந்துள்ள சிறிலங்கா சுதந்திரக் கட்சியின் தலைமையகத்தில் நேற்று நடைபெற்ற செய்தியாளர் சந்திப்பில் >> 24



## எமது போராட்டத்துக்கு ஆதரவு தருக

காணாமற்போனோரின் உறவுகள் கோரிக்கை

கிளிநொச்சி, பெப். 24

வலிந்து காணாமல் ஆக்கப்பட்டவர்களின் விடுதலையை வலியுறுத்தி அவர்களது உறவுகள் 4 ஆவது நாளாகவும் நேற்றுப் போராட்டத்தில் ஈடுபட்டனர். தாய் ஒருவர் >> 24



---

விமல்ராஜ் சூட்டுச் சம்பவம்

## குற்றவாளிகளை கைது செய்யக்கோரி நேற்றுப் போராட்டம்

செங்கலடி, பெப்.24

மட்டக்களப்பு, திருகோணமலை மாவட்ட காணி சீர்திருத்தப் பணிப்பாளரும், யாழ்.மாவட்டப் பதில் பணிப்பாளருமான என்.விமல்ராஜ் மீது துப்பாக்கிப் பிரயோகம் மேற்கொள்ளப்பட்ட சம்பவத்துடன் தொடர்புடையவர்களைக் கைது செய்யக் கோரி மாவட்டச் செயலக உத்தியோகத்தர்கள் நேற்றுக் கவனவீர்ப்புப் போராட்டத்தில் ஈடுபட்டனர். இந்தப் போராட்டத்தில் கலந்துகொண்டவர்கள் எவ்வித கோசங்களையும் எழுப்பாமல், பதாகைகளை ஏந்தியிருந்தனர். (விரிவு: பக். 11)

## காணி விடுவிப்புக்கு கால அவகாசம் கோரும் ராணுவம்

கிளிநொச்சி, பெப். 24

பரவிப்பாஞ்சானில் தமது வசமுள்ள மக்களின் காணிகளை விடுவிக்க ஒரு வார கால அவகாசம் கோரியுள்ளது இராணுவம்.

அத்துடன் அங்கு விடுதலைப் புலிகளால் நிர்மாணிக்கப்பட்ட கட்டடங்கள் உள்ள காணிகளை உடனடியாக விடுவிக்கமுடியாது என்றும் படையினர் திட்டவட்டமாகக் கூறியுள்ளனர்.

ஆயினும் காணிகள் ஒப்படைக்கப்படும் வரை போராட்டத்தை நிறுத்தமாட்டோம் எனத் தமது கொள்கையில் உறுதியாக உள்ளனர் மக்கள்.

(விரிவு: பக். 03)

## மாணவர் கொலை; பொலிஸாரின் மறியல் நீடிப்பு

யாழ்ப்பாணம்.பெப்.24

யாழ்ப்பாணப் பல்கலைக் கழக மாணவர்களின் கொலையுடன் தொடர்புடைய சந்தேகத்தில் கைதுசெய்யப்பட்டு விளக்கமறியலில் உள்ள ஐந்து பொலிஸாருக்கும் எதிர்வரும் மார்ச் மாதம் 9ஆம் திகதிவரை விளக்க மறியல் நீடிக்கப்பட்டுள்ளது.

கடந்த ஆண்டு துப்பாக்கிச் சூட்டுக்கு இலக்காகி யாழ்ப்பாணப் பல்கலைக் கழக மாணவர்கள் >> 23

## தனி நாட்டுக்காகவே புதிய அரசமைப்புக்கு கூட்டமைப்பு ஆதரவு

மகிந்த அணி குற்றச்சாட்டு

கொழும்பு, பெப். 24

தனிநாட்டுக்கான கோரிக்கையைப் பலப்படுத்தவே அரசமைப்புப் பணிகளில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு >> 24

## கூட்டாட்சி முறையில் அதிகாரம் பகிரலாம்

ஐ.நா. அறிக்கையாளர் பரிந்துரை

கொழும்பு, பெப். 24

சிறுபான்மை மக்களின் அரசியல் பங்களிப்பு பல வழிகளின் ஊடாக உறுதிப்படுத்தப்படலாம் என்று தெரிவித்துள்ள ஐ.நா.வின் சிறப்பு அறிக்கையாளர், >> 24

## திருக்கேதீஸ்வரத்தில் இன்று சிவராத்திரி

யாழ்ப்பாணம் பெப். 24

திருக்கேதீஸ்வரம் ஆலயத்தின் மகா சிவராத்திரி விழா இன்று அதிகாலை 5 மணிக்கு ஆரம்பமாகிச் சிறப்பாக இடம்பெற உள்ளதாக ஆலய நிர்வாகத்தினர் >> 24

## 150 கிலோ கஞ்சாவை கடத்திய நால்வர் பருத்தித்துறைக் கடலில் நேற்றுச் சிக்கினர்

யாழ்ப்பாணம், பெப். 24

'பருத்தித்துறைக் கடற்பரப்பில் படகில் கடத்தப்பட்டுக்கொண்டிருந்த சுமார் 150 கிலோகிராம் கஞ்சா போதைப் பொருள் பொதிகளைக் கடற்படையினர் நேற்று கைப்பற்றினர். அதனைக் கடத்திய குற்றச்சாட்டில் 4 பேர் கைது செய்யப்பட்டனர்' என்று பொலிஸார் தெரிவித்தனர்.

'பருத்தித்துறைக் கடற்பரப்பில் நேற்றைய தினம் பகல் வேளையில் கடல் ரோந்துப் பணியில் ஈடுபட்டிருந்த காங்கேசன்துறைக் கடற்படையினர் சந்தேகத்துக்கு இடமான படகு ஒன்றை மறித்துச் >> 23

## சிவராத்திரியையொட்டி திருக்கேதீஸ்வரத்துக்கு இன்று சைக்கிள் பயணம்

யாழ்ப்பாணம்,பெப்.24

சிவராத்திரியை முன்னிட்டுத் திருக்கேதீஸ்வரத் துக்கு இரு சைக்கிள் ஓட்ட வீரர்கள் சைக்கிளில் செல்லவுள்ளனர்.

சுழிபுரத்தைச் சேர்ந்த கே.கைலைநாதன் (வயது - 62), நவாலியைச் சேர்ந்த ராஜசேகரம் (வயது - 55) ஆகிய இரண்டு பிரபல சைக்கிள் ஓட்ட வீரர்களுமே >> 24

மக்கள் போராட்டங்களுக்கு ஆதரவாக

## கிளி. சந்தை வர்த்தகர்கள் கடையடைத்துப் பேரணி

கிளிநொச்சி, பெப்.24

கிளிநொச்சியில் நடத்தப்படும் இரு போராட்டங்களுக்கு ஆதரவு தெரிவித்து கிளிநொச்சி சந்தை வர்த்தகர்கள் தமது கடைகளை அடைத்து ஆதரவு தெரிவித்தனர். போராட்டத்திலும் கலந்து கொண்டனர்.

கிளிநொச்சியில் காணாமல் ஆக்கப்பட்டவர்களின் உறவினர்களும், பரவிப்பாஞ்சானில் இராணுவம் கையகப்படுத்தியுள்ள காணிகளின் உரிமையாளர்களும் தொடர் போராட்டம் நடத்துகின்றனர். அவர்களின் போராட்டங்களுக்கு ஆதரவாகவே வர்த்தகர்கள் நேற்று கடைகளை அடைத்து ஆதரவு தெரிவித்தனர். (விரிவு: பக். 09)

## குற்றம் புரிந்த படையினரை தண்டிக்கத் தடை கிடையாது

கூறுகிறார் அமைச்சர் அமரவீர



கொழும்பு, பெப். 24

போரின்போது பாலியல் வன்கொடுமை, படுகொலை போன்ற குற்றச் செயல்களில் படையினர் ஈடுபட்டிருந்தால் அவர்களுக்குத் தண்டனை வழங்கப்படுவதை நாட்டு மக்கள் எதிர்க்க >> 22

## புதுக்குடியிருப்பு போராட்டத்துக்கு வலுக்கும் ஆதரவு

முல்லைத்தீவு, பெப். 24

புதுக்குடியிருப்புப் பிரதேச செயலகத்துக்கு முன்னால் உள்ள காணிகளை விடுவிக்கக் கோரி முன்னெடுக்கப்பட்டு வரும் >> 22

## வடக்கு - கிழக்கில் தலைதூக்கியுள்ள பிரிவினைவாதம்

அரசு கண்டுகொள்ளாதிருப்பது ஏன் என மகிந்த தரப்பு கேள்வி

கொழும்பு, பெப். 24

பிரிவினைவாதச் செயற்பாடுகள் வடக்கு - கிழக்கில் அதிகரித்துள்ளன. சில அரசியல் கட்சிகளினதும், நாடாளுமன்றத்தைப் பிரதிநிதித்துவப்படுத்தும் -பிரதிநிதித்துவப்படுத்தாத ஏனைய மக்கள் பிரதிநிதிகளினது கருத்துக்களும் இதற்குச் >> 23

## 25 நாள்களைக் கடந்து தொடரும் பிலக்குடியிருப்புப் போராட்டம்

முல்லைத்தீவு, பெப். 24

பிலக்குடியிருப்பு மக்களின் அறவழிப் போராட்டம் உறுதியான முடிவு எதுவும் கிடைக்காமையால் தொடர்ந்து நடைபெறுகிறது.

25 நாள்கள் கடந்துள்ள நிலையில் நியாயபூர்வமான தமது போராட்டத்துக்கு உறுதியான முடிவு கிடைக்கும் என்ற நம்பிக்கையுடன் மக்கள் தொடர்ந்து போராடி வருகின்றனர். >> 23

## காணிகளை விட்டு ராணுவம் படிப்படியாகவே வெளியேறும்

காணி அமைச்சர் நேற்றுத் தெரிவிப்பு

கொழும்பு, பெப். 24

வடக்கு-கிழக்கு மக்களின் காணிகள் அவர்களிடம் மீள ஒப்படைக்கப்படும். அங்கிருந்து படிப்படியாக இராணுவம் வெளியேற்றப்படும் என்றும் காணி அமைச்சர் ஜோன் அமரதுங்க நேற்று சபையில் தெரிவித்தார்.

நாடாளுமன்றத்தில் நேற்று >> 24

உங்கள் சேமிப்பிற்கு கவர்ச்சிகரமான வட்டி வீதம்

வர்தன எக்ஸ்ட்ரீம் சேவர்

ரூ.1000 அல்லது அதற்கு மேல் சேமிக்கும் எந்தவொரு தொகைக்கும்
6.50% (வ.வி.வீ. 6.70%) முதல் 9.00% (வ.வி.வீ. 9.38%) வரை
அதிகபட்ச வட்டி

24 மணிநேர அழைப்பு மையம்: 011 2350000
இச்சலுகைகளை இன்றே அனுபவித்திட அருகிலுள்ள DFCC வங்கி கிளைக்கு விரைந்து வர்தன எக்ஸ்ட்ரீம் சேவர் கணக்கினை ஆரம்பியுங்கள்.
www.dfcc.lk
*நிபந்தனைகள் உண்டு.
DFCC வங்கி .பிச் ரேட்டிங் லங்கா லிமிட்டெட்டின் AA- (lka) தரப்படுத்தலைப் பெற்றுள்ளது.
DFCC வங்கி இலங்கை மத்திய வங்கியினால் மேற்பார்வை செய்யப்படும் உரிமம் பெற்ற ஒரு வர்த்தக வங்கியாகும்.

DFCC வங்கி
உங்கள் வளர்ச்சிக்கு

Facebook : UTHAYAN.PRINT
Twitter : UTHAYANPRINT

# காட்டிக் கொடுக்கப்படும் படைப் புலனாய்வாளர்கள்

## சபையில் வீரவன்ச கொதிப்பு

கொழும்பு, பெப். 24



ஊடகவியலாளர் கீத் நோயார் மீதான தாக்குதல் சம்பவம் தொடர்பில் இராணுவப் புலனாய்வுத் துறையினர் காட்டிக் கொடுக்கப்பட்டுள்ளனர் என்று நாடாளுமன்றத்தில் விசனம் வெளியிட்டார் மகிந்த ஆதரவு நாடாளுமன்ற உறுப்பினர் விமல் வீரவன்ச.

நாடாளுமன்றத்தில் நேற்று நடைபெற்ற வாய்மூல விடைக்கான கேள்வி - பதில் நேரத்தின்போதே சட்டம், ஒழுங்குகள் அமைச்சர் சாகல ரத்நாயக்கவிடம் தன் விசனத்தை வெளியிட்ட விமல் வீரவன்ச, மேலும் தெரிவித்ததாவது:

ஊடகவியலாளர் கீத் நோயார் மீதான தாக்குதல் தொடர்பில் 5 இராணுவப் புலனாய்வுத் துறை அதிகாரிகள் கைது செய்யப்பட்டுள்ளனர். சம்பவதினம் இவர்கள் தெகிவளைப் பகுதியில் நடமாடியமையே இவர்களைக் கைது செய்வதற்குக் காரணமாகவும் அமைந்துள்ளது.

இந்தப் புலனாய்வு அதிகாரிகளின் ஒளிப்படங்கள் கீத் நோயாருக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளன. இவ்வாறான நடவடிக்கைகள் மூலம் நாட்டுக்குத் தம்மை அர்ப்பணித்த புலனாய்வுத்துறையினர் காட்டிக் கொடுக்கப்படுகின்றனர் - என்றார்.

இந்தச் சம்பவம் தொடர்பான விசாரணை நீதிமன்றத்தில் உள்ளதால் இது குறித்துத் தன்னால் எந்தவித கருத்தையும் தெரிவிக்க முடியாது என்று சட்டம், ஒழுங்குகள் அமைச்சர் சாகல ரத்நாயக்க மறுத்து விட்டார். (த-5)

### சுமந்திரன் கொலைச் சதி;

# கைதானவர்களுக்கு எதிராக பயங்கரவாதச் சட்டத்தின் கீழ் வழக்குத் தாக்கல்வேண்டும்

## ஜி.எல்.பீரிஸ் கோரிக்கை

கொழும்பு, பெப். 24

நாடாளுமன்ற உறுப்பினர் சுமந்திரனைக் கொலை செய்வதற்கு முயற்சித்த குற்றச்சாட்டில் கைதுசெய்யப்பட்ட ஐந்து சந்தேகநபர்களுக்கு எதிராகப் பயங்கரவாதத் தடுப்பு சட்டத்தின் கீழ் வழக்கு தாக்கல் செய்யப்படவேண்டும்.

இவ்வாறு முன்னாள் அயலுறவுத்துறை அமைச்சர் ஜி.எல். பீரிஸ் கோரியுள்ளார்.

கொழும்பில் நடைபெற்ற வாராந்த ஊடக சந்திப்பில் கருத்துத் தெரிவிக்கையிலேயே அவர் இவ்வாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

இலங்கை புலனாய்வுப் பிரிவினரை வேட்டையாடுவதற்கே பயங்கரவாதத் தடுப்புச் சட்டம் பயன்படுத்தப்படுவதாகக் கூட்டு எதிர்க்கட்சி குற்றஞ்சாட்டியுள்ளது. எவ்வாறாயினும் பயங்கரவாத சந்தேகநபர்களுக்கு எதிராகப் பொதுச் சட்டத்தின் கீழ் நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளன.

நாடாளுமன்றஉறுப்பினர்சுமந்திரனைக் கொலை செய்வதற்கு முயற்சித்ததாகக் கூறப்பட்ட சந்தேகநபர்கள் பயங்கரவாதத் தடுப்புச் சட்டத்தின் கீழ் கைதுசெய்யப்படாத நிலையில், அவர்களை தொடர்ந்தும் தடுத்துவைத்து விசாரிப்பதில் இடையூறுகள் காணப்படுகின்றன.

கொலை செய்யும் சதித் திட்டத்தின் பின்னணியில் நான்கு நாடுகளில் புலம்பெயர்ந்து வாழும் விடுதலைப் புலிகள் தொடர்புபட்டுள்ளமை கண்டறியப்பட்டுள்ளன. இவர்களுக்குப் புலம்பெயர்ந்து வாழும் விடுதலைப் புலிகள் நிதி வழங்கியுள்ளமையும் தெரிய வந்துள்ளது.

பயங்கரவாதத் தடுப்புச் சட்டத்தைப் பயன்படுத்தி, எந்தவொரு தயக்கமும் இன்றி இராணுவப் புலனாய்வாளர்கள் கைது செய்யப்படுகின்றனர்.

இந்த நடவடிக்கை பாதுகாப்புப் படையினரின் மனோநிலையில் பாதிப்பை ஏற்படுத்தக்கூடும்.

பன்னாட்டு அரச சார்பற்ற நிறுவனங்களின் நிகழ்ச்சி நிரலுக்கு அமைய அமைக்கப்படும் காணாமல்போனோர் தொடர்பான அலுவலகம், இந்த நிலமைகளை மேலும் மோசமாக்கும் நிலையைத் தோற்றுவிக்கும். அரச சார்பற்ற நிறுவனங்களின் தலையீடு இறுதியில் தேசிய பாதுகாப்புக்கு அச்சுறுத்தலாகவே அமையும்- என்றார். (த-10)

# கூட்டாட்சியை உச்சரிப்பதற்கு பயப்படும் சம்பந்தன்

## கஜேந்திரகுமார் பொன்னம்பலம் சாடல் பகிரங்க விவாதத்துக்கும் அழைப்பு

யாழ்ப்பாணம், பெப். 24



சம்பந்தன் தன்னுடைய பேச்சில் கூட்டாட்சி என்ற சொல்லைப் பயன்படுத்தவில்லை. அந்தச் சொல்லை உச்சரிக்க முடியாத நிலையில் அவர் இருக்கின்றார் என்றும் குற்றம் சுமத்தியுள்ள தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் தலைவர் கஜேந்திரகுமார் பொன்னம்பலம், சம்பந்தனுக்கு முதுகெலும்பிருந்தால் எங்களுடன் பகிரங்க விவாதத்துக்கு வருமாறு சவால் விடுத்துள்ளார்.

யாழ்ப்பாணம் கந்தர்மடத்தில் அமைந்துள்ள தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் அலுவலகத்தில் நேற்று நடைபெற்ற பத்திரிகையாளர் சந்திப்பிலேயே அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைமை துரோகம் இழைக்கின்றது. அதனை 7 வருடமாகச் சொல்கின்றோம். அதில் மாற்றுக் கருத்து இல்லை. இதனை நிரூபிக்கும் வகையில் சம்பந்தனின் நாடாளுமன்றப் பேச்சு அமைந்துள்ளது.

போர்க்குற்றம் தொடர்பாக அரசைப் பொறுப்புக் கூற வைப்பத்திலிருந்த கூட்டமைப்பின் தலைமை பின்வாங்குகின்றது. கட்டமைக்கப்பட்ட ரீதியில் மனிதகுலத்துக்கு எதிராக மேற்கொள்ளப்பட்டதைத்தான் போர்க்குற்றம் என்கின்றோம். இது தனிநபர் குற்றங்கள் அல்ல. கூட்டாக அரசு தனது முடிவின் பிரகாரம் இராணுவ இயந்திரத்தைக் கொண்டு நடத்திய விடயம். இராணுவம் கூட்டாக - கட்டமைப்பு ரீதியாகச் செய்தது என்று சம்பந்தன் சொல்லவில்லை. அவர் இராணுவத்தின் தனிநபர்கள் செய்ததாகவும்தான் சுட்டிக்காட்டிப் பேசியிருக்கின்றார். தனிநபர் செய்த குற்றங்களாகக் கணிக்கப்படப் போகின்றது என்றால், போர்க்குற்றத்தைக் கைவிடும் நோக்குடன்தான் சம்பந்தன் சொல்லியிருக்கின்றார் என்ற பகிரங்கக் குற்றச்சாட்டை முன்வைக்கின்றோம்.

எங்களது பெயரைச் சொல்லாமல், தோற்றுப்போன தரப்பு, 15 ஆயிரம் வாக்குப் பெற்ற தரப்பு என்று குற்றச்சாட்டைச் சுமத்தியுள்ளார். தோற்றுப்போன தரப்பைப் பற்றி நாடாளுமன்றத்தில் ஏன் பேச வேண்டும். எங்கள் குற்றச்சாட்டுக்குப் பதில் சொல்லாமல் நழுவப் பார்க்கின்றார். நாங்கள் தீவிரவாதிகள் என்றும் சொல்லியுள்ளார். தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியினதும், தமிழ் மக்கள் பேரவையினதும் தீர்வுத் திட்டம் தீவிரவாதமாகச் சம்பந்தனுக்குத் தெரிகின்றது என்றால், அவர் ஒற்றையாட்சிக்குள் இணங்கியுள்ளார்.

யாழ்ப்பாணத்தில் நடந்த 'எழுக தமிழ்' இல் கலந்து கொண்டவர்கள் தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் ஆதரவாளர்கள்தான் என்று எந்தவெரு சந்தர்ப்பத்திலும் நாங்கள் சொல்லவில்லை. அதனை இலங்கைத் தமிழரசுக் கட்சியினர்தான் சொன்னார்கள். அவர்கள் செய்கின்ற செயற்பாடுகள் பிழை என்பதைச் சுட்டிக்காட்ட எழுக தமிழில் மக்கள் அணி திரண்டார்கள் என்பதற்கு மாற்றுக் கருத்து இருக்க முடியாது. எங்களைத் தோற்றுப்போன தரப்பு என்பதைச் சொல்லாமல் எங்களின் குற்றச்சாட்டுக்களுக்குப் பதில் சொல்லுங்கள். சம்பந்தனுக்கு முதுகெலும்பிருந்தால் எங்களுடன் பகிரங்க விவாதத்துக்கு வரட்டும் - என்றார். (த-5)

# செய்த பிழைக்காக மன்னிப்புக் கோரும் கஜேந்திரகுமார்

தமிழ் மக்களிடம் நாம் கடந்த காலத்தில் செய்த பிழைக்காக மன்னிப்புக் கோருகின்றோம் என்று, தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் தலைவர் கஜேந்திரகுமார் பொன்னம்பலம் தெரிவித்தார்.

தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் கட்சி அலுவலகத்தில் நேற்று நடத்திய பத்திரிகையாளர் சந்திப்பிலேயே மேற்கண்டவாறு அவர் குறிப்பிட்டார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்றக் குழுத் தலைவராக 2001 ஆம் ஆண்டு, ஜோசப் பரராஜசிங்கத்தைத் தமிழீழ விடுதலைப் புலிகள் நியமிக்க விரும்பினார்கள். ஆனால் நான், இரா. சம்பந்தனை நியமிக்கக் கோரினேன். அப்போது ரெலோ அமைப்பின் தலைவர் செல்வம் அடைக்கலநாதன், மாவை.சேனாதிராசாவை நியமிக்க முயற்சி செய்தார். தமிழீழ விடுதலைப் புலிகளை ஏகப்பிரதிநிதிகளாகஏற்றுக்கொண்டு இப்போது வழிக்குத் திரும்பியிருக்கும் சம்பந்தனை நாடாளுமன்றக் குழுத் தலைவராக நியமிக்க வேண்டும் என்று கோரினேன். அதற்கு அமைவாகஅவர்நியமிக்கப்பட்டார். தமிழீழ விடுதலைப் புலிகள் தாயகம் தேசியம் சுயநிர்ணயம் என்ற கோட்பாட்டில் இருந்தபோது சம்பந்தன் வெளிநாட்டுத் தூதரகங்களுக்கு அதிகாரப் பகிர்வுக்குத் தயார் என்று கடிதம் கொடுத்தார். இதனால் தமிழீழ விடுதலைப் புலிகள் நாடாளுமன்றக் குழுத் தலைவராக மீண்டும் ஜோசப் பரராஜசிங்கத்தை நியமிக்க முயன்றபோது நான்தான் இரண்டாவது தடவையாகவும் சம்பந்தனை நியமிக்கக் கோரினேன். அந்தச் சமயத்தில் கருணாவின் பிரிவும் நடந்திருந்தது. சம்பந்தனை நீக்கினால் அவருடன் சேர்ந்து செயற்படுவார் என்பதால் அதனை இப்போது பேசாமல் விடுங்கள் என்று கூறினேன். இரா.சம்பந்தனைப் புறமொதுக்கி ஜோசப் பரராஜசிங்கத்தை முன்னிலைப்படுத்த முற்பட்ட சமயத்தில்தான் ஜோசப் அரசால் கொல்லப்பட்டார். திருகோணமலையில் இரண்டாவது நாடாளுமன்ற உறுப்பினராக விக்னேஸ்வரனை நியமிக்க முற்பட்டபோது, விக்னேஸ்வரன் அரசால் கொல்லப்பட்டார். இதனை மக்கள் சரியான கோணத்தில் விளங்கிக் கொள்ளவேண்டும் என்றார். (த-5-101)

# தமிழ்த் தேசிய மக்கள் முன்னணி உறுப்பினர்களுக்கு உயிராபத்தாம்

யாழ்ப்பாணம், பெப். 24

தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் உறுப்பினர்களுக்கு உயிராபத்து ஏற்பட்டுள்ளது. சம்பந்தனின் பேச்சாலே இந்த உயிராபத்து உருவாகியுள்ளதாகத் தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் தலைவர் கஜேந்திரகுமார் பொன்னம்பலம் குற்றம் சுமத்தியுள்ளார்.

அவரது கட்சி அலுவலகத்தில் நேற்று நடத்திய பத்திரிகையாளர் சந்திப்பிலேயே இந்தக் குற்றச்சாட்டை அவர் முன்வைத்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

சம்பந்தனின் நேற்றைய பேச்சைத் தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் உறுப்பினர்களுக்கு உயிராபத்தை ஏற்படுத்தும் பேச்சாகத்தான் நாங்கள் பார்க்கின்றோம். திட்டமிட்ட வகையில் சிங்கள இனவாதத்தையும், பேரினவாதத்தையும் பொய்களைக் கூறி முற்று முழுதாகத் தமிழ்த் தேசிய மக்கள் முன்னணிக்கு எதிராகத் திருப்பி, எங்களது உயிருக்கு ஆபத்து ஏற்படுத்துகின்ற கோணத்தில் அத்திபாரம் போடும் பேச்சாகத்தான் பார்க்கின்றோம். எங்களுக்கு உயிராபத்து ஏற்பட்டால் அரசு பொறுப்புக்கூறத்தான் வேண்டும். சம்பந்தனும், சுமந்திரனும் அவருடன் சேர்ந்துள்ள கும்பலும் பொறுப்புக் கூறவேண்டும்.

இதேவேளை, கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் சுமந்திரன் மீதான கொலை முயற்சி சம்பவத்துடன் எங்களைத் தொடர்புபடுத்தும் விதத்தில் சம்பந்தன் பேசியுள்ளார். இதனை வன்மையாகக் கண்டிக்கின்றோம். தமிழ் மக்களுக்குச் சுமந்திரனைக் கொலை செய்ய வேண்டிய தேவை இல்லை. மக்களே அவர்களை நிராகரிப்பார்கள். நாங்கள் சுமந்திரனைத் துரோகி என்று கூறியதால்தான் இந்த கொலை மிரட்டல் நடப்பதாகச் சொன்ன சம்பந்தனுக்கு, அவரது கட்சியைச் சேர்ந்த முதலமைச்சர் விக்னேஸ்வரனும், நாடாளுமன்ற உறுப்பினர் சிறிதரனும், சுமந்திரன் மீதான கொலை முயற்சி நாடகம் என்று சொன்னது தெரியவில்லையா? - என்றார். (த-5)

## தேசிய ஒருமைப்பாடே கூட்டமைப்பின் விருப்பு

### தென் பகுதி மாணவர்கள் மத்தியில் வடக்கு அவைத் தலைவர் தெரிவிப்பு



யாழ்ப்பாணம் பெப் 24

நாங்கள் தேசிய ஒருமைப்பாட்டை விரும்புகின்றோம். அதுவே தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நிலைப்பாடு என வடக்கு மாகாண சபையின் அவைத் தலைவர் சி.வி.கே. சிவஞானம் தெரிவித்தார்.

தேசிய ஒருமைப்பாட்டுக்கும் நல்லிணக்கத்துக்குமான அலுவலகமும் வடக்கு மாகாணக் கல்வி அமைச்சும் இணைந்து ஏற்பாடு செய்த 'நாடு முழுவதுக்குமான சகோதர பாடசாலை' என்னும் பெயரிலான நிகழ்ச்சித் திட்டத்தின் இறுதி நாள் நிகழ்வு வட்டுக்கோட்டையில் நேற்று இடம்பெற்றது.

இந்த நிகழ்வில் கலந்துகொண்டு உரையாற்றும்போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

மேல் மாகாண மாணவர்களில் அநேகமானோர் கடந்த காலத்தில் இடம்பெற்ற உள்நாட்டுப் போர் தொடர்பாக அறிந்திருப்பீர்கள். ஆனால் அது தொடர்பான உண்மைத்தமையை எவ்வளவு தூரம் அறிந்து வைத்திருக்கின்றீர்கள் என்று தெரியவில்லை.

இலங்கையில் இடம்பெற்ற உள்நாட்டுப் போர் சிங்கள மக்களுக்கும் தமிழ் மக்களுக்கும் இடையான போரல்ல. அதனை அனைவரும் விளங்கிக் கொள்ளவேண்டும். அது அரசியல்வாதிகளின் பாகுபாடுகள் காரணமாக ஏற்பட்ட முரண்பாடுகளே தவிர இனங்களுக்கு இடையில் நடந்த போர் அல்ல. எங்கள் இனத்தின் சமய, மதத் தனித்துவத்தைப் பேணுவதுடன் மற்றைய மத, இனத் தனித்துவத்தையும் பேணி இந்த நாட்டில் ஓர் ஆட்சி முறையில் வாழ நாம் விரும்புகின்றோம். நாங்கள் சிங்கள தேசத்துக்கு விரோதமானவர்கள் அல்லர். வடக்கு மாகாண சபையில் இரண்டு சிங்கள உறுப்பினர்கள் உள்ளனர். அவர்கள் தங்கள் மொழியில் பேசுவதற்கும் கருத்துக்களைத் தெரிவிக்கவும் தேவையான அனைத்து வசதிகளும் செய்து கொடுக்கப்பட்டுள்ளன– என்றார்.

இங்கு உரையாற்றிய நாடாளுமன்ற உறுப்பினர் இ.அங்கஜன் தெரிவிக்கையில்,

முன்னைய ஆட்சிக் காலத்திலும் தற்போதைய ஆட்சிக் காலத்திலும் நல்லிணக்கத்தைக் குழப்பும் நடவடிக்கையில் அரசியல்வாதிகள் சிலர் ஈடுபட்டுக் கொண்டிருக்கின்றனர். தென்பகுதியில் உள்ள அரசியல்வாதிகள் மட்டுமல்லாது வடக்கிலும் சில அரசியல்வாதிகள் நல்லிணக்கத்தைக் குழப்பும் வகையில் செயற்படுகின்றனர்–என்றார்.

இதில் பங்கேற்ற மாணவ மாணவிகள் தெரிவிக்கையில்,

வடக்கில் பூக்கின்ற பூக்களும் தெற்கில் பூக்கின்ற பூக்களும் ஒரேமாதியாகத்தான் பூக்கின்றன. இப்படி அந்த பூக்களே ஒரே மாதிரியாக இருக்கும்போது மக்களாகிய நாங்கள் மட்டும் ஏன் பிளவுபட்டு இருக்க வேண்டும். நாங்கள் அனைவரும் ஒற்றுமையாகவும் சந்தோசமாகவும் வாழவேண்டும். இந்த நாட்டில் எதிர்காலத்தில் இன ஒற்றுமையும் நல்லிணக்கமும் ஏற்படும் என்ற நம்பிக்கை எங்களுக்கு ஏற்பட்டுள்ளது–என்றனர். (த-8)

# காணிகளை விடுவிக்க ஒரு வாரம் அவகாசம் கோருகிறது ராணுவம்

### போராட்டத்தை நிறுத்துவதில்லை என பரவிப்பாஞ்சான் மக்கள் விடாப்பிடி



கிளிநொச்சி, பெப்.24

பரவிப்பாஞ்சானில் விடுதலைப் புலிகளால் நிர்மாணிக்கப்பட்ட கட்டடங்கள் உள்ள காணிகளை உடனடியாக விடுவிக்கமுடியாது என்று தெரிவித்த இராணுவத்தினர், ஏனைய காணிகளை விடுவிப்பதற்கு ஒரு வார கால அவகாசம் கோரியுள்ளனர்.

ஆயினும் காணிகள் எம்மிடம் ஒப்படைக்கப்படும் வரை போராட்டத்தை நிறுத்தமாட்டோம் எனத் தமது கொள்கையில் உறுதியாக உள்ளனர் மக்கள்.

கிளிநொச்சி கரைச்சிப் பிரதேச செயலர் பிரிவுக்குட்பட்ட பரவிப்பாஞ்சான் பகுதியில் படையினர் வசமுள்ள 27 குடும்பங்களுக்குச் சொந்தமான 9.5 ஏக்கர் காணிகளை விடுவிக்கக் கோரி மக்கள் நேற்று நான்காவது நாளாகவும் போராட்டத்தில் ஈடுபட்டனர்.

ஏற்கனவே பல தடவைகள் போராட்டம் நடத்தி வழங்கப்பட்ட வாக்குறுதிகள் பொய்த்துப் போன நிலையில் மக்கள் மீண்டும் போராட்டத்தில் ஈடுபட்டுள்ளனர்.

நேற்று நண்பகல் போராட்டம் இடம்பெறும் பகுதிக்கு வருகை தந்த கரைச்சிப் பிரதேச செயலாளர், காணி விடுவிப்புத் தொடர்பான கலந்துரையாடல் ஒன்று இடம்பெறவுள்ளதாகத் தெரிவித்து போராட்டத்தில் ஈடுபட்டுள்ள மக்களில் மூவரை மாவட்ட செயலகத்துக்கு அழைத்துச் சென்றார்.

இராணுவத்தினர் சார்பாகக் கலந்துரையாடலில் பங்கேற்ற பிரிகேடியர் தர அதிகாரி, காணிகளை விடுவிக்க இணக்கம் தெரிவித்ததோடு ஒரு வார கால அவகாசம் கோரினார். அத்துடன் விடுதலைப் புலிகளால் அமைக்கப்பட்ட கட்டடங்கள் உள்ள காணிகளை உடனடியாக விடுவிக்க முடியாது என்றும், அவை இராணுவத்தினருக்குத் தேவை எனவும் திட்டவட்டமாகக் கூறினார்.

கலந்துரையாடலை அடுத்துக் குறித்த இராணு அதிகாரி, பிரதேச செயலர், காணி உத்தியோகத்தர் ஆகியோர் போராட்டம் இடம்பெறும் இடத்துக்குச் சென்றனர். பரவிப்பாஞ்சான் மக்கள் சார்பில் கலந்துரையாடலில் பங்கேற்ற மூவர், பிரதேச செயலர், காணி உத்தியோகத்தர் ஆகியோரை இராணுவ அதிகாரி படைமுகாம் அமைந்துள்ள காணிக்குள் அழைத்து சென்றார். அங்கு மக்கள் தமது காணிகளை அடையாளம் காட்டினர்.

இதனையடுத்து மக்களிடம் வந்த இராணுவ அதிகாரி, ஒரு வாரத்துக்குள் காணிகள் விடுவிக்கப்படும். விடுதலைப் புலிகளின் கட்டடங்கள் அமைக்கப்பட்ட காணிகளை உடனடியாக விடுவிக்க முடியாது. அவை இராணுவத்தினருக்குத் தேவை எனத் தெரிவித்தார்.

இதனை ஏற்றுக்கொள்ளாத மக்கள் 'இது போன்ற வாக்குறுதிகளால் தான் முதலிரண்டு போராட்டங்களை நிறுத்தினோம். இந்த முறை அவ்வாறு நிறுத்தமாட்டோம். காணிகளை ஒப்படைக்கும்வரை தொடர்ந்தும் இந்த இடத்திலேயே போராடுவோம்–என்றனர். (த-21,6)

## பன்னாட்டுச் சமூகத்தின் தேவையை நிறைவேற்ற ஒருபோதும் இடமில்லை

### மகிந்த அணி அரசுக்கு எச்சரிக்கை



கொழும்பு, பெப். 24

ஆயிரக்கணக்கான உயிர்களைப் பலிகொடுத்து நாட்டில் ஏற்படுத்தப்பட்டுள்ள நிலையான சமாதானத்தை அரசியல் வாக்குறுதிகளுக்காகச் சீர்குலைக்க அரசு முற்படுவதாகக் குற்றம்சாட்டிய மகிந்த அணி, பன்னாட்டுச் சமூகத்தினதும், புலம்பெயர் அமைப்புக்களினதும் தேவையை நிறைவேற்ற ஒருபோதும் இடமளிக்க மாட்டோம் எனவும் எச்சரித்தது.

நாடாளுமன்றத்தில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினால் நேற்றுமுன்தினம் புதன்கிழமை கொண்டுவரப்பட்ட ஒத்திவைப்புவேளை பிரேரணை மீதான விவாதத்தில் கலந்துகொண்ட மகிந்த அணி நாடாளுமன்ற உறுப்பினர் விமல் வீரவன்ச மேலும் தெரிவித்ததாவது:

2015 ஆம் ஆண்டு ஓகஸ்ட் மாதம் ஜெனிவாவில் அமெரிக்கா கொண்டுவந்த யோசனையை நிறைவேற்றுவதாக இலங்கை அரசு கை உயர்த்தியது. இந்த யோசனைகளை அரசு நிறைவேற்றியுள்ளதா என்றே எதிர்க்கட்சித் தலைவர் கேள்வி எழுப்புகின்றார்.

வடக்கு–கிழக்குத் தமிழர்களுக்கு ஓர் இலக்கு உள்ளது. அந்த இலக்கை நோக்கிய பயணத்தையே முன்னெடுக்கின்றனர். அதற்கான கோரிக்கைகளையே தற்போது முன்வைக்கின்றனர். டட்லி - செல்வா ஒப்பந்தத்துக்கு முன்னரே இந்தக் கோரிக்கைகள் முன்வைக்கப்பட்டுள்ளன.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்புக்கு மனித உரிமைகள் தொடர்பில் விசாரணை செய்ய பன்னாட்டு நீதிபதிகள் நியமிக்க வேண்டும், பயங்கரவாதத் தடைச் சட்டத்தை நீக்கி அதன் ஊடாகத் தண்டனை பெறும் தமிழீழ விடுதலைப் புலி உறுப்பினர்களை விடுவிக்க வேண்டும், தனித்து ஒற்றையாற்சியிலிருந்து விடுபட்டு வாழவே அவர்கள் கோருகின்றனர்.

இந்தக் கோரிக்கைகளை நிறைவேற்றிக் கொள்ளவே கடந்த அரச தலைவர் தேர்தலில் வடக்கு - கிழக்கு மக்கள் மைத்திரிபால சிறிசேனவுக்கு ஆதரவளித்தனர். அரசு மக்கள் கருத்துக்கணிப்பு செய்ய வேண்டிய தேவை ஏற்படும் எந்த அரசமைப்புத் திருத்தத்தையும் மேற்கொள்ளாது என்று வாக்குறுதி வழங்கினாலும் அதனைப் புறக்கணித்து செயலாற்ற முற்படுகின்றது.

அரச தலைவரின் அதிகாரங்களை குறைத்து பிராந்திய ஆட்சியைப் பலப்படுத்த முற்படுகின்றனர். இது நாட்டின் நிலையான சமாதானத்தை சீர்குலைக்கும். பன்னாட்டுச் சமூகத்தினதும் புலம்பெயர் அமைப்புக்களினதும் தேவையை நிறைவேற்ற இடமளிக்க முடியாது–என்றார். (த-5)

# ஈழத் தமிழரின் விடயத்தில் அக்கறையற்றுள்ள இந்தியா

### வெளியுறவுச் செயலரின் வருகை அதனை வெளிப்படுத்தியது என்கிறார் ஜெஹான் பெரேரா

கொழும்பு, பெப். 24

இந்திய வெளியுறவுத்துறைச் செயலரின் அண்மைய இலங்கைப் பயணமானது, தமிழர் விவகாரத்தில் இலங்கை மீது அழுத்தம் கொடுப்பதற்காக அன்றி, இந்தியாவினுடைய தேசிய நலன்களை முதன்மைப்படுத்துவதாகவே அமைந்திருந்ததை அவதானிக்க கூடியதாக இருந்தது.

இவ்வாறு கொழும்பைத் தளமாகக் கொண்டியங்கும் தேசிய சமாதானப் பேரவையின் நிறைவேற்றுப் பணிப்பாளர் ஜெஹான் பெரேரா தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

இலங்கைத் தமிழரின் பிரச்சினையைவிடத் தனது நாட்டின் தேசிய பாதுகாப்பு தொடர்பாகவே இந்தியா அதிக கவனம் செலுத்துகின்றது. சீனாவுடன் இலங்கை செய்துகொள்ள உத்தேசிக்கப்பட்டுள்ள அம்பாந்தோட்டை முதலீட்டு வலய ஒப்பந்தம் குறித்தும், திருகோணமலைத் துறைமுகத்தில் முன்னெடுக்க உத்தேசிக்கப்பட்டுள்ள இந்தியப் பொருளாதார நடவடிக்கைகளில் இலங்கை ஆர்வம் காட்டாமல் இருப்பது தொடர்பிலும் இந்தியாவின் கருத்துக்களையும் எதிர்பார்ப்புக்களையும் தெரிவிப்பதே வெளியுறவுச் செயலரின் பிரதான நோக்கமாக இருந்திருக்கும்.

காலம் காலமாக நீடித்து வரும் இலங்கை–இந்திய மீனவர் பிரச்சினையைத் தீர்ப்பது புதுடில்லிக்கு எளிதான விடயமென்றாலும் மோடி அரசு அதனைச் செய்யவில்லை.

வடக்கு–கிழக்கு மக்கள் இயல்பு வாழ்க்கைக்குத் திரும்புவதற்கு மேலதிக உதவிகளைச் செய்ய வேண்டுமெனத் தனிப்பட்ட ரீதியாகவும் வெளிப்படையாகவும் இந்தியாவிடம் இலங்கை கோரிக்கை விடுத்துள்ளது.

இலங்கையின் நிலைமாறுகால நீதிப்பொறிமுறை தொடர்பில் இன்று பல்வேறு கருத்துக்கள் நிலவி வருகின்ற நிலையில், இலங்கை அரச தலைவர் மைத்திரிபால, பிரதம அமைச்சர் ரணில் ஆகியோர் தலைமையிலான தேசிய அரசானது பொறுப்புக்கூறல் செயற்பாட்டிலிருந்து தம்மை விடுவித்துக்கொள்ள அமெரிக்காவின் புதிய அரச தலைவர் டொனால்ட் ட்ரம்ப் மீது நம்பிக்கை வைத்துக் காத்திருக்கின்றது.

இவ்வாறான விடயங்களில் இந்தியத் தலைமை அமைச்சர் நரேந்திர மோடி அமைதிகாத்து வருகின்றார். தற்போது தமிழர் விவகாரத்தில் பல்வேறு பிரச்சினைகள் மேலெழுந்துள்ள நிலையில், தமிழ் மக்களின் பிரச்சினைகளினூடாக இலங்கையைக் கையாள்வதற்கு இது நல்ல தருணமாக இருக்கின்றபோதும் இந்தியா ஆர்வம் இன்றி உள்ளது–என்றார். (த-10)



# அர்த்தபூர்வமாக அமையட்டும் சிவராத்திரி

*ரணில் பிரார்த்தனை*

யாழ்ப்பாணம், பெப். 24
சிவபெருமானுக்கு மிகவும் விருப்பமான இரவாகச் சிவராத்திரி கருதப்படுகிறது. இந்தத் தினமானது உலக வாழ் அனைத்து இந்து மக்களுக்கும் அர்த்தபூர்வமான மகா சிவராத்திரி தினமாக அமையப் பிரார்த்திக்கிறேன் என தலைமை அமைச்சர் ரணில் விக்கிரமசிங்க தெரிவித்தார்.
அவர் தெரிவித்ததாவது:
மகாசிவராத்திரி தினத்தைக் குடும்பத்தவர்கள், உறவினர்கள், நண்பர்கள், அயலவர்கள் என அனைவரும் ஒன்றிணைந்து, ஒரே மனதுடன் மகிழ்ச்சியாகக் கொண்டாடுவது இந்து பக்தர்களின் வழக்கமாகும்.
இந்தத் தினத்தில் உபவாசம், தியானம் மற்றும் சிவபெருமானை வணங்குதல் என்பவற்றுக்கு முக்கியத்துவம் வழங்கப்படுவதுடன், சிவராத்திரிமுழுவதும் விழித்திருந்து புண்ணிய கருமங்களில் ஈடுபட்டு, அர்த்தபூர்வமாக அதனைக் கழிப்பதன் ஊடாக ஆன்மீக விடுதலை கிடைக்கும் என்பது இந்து பக்தர்களின் நம்பிக்கையாகும்.
ஆன்மீக விடுதலையை எதிர்பார்க்கும் மகாசிவராத்திரி தினமானது, இந்து பக்தர்களைப் போன்றே அனைத்து மக்களுக்கும் அர்த்தபூர்வமான வாழ்வுக்கு வழிகாட்டக் கூடியதாகும் - என்றார். (து-10)

# 69,992 ஏக்கர் காணிகள் வடக்கு மாகாணத்தில் படைகளால் அபகரிப்பு

## சபையில் தகவல் வெளியிட்டார் சிவசக்தி ஆனந்தன் எம்.பி.

கொழும்பு, பெப். 24
வடக்கு மாகாணத்தில் 69 ஆயிரத்து 992 ஏக்கர் காணிகள் படையினரால் ஆக்கிரமிக்கப்பட்டுள்ளன என்று தெரிவித்த தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் வன்னி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் சிவசக்தி ஆனந்தன், வடக்கில் மக்கள் மீளக் குடியமர்வதற்குப் படையினரே தடை எனவும் குற்றம்சாட்டினார்.
நாடாளுமன்றத்தில் நேற்று வியாழக்கிழமை நடைபெற்ற காணி எடுத்தல் ஒழுக்க விதிகள் தொடர்பான விவாதத்தில் கலந்துகொண்டு உரையாற்றும்போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.
அவர் மேலும் தெரிவித்ததாவது:
வடக்கில் ஒன்றரை லட்சம் படையினர் குவிக்கப்பட்டுள்ள நிலையில் பொதுமக்களுக்குச் சொந்தமான 69 ஆயிரத்து 992 ஏக்கர் காணிகள் இவர்களின் தேவைகளுக்காக ஆக்கிரமிக்கப்பட்டுள்ளன.
முல்லைத்தீவு மாவட்டத்தில் 19 ஆயிரத்து 790 ஏக்கரும், கிளிநொச்சி மாவட்டத்தில் 12 ஆயிரத்து 840 ஏக்கரும், வவுனியா மாவட்டத்தில் 23 ஆயிரத்து 778 ஏக்கரும், யாழ். மாவட்டத்தில் 6 ஆயிரத்து 270 ஏக்கரும், மன்னார் மாவட்டத்தில் 7 ஆயிரத்து 314 ஏக்கரும் என்ற வகையிலேயே வடக்கில் 69 ஆயிரத்து 992 ஏக்கர் காணிகள் படையினரால் ஆக்கிரமிக்கப்பட்டுள்ளன.
படையினர் வசமுள்ள தமிழ் மக்களின் காணிகள் விடுவிக்கப்படுவதாக அரசு கூறினாலும் இதுவரை 2 ஆயிரத்து 500 ஏக்கர் காணிகள் மட்டுமே விடுவிக்கப்பட்டுள்ளன. படையினரால் காணி அபகரிப்புக்கு புறம்பாகக் கிளிநொச்சியில் அமைந்துள்ள நில அளவைத் திணைக்களமும் மக்களின் காணிகளைச் சுவீகரித்து இராணுவத்துக்கு வழங்க நடவடிக்கை எடுக்கின்றது.
படையினர் ஒரு புறம் காணிகளை ஆக்கிரமிக்கின்றார்கள் என்றால் மறுபுறம் தொல்பொருள் திணைக்களத்தினரும் வன இலாகாவினரும் காணிகளைச் சுவீகரிக்கின்றனர்.
திருக்கேதீஸ்வரம் ஆலயத்துக்கு அண்மையில் தனியார் ஒருவருக்குச் சொந்தமான பத்து ஏக்கர் காணி தொல்பொருள் திணைக்களத்தால் சுவீகரிக்கப்பட்டது. தற்போது அந்தப் பத்து ஏக்கர் காணியில் 3 ஏக்கர் காணி பௌத்த விகாரை அமைப்பதற்காகத் தொல்பொருள் திணைக்களத்தால் வழங்கப்பட்டுள்ளது - என்றார். (து-5)

# வடக்கில் பாலியல் துன்புறுத்தல்களை ராணுவம் புரிவதாக கூறவில்லை சந்திரிகா

## *நல்லிணக்கத்துக்கான அலுவலகம் மறுப்பு*

கொழும்பு, பெப். 24
வடக்கு மாகாணத்தில் நடைபெறும் பாலியல் துன்புறுத்தல்களுக்கு இராணுவமே காரணம் என்று முன்னாள் அரச தலைவர் சந்திரிகா குமாரதுங்க ஒருபோதும் தெரிவிக்கவில்லை.
இவ்வாறு தேசிய ஐக்கியம் மற்றும் நல்லிணக்கத்துக்கான அலுவலகம் தெரிவித்துள்ளது.
இது தொடர்பில் அந்த அலுவலகத்தால் வெளியிடப்பட்டுள்ள அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டிருப்பதாவது:
முன்னாள் அரச தலைவரும், முப்படைகளின் முன்னாள் தலைவியுமான சந்திரிகா தெரிவித்த கருத்துக்கள் தொடர்பில் மூத்த இராணுவ அதிகாரி முழுமையாக விளங்கிக் கொள்ளாதது குறித்து ஆச்சரியம் அடைகின்றோம். சந்திரிகாவின் கருத்துக் குறித்து எங்களிடம் கேட்டறிந்த பின்னர் இராணுவத் தலைமையகம் அறிக்கையை வெளியிட்டிருந்தால் சிறப்பாக இருந்திருக்கும்.
அன்றைய பத்திரிகையாளர் சந்திப்பில், தனது பதவிக் காலத்தில் எடுத்த ஒழுக்காற்று நடவடிக்கைகள் குறித்தே முன்னாள் அரச தலைவர் சந்திரிகா கருத்து வெளியிட்டிருந்தார். பொது மக்களுக்கு எதிரான வன்முறைகள் தொடர்பில் சிறிதும் சகித்துக் கொள்ளாத நிலைப்பாட்டைப் பின்பற்றிய அரச தலைவர் சந்திரிகா, படைத்தரப்பு முழுவதற்கும் அபகீர்த்தி ஏற்படுவதைத் தவிர்க்கவே இவ்வாறான கருத்துக்களைத் தெரிவித்திருந்தார். தமிழ் மக்கள் போர்க் குற்றம் தொடர்பான நீதிமன்றத்தை முக்கியமாகக் கருதவில்லை. புலம்பெயர்ந்த தமிழர்கள் சிலரே அவ்வாறு கருதுவதாகவும் சந்திரிகா குறிப்பிட்டிருந்தார் - என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. (து-5)

# ஆன்மீகத்தின் ஊடாக மனதை பக்குவப்படுத்தும் சிவராத்திரி

## *அரச தலைவர் மைத்திரி தெரிவிப்பு*

யாழ்ப்பாணம், பெப். 24
இலங்கை வாழ் இந்துக்கள் போன்றே உலகவாழ் இந்துக்களும் ஆன்மீகத்தின் ஊடாக தமது மனதைப் பக்குபவப்படுத்தவதற்காகவே மகாசிவராத்திரி விரதம் கடைப்பிடிக்கப்படுகின்றது.
இந்தப் புனிதமான சிவராத்திரி நாளில் மன இருளகன்று ஒளி பிறக்க வேண்டும் எனவும், மக்களின் பிரார்த்தனைகள் நிறைவேறிப் பண்புமிக்க நாடு உருவாக வேண்டுமெனவும் பிரார்த்திக்கின்றேன் என அரச தலைவர் மைத்திரிபால சிறிசேன தெரிவித்தார்.
அவர் மேலும் தெரிவித்ததாவது:
நன்நெறி கொண்ட மக்களாக அனைவரும் வாழவேண்டும் என்பதையே அனைத்துச் சமயங்களும் போதிக்கின்றன. அந்தச் சமய தத்துவங்களையும், பண்புகளையும் நினைவூட்டுவதற்காகச் சிறப்பு பண்டிகைகள் மற்றும் விரதங்கள் அனுட்டிக்கப்படுகின்றன.
அந்த வகையில் மனதிலுள்ள இருளான அகந்தை, ஆணவத்தை அழித்து அமைதியையும், அன்பையும் உருவாக்கும் இலக்குடனான பல்வேறு பாரம்பரிய சமய நிகழ்வுகள் தொடர்ந்தும் இடம்பெறுவது, இன்றைய நவீன தொழில்நுட்ப உலகில் மனிதர்கள் மனிதாபிமானத்துடன் வாழ்வதற்கு மிகவும் இன்றியமையாதவையாக அமைகின்றன.
அதிவேக பொருளாதாரப் போட்டிகளுக்கு மத்தியில் மன அழுத்தத்துடன் வாழ்பவர்களுக்கு மத வழிபாடுகள் ஓர் ஆற்றுப்படுத்தல் பணியை மேற்கொள்கின்றன. ஆன்மீகச் செயற்பாடுகள் சிறப்பான சமூகத்தை உருவாக்குவதற்கு உந்துசக்தியாகவே அமையும் - என்றார். (து-10)

# விமல்ராஜ் மீது சூடு; சபையில் கண்டனம்

## *உடனடி விசாரணைக்கும் கூட்டமைப்பு கோரிக்கை*

கொழும்பு, பெப்.24
மட்டக்களப்பில் காணி சீர்திருத்த ஆணைக்குழுவின் பிரதிப் பணிப்பாளர் நேசகுமார் விமல்ராஜ் மீது துப்பாக்கிச்சூடு மேற்கொள்ளப்பட்டுள்ள சம்பவத்துக்கு நாடாளுமன்றத்தில் நேற்று ஆளும், எதிர்க் கட்சி உறுப்பினர்கள் கடும் கண்டனம் வெளியிட்டனர். இந்தச்சம்பவம்தொடர்பில் உடனடி நடவடிக்கை மேற்கொள்ளப்படவேண்டும் என்று காணி அமைச்சரிடமும், சபாநாயகரிடமும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு நாடாளு மன்ற உறுப்பினர்கள் கோரிக்கை விடுத்தனர்.
'சட்டம் உரிய வகையில் செயற்படாததன் காரணமாகவே இந்தச் சம்பவம் இடம்பெற்றுள்ளது' என்று காணி அமைச்சர் ஜோன் அமரதுங்க பதிலளித்துக் கூறினார்.
நாடாளுமன்றம் நேற்று முற்பகல் சபாநாயகர் கரு ஜயசூரிய தலைமையில் கூடியது. சபாநாயகர் அறிவிப்பு, பொது மனுத்தாக்கல், வாய்மூல விடைக்கான கேள்விச்சுற்று ஆகியன முடிவடைந்த பின்னர் காணி எடுத்தல் சட்டத்தின் கீழான ஒழுங்கு விதிகளை அங் கீகரிப்பது தொடர்பான விவாதம் ஆரம்பமானது.
இந்த விவாதத்தில் உரையாற்றிய தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் மட்டக்களப்பு மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர்களான சீ.யோகேஸ்வரன், ஞா.சிறிநேசன், எஸ்.வியாழேந்திரன் ஆகியோர் மேற்படி சம்பவத்தைக் கடுமையாகக் கண்டித்தனர். பிரதி அமைச்சர் அமீர் அலியும் கண்டனம் வெளியிட்டார்.
'அரசுக்குச் சொந்தமான காணியொன்றில் மட்டக்களப்பில் மக்கள் சிலர் குடியேறியுள்ளனர். இதற்கு அனுமதிக்க முடியாது. இதற்கு எதிராகக் குறித்த அதிகாரி நடவடிக்கை எடுத்தார். பொலிஸில் முறைப்பாடு செய்தார். நீதிமன்றத்திலிருந்து நீதியான தீர்ப்பொன்று வரவில்லை. சட்டம் உரிய வகையில் செயற்பட்டிருந்தால் இந்தச் சம்பவம் இடம்பெற்றிருக் காது' என்று காணி அமைச்சர் தெரிவித்தார். (து-5)

# கிளிநொச்சி கல்வி வலயத்துக்கு பதில் பணிப்பாளர் நியமனம்

தென்மராட்சி, பெப்.24
தென்மராட்சி வலயக் கல்விப் பணிப்பாளர் சு.கிருஸ்ணகுமாரை கிளிநொச்சி கல்வி வலயப் பணிப்பாளரின் கடமைகளையும் மேலதிகமாகப் பொறுப்பேற்குமாறு வடக்கு மாகாணக் கல்வி அமைச்சின் செயலாளர் இ.இரவீந்திரன் நேற்று அறிவித்தார்.
கிளிநொச்சி வலயக் கல்விப் பணிப்பாளர் க.முருவேல் நேற்று முன்தினம் புதன்கிழமை தொடக்கம் சேவையிலிருந்து ஓய்வெடுத்தமையை அடுத்து புதிய வலயக் கல்விப் பணிப்பாளரை நியமிக்க வேண்டும். அது வரை கிளிநொச்சி வலயக் கல்விப் பணிப்பாளரின் கடமைகளை மேலதிகமாகப் பொறுப்பேற்குமாறு தென்மராட்சி வலயக் கல்விப் பணிப்பாளருக்கு மின்னஞ்சல் ஊடாக அறிவிக்கப்பட்டது.
இதனையடுத்து கிளிநொச்சி கல்வி வலயத்துக்கு நேற்று சென்று மேலதிக கடமைகளைப் கல்விப் பணிப்பாளர் சு.கிருஸ்ணகுமார் பொறுப்பேற்றார் என்று தெரிவிக்கப்பட்டது. (வ-9)

# தகவல் அறியும் படிவத்தை ஏற்க மறுத்தார் அலுவலர்

யாழ்ப்பாணம், பெப். 24
தகவல் அறியும் விண்ணப்பப் படிவத்தை ஏற்க மாட்டேன் என்று வடக்கு மாகாணப் பேரவைச் செயலகத்தின் தகவல் வழங்கும் அலுவலராக நியமிக்கப்பட்டவர் திருப்பி அனுப்பிய சம்பவம் நேற்று நடைபெற்றது. தகவல் வழங்கும் அலுவலர்களுக்கான பயிற்சிப் பட்டறைக்குச் செல்லவில்லை என்றும் அதனால் இதனைப் பெற்றுக் கொள்ளமாட்டேன் என்று அவர் குறிப்பிட்டார்.
தகவல் அறியும் சட்டம் கடந்த 3 ஆம் திகதி தொடக்கம் நடைமுறைக்கு வந்துள்ளது. வடக்கு மாகாணத்தின் அமைச்சுக்கள், பேரவைச் செயலகம், திணைக்களம் என்பவற்றுக்குத் தகவல் அறியும் அலுவலர்கள் நியமிக்கப்பட்டுள்ளனர்.
வடக்கு மாகாணத்தில் முதலமைச்சர் அமைச்சு மற்றும் கல்வி அமைச்சு என்பவற்றுக்கு மாத்திரமே இதுவரை ஒவ்வொரு விண்ணப்பப் படிவங்கள்கிடைத்துள்ளன. ஏனைய அமைச்சுக்களிலும் தகவல் அறியும் விண்ணப்பப் படிவத்தை ஏற்பதற்கான ஒழுங்குகள் மேற்கொள்ளப்பட்டுள்ளதுடன், தகவல் வழங்கும் அலுவலரும் செயற்படத் தொடங்கியுள்ளனர்.
வடக்கு மாகாணப் பேரவைச் செயலகத்தில் நியமிக்கப்பட்டுள்ள தகவல் வழங்கும் அலுவலர், கடந்த 21 ஆம் திகதி வடக்கு மாகாண சபையின் கூட்டம் நடைபெற்றதால் அன்றைய தினம், தகவல் வழங்கும் அலுவலர்களுக்கு நடத்தப்பட்ட பயிற்சிப் பட்டறையில் பங்கேற்கவில்லை என்றும், இதனால் தகவல் அறியும் விண்ணப்பப் படிவத்தை ஏற்கமாட்டேன் என்றும் திருப்பி வழங்கியுள்ளார்.
இது தொடர்பான பயிற்சிப் பட்டறை கிளிநொச்சியில் நடைபெறும்போது அதில் கலந்து கொண்ட பின்னரே இதனை ஏற்றுக் கொள்ள முடியும் என்றும் பதிலளித்துள்ளார்.
(து-5-101)

# மண் மீட்புப் போராட்டம் நடத்தும் மக்களுக்காக சிவ நாமத்தை ஓதுவோம்

## வாசுதேவக்குருக்கள் வேண்டுதல்

யாழ்ப்பாணம், பெப். 24

பாரம்பரியமாக வாழ்ந்த தமக்குச் சொந்தமான பிரதேசத்தில் மீண்டும் வாழ்வதற்காக அறப்போரில் ஈடுபட்டுள்ள சகோதர மக்களுக்காக இன்றைய சிவராத்திரி புண்ணிய தினத்தில் சிவ நாமத்தினை அனைவரும் ஒன்று சேர்ந்து சொல்லுவோம். நாம் ஒவ்வொருத்தரும் சொல்லும் சிவ நாமங்கள் அரசின் தலைமைத்துவத்துக்கு மக்களின் அவலக் குரலின் ஒலிகளாக சென்றடையட்டும்.

இவ்வாறு வீணாகான குருபீட சந்நிதாச்சாரியார் சிவஸ்ரீ.சபா.வாசுதேவக்குருக்கள் கோரியுள்ளார். இது தொடர்பில் அவர் விடுத்துள்ள செய்திக் குறிப்பில் பொதுமக்களைக் கோரியுள்ளதாவது:

வாழ்வாதாரத்தினை இழந்து நிர்க்கதியாக நிற்கும் மக்களின் பூர்வீகமான பிரதேசம் கிடைப்பதற்கு சிவ நாமம் வலுச்சேர்க்கட்டும். சிவராத்திரி வழிபாடு இடம்பெறும் ஆலயங்களில் அடியார்கள் ஒவ்வொரு சாமவழிபாட்டுவேளைகளிலும் கேப்பாபிலவு மக்களுக்குரியதான பிரார்த்தனைகளையும் சேர்த்துக் கொள்ளுங்கள். சிவராத்திரியின் திருவருள் துன்பத்தால் துவளும் மக்களின் அவல வாழ்வுக்கு நிம்மதியைக் கொடுக் கட்டும்.

நல்லாட்சி அரசின் காலத்தில் மக்கள் அவலப்படுவது பொருத்தமானதல்ல. மக்களின் அவலத்தினை அரசு உடனடியாக தொடரவிடாமல் தடுத்தல் வேண்டும். இல்லையாயின் அரசுக்கு எதிரான கருத்துக்கள் தான் வலுப்பெறும். இதனை தொடரவிடாமல் இருப்பதற்கு அரசு நடவடிக்கைகள் எடுப்பதன் மூலம் மக்களின் நலன் காக்கப்படுவதுடன் அரசும் தனது வாக்குறுதிகளை காத்து நம்பிக்கைக்குரியவர்களாவதுடன் நல்லாட்சியையும் தொடரும் வாய்ப் பேறப்படுகின்றது - என்று அவர் கேட்டுள்ளார். (வ-4)




BTEC HNDs

UGC Recognized
TVEC Approved

| | |
|---|---|
| ENG ENGINEERING<br>Civil & Construction<br>Telecommunication<br>Electrical \| Electronics | BM MANAGEMENT<br>Business Management \| Marketing<br>Human Resource Management |
| IT COMPUTING & SYSTEM DEVELOPMENT | BMS BIOMEDICAL SCIENCE BIOTECHNOLOGY |
| LLB LAW | QS QUANTITY SURVEYING |

BA (Hons) / BSc (Hons) / BEng (Hons) & LLB (Hons)

BCAS CAMPUS
BRITISH COLLEGE OF APPLIED STUDIES

CALL 077 710 2131

Jaffna Campus
16, Point Pedro Road,
Jaffna.

Corporate Office
32, Dharmarama Road,
Colombo 6.
T : 011 258 5391

18 YEARS
ISO 9001:2008

Platinum Partner No.1 BTEC Centre in Sri Lanka by Pearson UK @ BTEC Higher Education Forum 2016
Educational Institute with Best Academic & Industry Interface by South Asian Partnership Summit & Business Awards 2016
Academic Impact Winner by QSI - UK 2016
Ranked as No.1 Higher Education Provider (Private Sector) - Survey by LMD 2014
BTEC Gold Partner by Pearson - UK 2013
Performance Excellence Award by Pearson - UK 2011
Fastest Growing BTEC Centre by Pearson - UK 2010

HOTLINE : 021 2219910
Visit us on Facebook | info@bcas.lk | www.bcas.lk



திருநெல்வேலி
பழங்கிணற்றடி
வீரகத்தி விநாயகர் ஆலயம்
இன்று 24.02.2017
14 ஆம் திருவிழா
சப்பறத்திருவிழா

முந்தித்தானே முளைத்தவனே
மூஷிகவாகன மூர்த்தியனே
சிந்தித்திருப்பவர் சித்தமிசைச்
சிறப்பாயிருந்தருள் சேர்ப்பவனே
பந்தித்திருக்கும் பாசவினை
பற்றறவேயருள் பாலிப்பாய்
வந்தித்தவர்க்கருள் வாரணமே
வாகாயுன் புகழ் பாடிடுவோம்.

தேனு களஞ்சியம்
சந்தை உட்புறம், திருநெல்வேலி.

திருச்சிற்றம்பலம்



சைவநெறிக்கூடம்

# அருள்மிகு ஞானலிங்கேச்சுரர் திருக்கோயில்

இணுவில் தெற்கு, இணுவில்

பெருஞ்சிவனிரவு (மகா சிவராத்திரி விரதம்) -
இன்று (24.02.2017) வெள்ளிக்கிழமை மாலை 6.00 மணி

"என்னை நன்றாக இறைவன் படைத்தனன் தன்னை நன்றாகத் தமிழ் செய்யுமாறே" (திருமந்திரம் - திருமூலர்)

கருவறையில் செந்தமிழ் வழிபாடு நடைபெறும் அருள்மிகு ஞானலிங்கேச்சுரர் திருக்கோயிலிலே இன்று கும்பத்திங்கள் 12ஆம் நாள் (24.02.2017) வெள்ளிக்கிழமை செந்தமிழுக்கு கழகம் கண்ட எம்பெருமானின் நோன்பாகிய மகா சிவராத்திரி விரதம் என்று அழைக்கப்படும் பெருஞ்சிவனிரவு சிறப்பாக நடைபெற குருவருளும் திருவருளும் நிறைந்தே கைகூடியுள்ளது. இன்றைய தினம் முத்தமிழ் நிகழ்ச்சிகள் நடைபெறும்.

- ✓ நாள்முழுவதும் அடியார்கள் தங்கள் கரங்களினால் எம்பெருமானுக்குத் திருமஞ்சனம் (அபிடேகம்) செய்து வழிபாடு ஆற்றலாம்.
- ✓ இரண்டாம் கால வழிபாட்டினைத் தொடர்ந்து 1008 சிவனடியார்கள் பால்செம்பு கொண்டு திருமஞ்சனம் ஆற்றலாம். (பங்குபெற விரும்பும் அடியார்கள் திருக்கோயிலில் முற்பதிவு செய்யலாம்)
- ✓ நான்கு காலங்களிலும் நான்மை வகை வழிபாடுகள் இடம்பெற்று நால்வகை அருளமுது படைக்கப்படும்.
- ✓ எம்பெருமானின் புகழ்பரப்பும் முத்தமிழ் நிகழ்வுகளும் நடைபெறவுள்ளன.

♪ பரதநாட்டியம் ♪ வில்லிசை - மீனாட்சி சுந்தரேசர் திருக்கல்யாணம் ♪ நாடகம் - பக்த நந்தனார் ♪ பட்டிமன்றம் ♪ வாத்திய இசை அரங்கம்
♪ தமிழரின் பாரம்பரிய வாத்திய இசை அரங்கம் ♪ பக்தி கானங்கள்

அன்றைய தினம் கண் துஞ்சாது நோன்பில் ஈடுபடும் சிவனடியார்களுக்கு திருக்கோயிலில் சிறப்பு ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன.

சிவனடியார்கள் இப்பெருஞ்சிவனிரவில் கலந்துகொண்டு எம்பெருமானை தெய்வத் தமிழில் வழிபட்டு அருள் நிறையப்பெற்றுய்ய அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

" மேன்மை கொள் சைவநீதி விளங்குக உலகமெல்லாம்"

திருச்சிற்றம்பலம்

சைவநெறிக்கூடம்,
அருள்மிகு ஞானலிங்கேச்சுரர் திருக்கோயில், இணுவில்.
021224 3545

அனுசரணை

| | | | | |
|---|---|---|---|---|
| யோய்ஸ் பார்மஸி<br>ஆங்கில மருந்தகம்<br>யாழ்.வீதி,<br>மானிப்பாய். | சக்திவேல்<br>ஹாட்வெயர்<br>கே.கே.எஸ்.வீதி,<br>கோண்டாவில் மேற்கு,<br>கோண்டாவில். | அம்பிகை<br>ப(F)ன்சி<br>கே.கே.எஸ்.வீதி, இணுவில்,<br>021 224 2074<br>215(75),கே.கே.எஸ்.வீதி,<br>யாழ்ப்பாணம்.<br>021 222 5759 | பெஷன் ஹவுஸ்<br>203,கே.கே.எஸ்.வீதி,<br>யாழ்ப்பாணம்.<br>021 222 8713,<br>076 717 7185 | வளர்மதி<br>ரெக்ஸ்ரைல்ஸ்<br>258(176)<br>கே.கே.எஸ்.வீதி,<br>யாழ்ப்பாணம்.<br>021 222 3313 |

# போக்குவரத்து விதிமுறைகளை மீறியோருக்கு தண்டம்

யாழ்ப்பாணம்.பெப்.24

அலைபேசியில் உரையாடியவாறு வாகனம் செலுத்தியவருக்கு 2ஆயிரம் ரூபா தண்டம் யாழ்ப்பாணம் நீதிவான் மன்றால் விதிக்கப்பட்டது.

இந்த வழக்கு யாழ்ப்பாணம் நீதிவான் மன்றுக்கு விசாரணைக்கு வந்தது. குற்றஞ் சாட்டப்பட்டவர் குற்றத்தை ஒப்புக் கொண்டார். அவருக்கு 2 ஆயிரம் ரூபா தண்டம் விதித்து உத்தரவிட்டார் பதில் நீதிவான் வி.ரி.சிவலிங்கம்.

இதேவேளை, பாதசாரிகள் கடவையில் வாகனத்தை நிறுத்தாமல் சென்றவருக்கு 3 ஆயிரம் ரூபா தண்டம் விதித்து உத்தரவிட்டது யாழ்ப்பாணம் நீதிவான் மன்றம். (வ-ற-ரி)


## பாராட்டி வாழ்த்துகின்றோம்

வடமாகாணசபை கௌரவ உறுப்பினர் **திரு. சாந்தலிங்கம் சுகிர்தன்** அவர்கள் வரணி வடக்கு கும்பிட்டான்புலம் கற்பகப் பிள்ளையார் ஆலயத்தின் புனருத்தாரண வேலைகளுக்கு ரூபா 50,000/= ஐ தந்துதவியமைக்கு மனதாரப் பாராட்டி வாழ்த்துகிறோம்.




பரிபாலனசபையினர்
**கும்பிட்டான்புலம்**
**கற்பகப்பிள்ளையார் ஆலயம், வரணி.**
(AJA/CS/374) (22,18)



## வலி கிழக்கு தென் பகுதி ப.நோ.கூ.சங்கம், நீர்வேலி கிராமிய வங்கிகளை நவீன முறையில் மறுசீரமைத்தல்

கோப்பாய், உரும்பிராய், நீர்வேலி ஆகிய இடங்களிலுள்ள கிராமிய வங்கிகளை நவீன முறையில் மறுசீரமைப்பதற்கு பொருத்தமானவர்களிடமிருந்து கேள்வி விண்ணப்பம் கோரப்படுகின்றது. விண்ணப்பங்களைத் தலைமைக்கந்தோர் வேலை நாள்களில் பெற்றுக்கொள்ளலாம்.

விண்ணப்பமுடிவு திகதி **10.03.2017**

**(21.02.2017ஆம் திகதிய இயக்குனர்சபை தீர்மானப்படி)**
**பொது முகாமையாளர்**
**வலி கிழக்கு தென்பகுதி ப.நோ.கூ.சங்கம்**
**நீர்வேலி.**
22.02.2017
(AJA/EN/857) (22,18)



## பணியாளர்கள் தேவை

**யாழ் நகரில் இயங்கும் பார்மசி, கிளினிக் இற்கு**

1. விற்பனை கண்காணிப்பாளர், முகாமையாளர் தேவை-1 (ஆண்,பெண்) (வயதெல்லை-40இற்கு மேல்) (முன் அனுபவம் உள்ளவர்கள்/ஓய்வு பெற்றவர்கள்)
2. Accountant-1, Account Assistant-1 (பெண்கள்)
3. விற்பனை அனுபவம் உள்ள பெண்பிள்ளைகள்,தாதியர்கள்(NURSE)

நேர்முகத்தேர்வு- காலை 8.30-10.30 வரை
காலம்- 26.02.2017(ஞாயிறு)
இடம்- சன்றைஸ் மெடிகிளினிக்
388, ஆஸ்பத்திரி வீதி,
யாழ்ப்பாணம்.
(பஸ் நிலையம் முன்பாக)

(AJA/CS/1148) (22,17)



குருவே துணை

வாழ்க வையகம் வாழ்க வளமுடன்



**யாழ்.மனவளக்கலை மன்ற அறக்கட்டளை வழங்கும் சிறப்பு**
**யோகாப் பயிற்சிகள்**
**பயிற்சியின் பயன்கள் சில**

**உடற்பயிற்சியின் மூலம்**
1. நோய்வராமல் தடுக்க. குணமாக்க. உடலுறுதி. நீள் ஆயுள் பெறலாம்.
2. நீரிழிவு, இரத்த அழுத்த சமன்பாடு
3. பெண்களுக்கான மாதவிடாய் பிரச்சினைகள் சீராகும்.
4. கண்பார்வை குறைபாடு நீங்குதல்.

**காயகல்பப் பயிற்சி மூலம்**
1. ஒழுக்க உணர்வும், அறிவுக் கூர்மையும் கிட்டும்.
2. இளமையைப் பாதுகாத்து முதுமையைத் தள்ளிப்போடலாம்.
3. நற்பண்புகள் வளரும்.

**தியானப் பயிற்சியின் மூலம்**
1. மன அமைதி, ஞாபகசக்தி, ஆற்றல் மிகு சிந்தனை திறன் மேம்பாடு
2. மன இறுக்கம் நீங்கும். 3. நல்ல உறக்கம் கிட்டும்.

இடம்: அறிவுத் திருக்கோவில், யாழ்ப்பாணம்.
காலம் : 25.02.2017 தொடக்கம் 03.03.2017 வரை, நேரம் : மாலை 5 மணிமுதல்.
பயிற்சி வழங்குபவர் : மனவளக்கலைப் பேராசிரியர் அருள்நிதி S.இந்திரா அவர்கள்(தமிழ்நாடு, இந்தியா)

அனைவரும் கலந்து நன்மை பெற அழைக்கின்றோம்.

அறிவுத்திருக்கோவில்
இல.81, பிறவுண் வீதி,
யாழ்ப்பாணம் .

**யாழ்ப்பாணம்.மனவளக்கலை மன்ற அறக்கட்டளை.**
**021 222 2772, 071 440 3268**



## 100% புலமைப் பரிசில்

முற்றிலும் வேலைவாய்ப்பை நோக்கமாகக் கொண்ட பயிற்சிநெறி!

**மென்பொருள் கம்பனியில் இணைந்து மென்பொருள் அபிவிருத்தியாளர் ஆகவேண்டுமா?**

அல்லது

**ஒரு தொழில்நுட்பம் சார்ந்த கம்பனியை ஆரம்பிக்கவேண்டுமா?**

அரிய ஓர் சந்தர்ப்பம்!!

தகமை : க.பொ.த உயர்தரப் பரீட்சைக்கு தோற்றியிருத்தல்
பயிற்சி நிலையம் : யாழ்ப்பாணம்
பயிற்சிக் காலம் : 6 மாதங்கள்(ஏப்ரல் 2017 தொடக்கம் ஒக்டோபர் 2017)
விண்ணப்பிக்கும் முறை : www.uki.life/apply
விண்ணப்ப இறுதித்திகதி: 18 March 2017

உள்ளடக்கம்
- Software Development
- Business English
- Business Management
- Personal Coaching

UKi
மேலதிக தகவல்களுக்கு
www.uki.life 0775694587 info@uki.life


# மகா சிவராத்திரி வழிபாடுகள்

யாழ்ப்பாணம்,பெப்.24

கொழும்புத்துறை மேற்கு விநாயகர் ஆலயத்தில் மகா சிவராத்திரி வழிபாடு இன்று மாலை 6 மணிக்கு ஆரம்பமாகும் என்று அறிவிக்கப்பட்டது. சிறப்பு முழுக்கு நடைபெற்று நான்கு சாம ஆராதனை வழிபாடுகள் நடைபெறும் என்று அறிவிக்கப்பட்டது. (வ-17)

* * * * * * * * * * * * * * * *

யாழ்ப்பாணம்,பெப்.24

நீர்வேலி அரசகேசரிப் பிள்ளையார் ஆலயத்தில் சிவராத்திரியை முன்னிட்டு இன்று வெள்ளிக்கழமை மாலை 6 மணிக்கு சிறப்பு முழுக்கு இடம்பெற்று நான்கு சாம வழிபாடுகள் நடைபெறும் என்று அறிவிக்கப்பட்டது. ஆராதனை மற்றும் கூட்டு வழிபாடுகள் என்பன இடம்பெறும் என்று தெரிவிக்கப்பட்டது. (வ-17)


## பொதுக்கூட்ட அறிவித்தல்

எதிர்வரும் 26.02.2017 ஞாயிற்றுக்கிழமை காலை 9 மணிக்கு எமது சங்கப் பணிமனையில் பொதுக்கூட்டம் நடைபெறவுள்ளது என்பதை சகல அங்கத்தவர்களுக்கும் அறியத்தருகின்றோம். எனவே சகல அங்கத்தவர்களையும் தவறாது சமூகமளிக்கும்படி வேண்டுகின்றோம்.

**தலைவர்** **செயலாளர்**

**தெல்லிப்பளை இந்து இளைஞர் சங்கம்**



## University of Jaffna - Sri Lanka
## Faculty of Graduate Studies

**Postgraduate Diploma in Teaching English as a Second Language (TESL)**
**Part time course - 2017 / 2019 - Batch II**

Applications will be entertained from eligible candidates for the above course.

ADMISSION REQUIREMENTS:

1. Degree in any field from a recognized University.

And

2. At least three years experience in Teaching English as a Second Language at primary / secondary / tertiary levels in Government or recognized private schools / Institutions.

And

3. Age - below fifty five years

Duration : Four Semesters (Two years)
Medium : English
Selection Criteria : English Language Proficiency Test and Interview
Course Fee : Rs. 85,000.00

**Closing date for Applications : 10th March 2017**

**Application Procedure :**

Relevant information and prescribed application forms could be obtained from the Assistant Registrar, Faculty of Graduate Studies, University of Jaffna ( T.P: 021 222 3608) either in person or by post, on a payment of Rs.500/- per application form on production of receipt in support of the payment to the University Account number 162 - 1001 - 8 - 0000902 at the People's Bank.

Those who wish to obtain application forms by post are requested to send a money order for Rs.500/= per application form drawn in favour of the Bursar, University of Jaffna together with a self addressed stamped envelope (23x10 cm in size) to the value of Rs.40/-

Application forms and other details will also be available in the Faculty web site www.jfn.ac.lk/grad. Those who wish to send the downloaded application form should attach a money order for Rs.500/- drawn in favour of the Bursar, University of Jaffna or the receipt in support of the payment to the University Account number 162 - 1001 - 8 - 0000902 at the people's Bank.

Duly completed applications should be forwarded to the Assistant Registrar, Faculty of Graduate Studies and University of Jaffna on or before the closing date of application.

Name of the course should be written on the top left hand corner of the envelope.

Illegible, incomplete and late applications will be rejected without intimation.

**Note: The Candidates those who applied for this course earlier and sat the selection examination on 28.12.2016 need not to apply again.**

**17.02.2017** **Registrar**


# யாழ். நீதிமன்ற பதிவாளரின் அறிவித்தல்

யாழ்ப்பாணம்,பெப்.24

யாழ்ப்பாணம் நீதிவான் மன்றில் உரிமை கோரப்படாத நிலையில் உள்ள சான்றுப்பொருள்களை உரியவர்கள் உறுதிப்படுத்திப் பெற்றுக்கொள்ளுமாறு நீதிமன்றப் பதிவாளர் அறிவித்தார்.

யாழ்ப்பாணம், கோப்பாய் பொலிஸ் நிலையங்களால் 69273628 இலக்க லுமாலா வர்க்க ஆண்கள் துவிச்சக்கரவண்டி, 7712899 இலக்க லுமாலா வர்க்க பெண்கள் துவிச்சக்கரவண்டி, இலக்கமற்ற கறுப்புநிற துவிச்சக்கரவண்டி, இலக்கமற்ற மவுண்டன் வர்க்க துவிச்சக்கரவண்டி, இலக்கமற்ற லுமாலா வர்க்க துவிச்சக் கரவண்டி, எம்.பி.வி.ஈ. 4259 இலக்க டிஸ்கவரி மோட்டார் சைக்கிள், டபிள்யூ.ஜே.ஆர் 7358 இலக்க ஹீரோ ஹொன்டா வர்க்க மோட்டார் சைக்கிள், என்.பி.யூ.வி 5643 இலக்க ஹீரோ வர்க்க மோட்டார் சைக்கிள், இலக்கம் பெயர் இல்லாத மோபெட் மோட்டார் சைக்கிள், இலக்கம் தெளிவற்ற மோட்டார் சைக்கிள், எம்.பி.எக்ஸ்.டி 2770 சபாரி வர்க்க மோட்டார் சைக்கிள், எம்.பி.எம்.எப் 7978 ரிவிஎஸ் வர்க்க மோட்டார் சைக்கிள், என்.பி.ரி.ஜி 7641 ஹீரோ வர்க்க மோட்டார் சைக்கிள், என்.பி.வி.ஏ 6062 பல்சர் வர்க்க மோட்டார் சைக்கிள் என்பன மன்றில் பாரப்படுத்தப் பட்டுள்ளன.

இந்தச் சான்றுப் பொருள்களை உரிமை கோருபவர்கள் எவராயினும் 2 மாத காலப்பகுதிக்குள் அலுவலக நேரத்தில் உரிய ஆவணங்களுடன் சமுகமளித்து பெற்றுக்கொள்ளுமாறு யாழ்ப்பாணம் நீதிவான் மன்றப் பதிவாளர் கேட்டுள்ளார். (வ-10)


## கடை வாடகைக்குண்டு

மீசாலைச் சந்தியிலிருந்து பங்களா வீதியில் A9 வீதியிலிருந்து 50m தூரத்தில் உள்ள கடை வாடகைக்கு விடப்படும்.
(C/278) (22,18)

077 255 5291



## காணி விற்பனைக்கு

**கோண்டாவில் சந்திக்கும் இராஜவீதி சந்திக்கும் இடையில் பிரதான வீதியில் 2½ பரப்புக் காணி விற்பனைக்குண்டு.**

**076 697 2287**



## மலிவு விற்பனைக்கு

நல்ல இன தென்னை நாற்று, காட்டுத்தேக்கு மற்றும் பயன் தருமரங்களும் அலங்கார தாவரங்கள், பூச்சாடிகள் என்பனவும் விற்பனைக்குள்ளன.

பவிசாறு பூங்கனிச் சோலை,311/1, பலாலி வீதி , கோண்டாவில்.
**021 222 8199, 077 397 6203**



## பெயர்மாற்றம்

11/12, பழைய பூங்கா வீதி, கொய்யாத்தோட்டம், யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த நியூற்ரன் எட்வேட் ஆகிய நான் எனது பெயரை இன்றிலிருந்து **நியூட்டன் ரமேஸ்** எனப் பெயர்மாற்றி சகல ஆவணங்களிலும் கையொப்பம் இடுவேன் என இத்தால் சகலருக்கும் அறியத்தருகிறேன்.

**நியூட்டன் ரமேஸ்**
(AJA/CS/1377) (22,17)



MAJESTIC CINEPLEX Jaffna
**கார்கில்ஸ் ஸ்குவெயர்**
(யாழ் போதனா வைத்தியசாலை எதிரில்)

இப்பொழுது திரையில்



10.00 / 1.00 / 4.00 / 7.00




10.15 / 1.15 / 4.15 / 7.15
10.30 / 1.30 / 4.30 / 7.30
9.30 PM

விசாரணை 021- 2227712
MajesticCineplexSL
www.ceylontheatres.lk

## சிவராத்திரி விழாக்கள்

வரணி, பெப்.24

பிரம்மகுமாரிகள் வழங்கும் சிவராத்திரி விழா இன்று வெள்ளிக்கிழமை வரணி வடக்கு சிமிழ் அம்மன் ஆலயத்தில் மாலை 7 மணிக்கு இடம்பெறும் என்று அறிவிக் கப்பட்டது. அம்மன் அடியார்கள் விழாவில் கலந்து கொள்ளு மாறு கேட்கப்பட்டுள்ளது. (வ-122)

* * * * * * * * * * *

யாழ்ப்பாணம், பெப். 24

கீரிமலை சிவபூமி மடத்தில் இன்று வெள்ளிக்கிழமை இரவு சிவராத்திரி விழா நிகழ்வுகள் நடைபெறும் என்று அறிவிக் கப்பட்டது. தெல்லிப்பளை தமிழ் சங்கத்தின் ஏற்பாட்டில் தெல்லிப்பழை துர்காதேவி ஆலயத் தலை வர் ஆறு. திருமுருகன் தலைமையில் விழா இடம்பெறும். ஏதொண்டுநாதன் சுவாமிகளின் ஆன்மீக சொற்பொழி, பக்த நந்தனா இசை நாடகம், வாழ்வு பெற்ற வல்லி என்னும் வில்லிசை, ஒயிலாட்டம், காவடி, கரகாட்டம், கிராமிய நடனம் ஆகிய நிகழ்வுகள் நடைபெறும் என்று தெரிவிக்கப்பட்டது. (வ-10)

## வர்த்தக ஊழியர்களுக்கு நாளை விடுப்பு வழங்க வணிகர் கழகம் கோரிக்கை

யாழ்ப்பாணம், பெப். 24

சிவராத்திரி தினத்தை முன்னிட்டு சிவ வழிபாடுகளில் ஈடுபடும் வர்த்தக ஊழியர் களுக்கு அவர்களின் கோரிக்கைக்கு அமை வாக நாளை சனிக்கிழமை விடுமுறை வழங்க வேண்டும் என்று யாழ்ப்பாணம் வணிகர் கழகம் வர்த்தகர்களைக் கேட்டுள்ளது என்று சங்கத்தின் செயலர் அறிவித்தார். (வ-10)

# கல்விச் சீர்திருத்தத்துக்கு கல்வி அமைச்சு யோசனை

## ஆசிரியர் சங்கம் வரவேற்பு

யாழ்ப்பாணம், பெப். 24

பாடசாலை மட்ட மதிப்பீட்டு நடவடிக் கைகளுக்குப் பதிலாக மாற்று வழி முறை யொன்றை அறிமுகம் செய்வதற்கு கல்வி அமைச்சு தீர்மானத்துள்ளது என்று தெரிவிக்கப்பட்டது.

தற்போதைய பரீட்சை முறை சிறந்ததல்ல. செயற்பாட்டுப் பரீட்சை அவசியம் வேண்டும். அதனால் கல்விச் சீர்திருத்தம் வரவேற்கத் தக்கது என்று இலங்கை ஆசிரியர் சங்கம் தெரிவித்துள்ளது.

'தற்போதைய பாடசாலை மட்டக் கணிப்பீட்டு முறையில் செயன்முறைப் பரீட்சை கட்டா யதும் இருக்க வேண்டும். மாணவர்கள் பரீட் சையில் சித்தியடைந்தபோதும் பின்னடை வாக இருப்பதற்குத் தற்போதைய பரீட்சை முறையும் ஒரு காரணம். இந்த முறை மாற் றப்பட வேண்டும்.

பாடசாலை ஆசிரியர்களுக்கு தமது மாணவர் களுடன் கூடிய நேரத்தை செலவிடுவதற்கு சீர்திருத்த நடவடிக்கையின் நோக்கம்' என்று கொழும்பு அரசின் கல்வி அமைச்சர் தெரிவித்தார்.

'பழைய முறைமையினால் ஆசிரியர்கள் ஆவணங்களை நிரப்பும் பணியில் அதிக நேரத்தை செலவிட வேண்டியிருந்தனர். இந்த முறைமையை நீக்குவதற்கு கல்வி அமைச்சு எடுத்துள்ள தீர்மானத்தை நாட்டி லுள்ள 2 லட்சத்து 37 ஆயிரம் ஆசிரியர் களாலும் பாராட்டப்பட வேண்டிய விடயம்.

புதிய கல்விச் சீர்திருத்தம் கொண்டு வரப்பட வேண்டும் என்பதனை எமது சங்கம் உள் ளிட்ட பல சங்கங்கள் ஏற்கனவே கோரிக்கை விடுத்தி ருந்தன. அதனைச் செய்வதாகத் தற்போது கல்வி அமைச்சர் கூறியிருக்கிறார்.

அதனை கல்வியாளர்கள், துறைசார் நிபு ணர்கள் கொண்டு கலந்தாலோசித்து கருத் துக்களை முன்வைத்துச் செயற்படுத்த வேண்டும்.

தனியே கல்வி அமைச்சர் செய்துமுடிக்கும் இலகுவான காரியம் இதுவல்ல. அடுத்த வருடம் புதிய கல்விச் சீர்திருத்தம் தொடர்பில் ஆராயலாம் என்று கூறப்பட்டுள்ளது. ஆனால் இந்தப் புதிய மாற்றுத் திட்டத்தை கல்வி அமைச்சு விரைவில் அறிமுகம் செய்ய வேண்டும்.

கால இழுத்தடிப்புச் செய்யக்கூடாது' என்று இலங்கை ஆசிரியர் சங்கத்தின் பொதுச் செயலாளர் ஜோசப் ஸ்ராலின் தெரிவித்தார். (வ-4)

## சட்டவிரோதமாக கள்ளு விற்பனை செய்தோரிடம் தண்டம் அறவீடு

யாழ்ப்பாணம், பெப். 24

ஊர்காவற்றுறையில் சட்ட விரோதமான முறையில் கள்ளு விற்பனை செய்த ஆறு பேருக்கு ஊர்காவற்றுறை நீதிவான் மன்று தலா ஆயிரத்து 500 ரூபாய் தண்டம் விதித்தது.

ஊர்காவற்றுறைப் பகுதியில் சட்ட விரோதமான முறையில் கள்ளு விற்பனை செய்தார்கள் என்ற குற்ற சாட்டில் 6 பேர் மதுவரித் திணைக்களத்தால் நேற்றுமுன்தினம் நீதிமன்றில் முற்படுத் தப்பட்டனர்.

ஆறு பேரும் தமது குற்றத்தை ஏற்றுக்கொண்டனர். அவர்களுக்கு தலா ஆயிரத்து 500 ரூபாய் தண்டம் விதித்து உத்தர விட்டார் ஊர்காவற்றுறை நீதிவான் ஏ.எம்.எம்.றியாழ். (வ-37)


### முதலாம் ஆண்டு நினைவுதின அழைப்பு

07.03.2016 ஞாயிற்றுக்கிழமை சிவபதமடைந்த எங்கள் குடும்பத் தலைவி

அமரர் இராசையா மகேஸ்வரி

அவர்களின் முதலாம் ஆண்டு நினைவுதினம் நாளை (25.02.2017) சனிக்கிழமை முற்பகல் 11.00 மணிக்கு அன்னாரின் இல்லத்தில் நடைபெற இருப்பதால் அத்தருணம் நடைபெறவிருக்கும் ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும் அதனைத் தொடர்ந்து நடைபெறும் மதியபோசன நிகழ்விலும் கலந்துகொள்ளும் வண்ணம் அன்புடன் அழைக்கின்றோம்.



புத்தூர் கிழக்கு, வீரவாணி. குடும்பத்தினர்.


# இந்திய இழுவைப்படகுகளின் அத்துமீறலால் வடமராட்சி கிழக்கு மீனவர்கள் பாதிப்பு

வடமராட்சி, பெப். 23

வடமராட்சி வடக்கு கடற்பிரதேசத்தில் எல்லை தாண்டிய இந்திய இழுவைப்படகுகள் சுப்பர்மடம் கடல் பகுதியில் உள்ளூர் மீனவர்களின் படகுகள் மீது மோதியும் பல இலட்சக்கணக்கான ரூபா பெறுமதியான மீன்பிடி வலைகளை அறுத்து நாசமாக்கியும் சென்றுள்ளன என்று தெரி விக்கப்பட்டது.

இந்தச் சம்பவம் நேற்றுமுன் தினம் புதன்கிழமை அதி காலை 5.30 மணியளவில் இடம்பெற்றது.

கரையில் இருந்து 7 கடல் மைல் தூரத்தில் நடந்த இந்தச் சம்பவத்தில் உள்ளூர் மீனவரின் படகு ஒன்று முற்றாகச் சேதமடைந்தது. மற்றொரு படகு சிறிதளவில் சேதமடைந்திருந்தது. இரு படகுகளுடன் எடுத்துச் செல் லப்பட்ட மீன்பிடி வலைகள் துண்டு துண்டாக நறுக் கப்பட்டுள்ளன.

இந்தச் சம்பவத்தால் உள் ளூர் மீனவர்களுக்குப் பல இலட்சக்கணக்கான ரூபா இழப்பு ஏற்பட்டுள்ளது. சம்பவம் குறித்து வடமராட்சி வடக்கு கடற்றொழிலாளர் கூட்டுறவுச் சங்க சமாசத் தலைவர் வ.அருள்தாஸ் பருத்தித்துறை பொலிஸ் நிலையத்திலும் பிரதேச கடற்படை அதிகாரியிடமும் முறைப்பாடு செய்தார்.

வடமராட்சி கிழக்குக் கடற்பிர தேசங்களில் இந்திய மீனவர் படகுகளின் அத்துமீறலால் உள்ளூர் மீனவர்கள் கடற்றொழில் புரிவதில் பெரும் சிரமங்களை எதிர்கொண்டுள்ளதுடன் வாழ்வாதார நெருக்கடியையும் சந்திக்க வேண்டிய பரிதாப நிலையில் உள்ளனர் என்று வடமராட்சி வடக்குக் கடற்றொழிலாளர் கூட்டுறவுச் சங்க சமாசத் தலைவர் வ.அருள்தாஸ் தெரிவித்தார். (வ-173)


### மரண அறிவித்தல்



திருமதி கனகாம்பிகை தர்மலிங்கம்

அரியாலையைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி கனகாம்பிகை தர்மலிங்கம் லண்டனில் 22.02.2017 இல் காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற தர்மலிங்கத்தின் (பிரபல கட்டட ஒப்பந்தகாரர்) அன்பு மனைவியும், காலஞ்சென்றவர்களான மயில்வாகனம் - செல்லம்மா தம்பதியரின் அன்பு மகளும், காலஞ்சென்றவர்களான வேலுப்பிள்ளை - சின்னம்மா தம்பதியரின் அன்பு மருமகளும், காலஞ்சென்றவர்களான திலகேந்திரன், தர்மேந்திரன் (பாபு) மற்றும் ஸ்ரீ யமுனாதேவி, விஜயேந்திரன், வசந்தி, யுவனேந்திரன் ரேணுகா, இலகேந்திரன் ஆகியோரின் பாசமிகு தாயும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் பற்றிய விபரம் பின்னர் அறிவிக்கப்படும்.

11, கதிரவேலு லேன்,
கனகரட்ணம் றோட்,
அரியாலை, யாழ்ப்பாணம்.

தகவல்:
குடும்பத்தினர்.

(உ.தே.இ. 383) (13.18)



### மரண அறிவித்தல்



திருமதி இலட்சுமிப்பிள்ளை முருகுப்பிள்ளை

வரணி இடைக்குறிச்சியைப் பிறப்பிடமாகவும் வதிவிடமாகவும் கொண்ட திருமதி இலட்சுமிப்பிள்ளை முருகுப்பிள்ளை 22.02.2017 புதன்கிழமை இறைபதம் எய்தினார்.

அன்னார் காலஞ்சென்ற வீரகத்தி - தெய்வானை தம்பதியரின் அன்பு மகளும் காலஞ்சென்ற முருகுப்பிள்ளையின் அன்பு மனைவியும் காலஞ்சென்ற சிதம்பரப்பிள்ளை , கந்தையா மற்றும் இராசையா ஆகியோரின் அன்புச் சகோதரியும் இரத்தினசிங்கம் (ஜேர்மனி), காலஞ்சென்ற தவயோகநாயகி மற்றும் குலசிங்கம் (மாந்தை சோல்ற் லிமிற்டெட்) , கமலாதேவி (வவுனியா/ பூந்தோட்டம் மகா வித்தியாலயம்), பராஜசிங்கம் (நோர்வே) ,கமலேஸ்வரி (யா/ வரணி வடக்கு அ.த.க. பாடசாலை) ஆகியோரின் பாசமிகு தாயாரும் காலஞ்சென்ற காராளசிங்கம் மற்றும் விமலாம்பிகை (யா/ கொடிகாமம் அரசினர் வித்தியாலயம்) , ஞானக்குமார் (அஞ்சல் அதிபர் முல்லைத்தீவு அஞ்சலகம்), இராஜேஸ்வரி (ஜேர்மனி), நாகேஸ்வரி (நோர்வே) , இராசேந்திரம் ஆகியோரின் அன்பு மாமியாரும் குகன் (கனடா),சயந்தன் (கனடா), சயந்தினி(கனடா), பிருந்தா (கனடா), கார்த்திக் (ஜேர்மனி), யசிந்தா (ஜேர்மனி), கௌசிகா , பூரணிமா,துஷாந்(யாழ் பல்கலைக்கழக பொறியியல் பீடம்), தனுகாந்த், தாருஜன் ஆகியோரின் அன்புப் பேர்த்தியும் துஷன் , அபிஷன், லக்ஷி , அபி, அனுஸ்ரா , சயானா ,சதுஷா ஆகியோரின் அன்புப் பூட்டியுமா வார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (24.02.2017) வெள்ளிக்கிழமை முற்பகல் 11.00 மணியளவில் அவரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக பொற்பதி இந்துமயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

இடைக்குறிச்சி,
வரணி

தகவல்:
குலசிங்கம் (மகன்),
இராசேந்திரம் (மருமகன்)

077 612 8784

## மாசி மகத் திருவிழா நாளை ஆரம்பம்

யாழ்ப்பாணம்,பெப்.24
கந்தர்மடம் சிவ உதய நாகபூஷணி அம்பாள் ஆலய வருடாந்தத் திருவிழா நாளை சனிக்கிழமை கொடியேற்றத்துடன் ஆரம்பமாகும் என்று ஆலய தர்மகர்த்தா செ.சூரியன் அறிவித்தார்.
மார்ச் மாதம் 10 ஆம் திகதி வெள்ளிக்கிழமை காலை 7 மணிக்கு வசந்த மண்டபப்பூசை யுடன் தேர்த்திருவிழா ஆரம்பமாகும். மறுநாள் சனிக்கிழமை மாசி மகத்தன்று காலை 7 மணிக்கு தீர்த்தத் திருவிழாவும் மாலை 6 மணிக்கு தீக் குளிப்பு நிகழ்வும் இடம்பெறும் என்று அவர் மேலும் தெரிவித்தார். (வ)

## பண்பாட்டுப் பேரவை பொதுக் கூட்டம்

யாழ்ப்பாணம்,பெப்.24
வலிகாமம் கிழக்குப் பண்பாட்டுப் பேரவையின் பொதுக்கூட்டம் மார்ச் மாதம் 2ஆம் திகதி வியாழக்கிழமை பி.ப.3 மணிக்கு கோப்பாய் பிரதேச செயலக மாநாட்டு மண்டபத்தில் வலிகாமம் கிழக்குப் பிரதேச செயலர் திருமதி சுபாஜினி மதியழகன் தலைமையில் நடைபெறும் என்று அறிவிக்கப்பட்டது.
இந்தக் கூட்டத்தில் பேரவையின் அங்கத்தவர்கள், கலைஞர்கள், கலை மன்றங்களின் பிரதிநிதிகள், கலை ஆர்வலர்கள் அனைவரையும் கலந்துகொள்ளுமாறு வலி. கிழக்கு பிரதேச செயலாளர் கேட் டுள்ளார். (வ)

# அத்தியாவசியப் பொருள்களை நியாய விலையில் வழங்கவேண்டும்

### யாழ்ப்பாணம் பல நோக்கு கூட்டுறவு சங்கம் மாவட்டச் செயலரிடம் வலியுறுத்தல்

யாழ்ப்பாணம்,பெப்.24
'கூட்டுறவுச் சங்கங்களின் நுகர்ச்சிக் கிளை நிலையங்களுக்கு தேவையான அத்தியாவசியப் பொருள்களை அரச மொத்தக்களஞ்சியம் மற்றும் அரச கூட்டுறவு மொத்த விற்பனை நிலையம் போன்றவற்றின் ஊடாக நியாய விலை களில் பெற்றுத் தருவதற்கு யாழ். மாவட்டச் செயலர் நடவடிக்கை மேற்கொண்டு தரவேண்டும். அப்போதுதான் நுகர்ச்சி நிலையங்கள் ஊடாக கட்டுப்பாட்டுவிலையில்பொருள்களைவிற்கமுடியும்' இவ்வாறு கடிதம் மூலம் கோரியுள்ளார் யாழ்ப்பாணம் பல நோக்குக் கூட்டுறவுச் சங்கத்தின் தலைவர் மு.ஜெ.சுஜிந்திரன்,
அந்தக் கடிதத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது.
இலங்கை அரசின் பாவனையாளர் பாதுகாப்புச் சட்டத்துக்கு அமைவாகவும் வர்த்தமானி அறிவித்தலுக்கு அமைவாகவும் அத்தியாவசிய உணவுப் பொருள்களான அரிசி வகைகள், சீனி, பருப்பு மற்றும் பயறு போன்றவற்றின் சில்லறை விலை நிர்ணயம் செய்யப்பட்டுள்ளன.
சீனி ஒரு கிலோ 93 ரூபாவுக்கும் இறக்குமதி செய்யப்படும் அரிசி வகைகளில் நாட்டரிசி கிலோ ஒன்று 72 ரூபாவுக்கும் சம்பா அரிசி கிலோ ஒன்று 80 ரூபாவுக்கும் வெள்ளைப் பச்சை அரிசி கிலோ ஒன்று 70 ரூபாவுக்கும் விற்பனை செய்யப்பட வேண்டும் என்று விலைகள் நிர்ணயிக்கப்பட்டுள்ளன. இந்த விலைக் குறைப்பால் நாட்டு மக்களுக்கு நன்மை பயக்கும் என்பது ஏற்றுக் கொள்ளக் கூடியது. ஆனால் யாழ்ப்பாணம் பல நோக்குக் கூட்டுறவுச் சங்கமானது அத்தியாவசியப் பொருள்களை கொழும்பு மாவட்டத்திலுள்ள மொத்த வியாபாரிகளிடமும் யாழ். மாவட்டத்திலுள்ள மொத்த வியாபாரிகளிடமும் கொள்வனவு செய்தே சங்கத்தின் நுகர்ச்சிக் கிளை நிலையங்கள் ஊடாக விற்பனை செய்யப்படுகிறது.
யாழ்ப்பாணம் பல நோக்குக் கூட்டுறவுச் சங்கத்தின் விற்பனைக்குத் தேவையான நுகர்ச்சிப் பொருள்களை நியாய விலையில் தரமானதாக அரச மொத்தக் களஞ்சியத்தின் ஊடாகவோ அல்லது அரச கூட்டுறவு மொத்த விற்பனை நிலையத்தின் (சதொசா) ஊடாகவோ எமக்கு அரச நிர்ணய விலைக்கு பொருள்கள் வழங்க நடவடிக்கை எடுப்பதில்லை.
இதனாலேயே தனியார் மொத்த வியாபாரிகளிடம் அவர்கள் தரும் விலைக்கு பொருள்களைக் கொள்வனவு செய்து, சங்கத்தின் அங்கத்தவர்கள் மற்றும் மக்களுக்கு பொருள் களை வழங்க வேண்டிய கட்டாய சூழலில் உள்ளோம்.
விலை நிர்ணயிக்கும்போது அந்தப் பொருள்களை சங்கங்கள் வெளிச் சந்தையில் உடனடியாகப் பெற்றுக் கொள்ளமுடிந்தால், அவற்றைப் பெற்று நுகர்வோருக்கு அரசு நிர்ணயித்த விலையில் பொருள்களை வழங்கமுடியும். ஆனால், உடனடியாக அந்தப் பொருள்களை வெளிச் சந்தையில் பெற்றுக் கொள்ளமுடிவதில்லை. இவற்றைத் தாங்கள் கருத்தில் கொண்டு சங்கங்கள் நுகர்வோருக்கு தடையின்றி, தட்டுப்பாடு இன்றி, கறுப்புச் சந்தை உருவாகாமல் பொருள்கள் விநியோகிப்பதற்கு ஏற்ற தங்களின் ஆலோசனையையும், ஏற்ற ஒழுங்கு நடவடிக்கையையும் வழங்கி உதவுமாறு தங்களைத் தயவுடன் கேட்டுக் கொள்கின்றேன்- என்றுள்ளது. (வ-17)

## சாவகச்சேரியில் 4,000 விவசாயிகளுக்கு உரமானிய கொடுப்பனவு

வரணி, பெப். 24
சாவகச்சேரி கமநல சேவைகள் நிலைய எல்லைக்குள் 4 ஆயிரத்து 79 பேர் கடந்த ஆண்டுக்கான உர மானியக் கொடுப்பனவு களைப் பெற்றுள்ளனர் என்று புள்ளிவிவரங்கள் தெரிவிக்கின்றன.
இந்தப் பிரதேசத்தில் 2 ஆயிரத்து 256.9 ஹெக்ரேயர் பரப்பளவில் விவசாயிகளால் பயிர்செய்கை செய்யப்பட்டது. விவசாயிகளுக்கு உர மானியக் கொடுப்பனவாக 3 கோடியே 85 லட்சம் ரூபா வழங்கப்பட் டுள்ளது. விவசாயிகளுக்கு வங்கிக் கணக்கின் ஊடாகப் பணம் வைப்புச் செய்யப்பட்டது. கூட்டு அரசு பதவிக்கு வந்த பின்னர் மானிய உரம் வழங்குவதற்குப் பதிலாக பணம் வழங்கும் நடைமுறை கொண்டு வரப்பட்டது. (வ-122)

## கொடியேற்றம்

யாழ்ப்பாணம்,பெப்.24
ஊரெழு மடத்துவாசல் வீரகத்தி விநாயகர் ஆலய வருடாந்தப் பெருவிழா எதிர்வரும் 28ஆம் திகதி செவ்வாய்க்கிழமை மு.ப. 10 மணிக்கு கொடியேற்றத்துடன் ஆரம்பமாகும் என்று ஆலய நிர்வாக சபையினரால் அறிவிக்கப்பட்டது.
மார்ச் மாதம் 10ஆம் திகதி வெள்ளிக்கிழமை காலை 7.30 மணிக்கு வசந்த மண்டப வழிபாட்டுடன் தேர்த்திருவிழா ஆரம்பமாகும். மறுநாள் சனிக்கிழமை தீர்த்தத் திருவிழா நடைபெறும் என்று தெரிவிக்கப்பட்டது. (வ)

**வல்வெட்டித்துறை நகராட்சிமன்றம்**
**நடுக்கட்டு உத்தியோகத்தர்**
**பதவிக்கான விண்ணப்பம் கோரல்**

வல்வெட்டித்துறை நகராட்சி மன்றத்தின் நடுக்கட்டு உத்தியோகத்தர் பதவிக்கான விண்ணப்பங்கள் வரவேற்கப்படுகின்றன.

1. விண்ணப்பதாரி வல்வெட்டித்துறை நகராட்சிமன்ற எல்லைக்குள் நிரந்தரமாக வசிப்பவராகவும், உடல் ஆரோக்கியம் உடையவராகவும் இருத்தல் வேண்டும்.
2. சொந்தக் கையெழுத்தில் எழுதப்படும் விண்ணப்பத்தில் கீழ்க்குறிப்பிடப்படும் விவரங்கள் அடங்கியிருத்தல் வேண்டும்.

**விண்ணப்பதாரியின் முழுப்பெயர்:**
**முகவரி:**
**பிறந்ததிகதி:**
**கல்வித்தகைமை:**
**தேசிய அடையாள அட்டை இலக்கம்:**
**தொலைபேசி இலக்கம்:**

3. பிறப்புச்சான்றிதழ், கல்விச்சான்றிதழ், கிராமசேவையாளரின் நற்சான்றிதழ் உட்பட இரு நற்சான்றிதழ், வதிவிடச் சான்றிதழ் ஆகியவற்றின் சான்றுபடுத்தப்பட்டபிரதிகள் விண்ணப்பத்துடன் இணைக்கப்படல் வேண்டும்.
4. நடுக்கட்டு உத்தியோகத்தராகத் தெரிவு செய்யப்படுபவர் முற்றிலும் தரகு அடிப்படையிலான (கொமிஷன்) கொடுப்பனவைப் பெறும் வகையில் நியமிக்கப்படுவர்.
5. நியமனம் பெறும் நடுக்கட்டு உத்தியோகத்தர் ரொக்கப்பிணைப் பணமாக ரூபா. ஆயிரம் (1000.00) இனை அலுவலகத்தில் மீளளிக்கக்கூடிய பிணைப்பணமாக செலுத்துதல் வேண்டும்.
6. கடித உறையின் இடதுபக்க மேல்மூலையில **"நடுக்கட்டு உத்தியோகத்தர் பதவிக்கான விண்ணப்பம்"** எனக் குறிப்பிட்டு, 2017.03.09 ஆம் திகதியன்றோ, அல்லது அதற்கு முன்பாகவோ, விண்ணப்பங்கள் யாவும் கிடைக்கக்கூடியதாக, **"செயலாளர், நகராட்சிமன்றம், வல்வெட்டித்துறை"** என்ற முகவரிக்குத் தபாலில் அனுப்பப்படல் வேண்டும்.
7. மேற்குறித்த பதவிக்கான நியமனம் பெறுவோர் நிரந்தர நியமனம் பெறுவதற்கோ அல்லது கோருவதற்கோ உரித்துடையவர்கள் அல்லர்.
8. நியமனம் தொடர்பான இறுதித் தீர்மானம் செயலாளரால் மேற்கொள்ளப்படும்.

*செயலாளர்,*
*நகராட்சி மன்றம்,*
*வல்வெட்டித்துறை.*

**23.02.2017** (AJA/IN/859)(11,18)

# அச்சுவேலி – ஆவரங்கால் சாலை அதிகாரிகளால் புறக்கணிக்கப்படுகிறது

### சீரமைக்கப்படாததால் குற்றசாட்டு

அச்சுவேலி,பெப்.24
அச்சுவேலி பேருந்து நிலையத் தில் இருந்து ஆவரங்கால் சந்தி வரை செல்லும் முதன்மைச் சாலையை அகலிப்புச் செய்து மறுசீரமைக்க அதிகாரிகள் எந்த நடவடிக்கையும் எடுக் கவில்லை என்று பொது மக்கள் கவலை தெரிவிக்கின்றனர்.
இரண்டு கிலோ மீற்றருக்கு குறைவான தூரம் கொண்ட சாலை, அதிகாரிகளால் புறக்கணிப்புச் செய்யப்படுகிறது. அச்சுவேலி மத்திய கல்லூரி, அச்சுவேலி புனித திரேசாள் மகளிர் கல்லூரி மாண வர்கள் மற்றும் அச்சுவேலி பிரதேச வைத்திய சாலைக்கு செல்வோர் பயன்படுத்தும் இந்தச் சாலை வழியாகவே யாழ்ப்பாணம்- பருத்தித்துறை சாலை வழி மேற்கொள்ளப்படும் வட பிராந்திய போக்குவரத்துச் சபையின் பேரு ந்து சேவை மற்றும் அச்சுவேலி தனியார் சிற்றூர்திச் சங்கங்களின் பேருந்துச் சேவைகளும் நடத்தப்பட்டு வருகின்றன. மிக நீளமான முதன்மைச் சாலை கள் அகலிப்புச் செய்யப்பட்டு இரு வழிப்பாதையாககாப் பெற் இடப்பட்டு மறுசீரமைப்புச் செய்யப்பட்டுள்ளன. எனினும் இரண்டு கிலோ மீற்றருக்கு குறைவான தூரம் கொண்ட சாலை மறு சீரமைப்பு செய்யப்படாமல் இருப் பது ஏன் என பொது மக்கள் கேட் டுள்ளனர். (வ-11)

# வீடமைப்புக் குழுக்களை அமைக்க பிரதேச செயலர்களுக்குப் பணிப்பு

### நடைமுறைகள் குறித்து யாழ். செயலர் கடிதம்

வரணி,பெப்.24
யாழ்ப்பாணத்தில் மாவட்ட, பிரதேச மற்றும் கிராமிய மட்டங் களில் வீடமைப்புக் குழுக் களை நிறுவுதல் தொடர்பாக சகல பிரதேச செயலர் களும் பின்பற்ற வேண்டிய நடைமுறைகள் குறித்த கடிதத்தை யாழ். மாவட்டச் செயலர் அனுப்பியுள்ளார் என்று தெரிவிக்கப்பட்டது.
கடிதத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:
சகல கிராம அலுவலர் பிரிவுகளிலும் கிராமிய வீடமைப்புக் குழுக் கள் தொடர்பில் தலைவர், செய லாளர், பொருளாளர் மற்றும் 2 உப தலைவர்கள், 2 உப செய லாளர்கள் உப பொருளாளர் உட்பட 8 உறுப்பினர்களும் குழுவின் அங்கத்தவர்களாக 7 பேரும் தெரிவு செய்யப்படல் வேண்டும்.
ஒவ்வொரு பிரதேச வீடமைப்புக் குழுவிலும், கிராம வீடமைப்புக் குழுவில் தெரிவு செய்யப்படும் 15 குழு உறுப்பினர்களும் கிராம அலுவலர் பிரிவுக்கு ஏற்ப உள்வாங் கப்படல் வேண்டும். பிர தேசத்தில் 10 கிராம அலுவலர் பிரிவுகள் இருப்பின் அவற்றின் 150 உறுப்பினர்களும் பிரதேச வீடமைப்புக் குழுவில் உள்வாங் கப்படல் வேண்டும்.
மாவட்ட வீடமைப்புக்குழுவில் ஒவ்வொரு பிரதேச வீடமைப்புக் குழுவில் இருந்து தெரிவு செய்யப் படும் 15 உறுப்பினர்கள் இடம் பெற வேண்டும். மாவட்ட வீடமைப் புக் குழுவில் 225 உறுப்பினர்கள் தெரிவு செய்யப்படல் வேண்டும்.
இதற்கு அமைய கிராமிய மற்றும் பிரதேச வீடமைப்புக்குழுக்கள் நிறுவப்பட்டு உரிய படிவங்களுடன் உத்தியோகத்தர்கள் விவரங் களை தேசிய வீடமைப்பு அதிகார சபைக்கும் அவற்றின் சுருக்க விவரத்தை யாழ். மாவட்டச் செயலருக்கும் அனுப்பிவைக்குமாறு பிரதேச செயலாளர்களிடம் கேட்கப்பட்டுள்ளது. (வ-122)

மூதூர் கங்குவேலியில்

# தமிழர் காணிகளை அபகரிக்க முயற்சி

## தடுத்து நிறுத்த வேண்டும் என அரச தலைவருக்குக் கடிதம்

மூதூர், பெப்.24

திருகோணமலை, மூதூர் பிரதேச செயலர் பிரிவுக்குட்பட்ட தமிழ் மக்களின் பாரம்பரிய இடமான கங்குவேலியில் மேற்கொள்ளப்படும் காணி அபகரிப்பைத் தடுத்து நிறுத்த வேண்டும்.

இவ்வாறு அந்தப் பகுதி மக்கள் அரச தலைவரிடம் கடிதம் மூலம் கோரிக்கை விடுத்துள்ளனர்.

கங்குவேலி, அகஸ்தியர் ஸ்தாபனத்தின் சில பகுதிகளான முதலைமடு, படுகாடு ஆகிய பிரதேசங்களை, சேருவில பிரதேச செயலர் பிரிவுடன் இணைக்க முயற்சிக்கப்படுகின்றது.

நீண்டகாலமாக தமிழ் மக்களின் பூர்வீக வரலாற்றைக் கொண்ட திருக்கரையம்பதி கங்குவேலி அகஸ்தியர் ஸ்தாபன ஆலயக் காணிகள் பெரும்பான்மை இன விவசாயிகளால் நீண்ட காலமாக அபகரிக்கப்பட்டிருந்தன. ஆட்சிமாற்றத்துக்குப் பின்னர் தமிழ் அரசியல் தலைவர்களின் முயற்சியால் ஓராண்டுக்கு முன்னர் அவை விடுவிக்கப்பட்டன.

போர் இடம்பெற்றபோது காணிகளை அபகரித்து வைத்து, விவசாயம் செய்து வருமானம் அனுபவித்து வந்த பெரும்பான்மை இன விவசாயிகள் சிலர், அரச அதிகாரிகளை தமக்குச் சார்பாகப் பயன்படுத்தி, நிர்வாக ரீதியாக காணிகளை தமது கட்டுப்பாட்டின் கீழ் கொண்டு வர முயற்சிக்கின்றனர்.

நீண்டகாலத்தின் பின்னர் தமிழர்களுக்கு திருப்பி வழங்கப்பட்ட காணிகளை சதித்திட்டம் மூலம் மீண்டும் பறிக்கும் இந்தச் செயலை உடனடியாகத் தாங்கள் தலையிட்டு தடுத்து நிறுத்தவேண்டும்– என்று அந்தக் கடிதத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது.

இந்தக் கடிதம் திருகோணமலை மாவட்டச் செயலர் எஸ்.என். புஸ்பகுமாரவின் ஊடாக ஜனாதிபதி, பிரதமர் மற்றும் எதிர்க்கட்சித் தலைவருக்கு அனுப்பப்பட்டுள்ளது.

(ற-ய-40)



மக்கள் போராட்டங்களுக்கு ஆதரவாக

# கிளி. சந்தை வர்த்தகர்கள் கடையடைத்துப் பேரணி

## போராட்டத்திலும் கலந்து கொண்டனர்

கிளிநொச்சி, பெப்.24

கிளிநொச்சியில் நடத்தப்படும் இரு போராட்டங்களுக்கு ஆதரவு தெரிவித்து கிளிநொச்சி சந்தை வர்த்தகர்கள் தமது கடைகளை அடைத்து ஆதரவு தெரிவித்தனர். போராட்டங்களிலும் கலந்து கொண்டனர்.



கிளிநொச்சியில் காணாமல் ஆக்கப்பட்டவர்களின் உறவினர்களும், பரவிப்பாஞ்சானில் இராணுவம் கையகப்படுத்தியுள்ள காணிகளின் உரிமையாளர்களும் தொடர் போராட்டம் நடத்துகின்றனர். அவர்களின் போராட்டங்களுக்கு ஆதரவாகவே வர்த்தகர்கள் நேற்று கடைகளை அடைத்து ஆதரவு தெரிவித்தனர்.

காலை சந்தையில் வர்த்தகர்கள் ஒன்று கூடினர். அங்கிருந்து கிளிநொச்சி கந்தசாமி கோயில்வரை பேரணியாகச் சென்றனர். கந்தசாமி கோயில் முன்றிலில் கடந்த திங்கட்கிழமை முதல் தொடர் போராட்டம் நடத்தி வரும் காணாமல் ஆக்கப்பட்டவர்களின் உறவினர்களுடன் இணைந்து கொண்டனர்.

போர் முடிவுக்குக் கொண்டுவரப்பட்டு, 7 ஆண்டுகள் கடந்துவிட்டன. எமது மக்களின் காணிகள் கையகப்படுத்தப்பட்டுள்ள விடயம், காணாமல் ஆக்கப்பட்டவர்கள் விவகாரம், அரசியல் கைதிகள் விடுவிப்பு என எந்தப் பிரச்சினையும் தீர்க்கப்படவில்லை.

கடந்த அரசு தமிழ் மக்களின் உணர்வுகளை மதிக்கவில்லை. தமிழ் மக்களின் பிரதிநிதிகள் கேட்டுக் கொண்டதற்கு இணங்க கூட்டு அரசுக்கு வாக்களித்து புதிய அரசை உருவாக்கினோம். புதிய அரசு தமிழ் மக்களின் பிரச்சினைகள் தீர்க்கப்படும் என்று கூறியிருந்தது. தமிழ் மக்களின் பிரதிநிதிகளும் உறுதியளித்தனர். புதிய அரசு ஆட்சிக்கு வந்து இரு ஆண்டுகள் கடந்துள்ள போதிலும், இதுவரை எதுவும் நடக்கவில்லை.

கடந்த ஆட்சி போன்றே இந்த ஆட்சியும் உள்ளது. தமிழ் மக்களின் பிரதிநிதிகளும் அரசுக்குப் போதிய அழுத்தம் கொடுக்காது ஆதரவு வழங்கி வருகின்றனர்– இது கவலை அளிக்கின்றது– என்று போராட்டத்தில் கலந்து கொண்ட சந்தை வர்த்தக சங்கப் பிரநிதிகள் தெரிவித்தனர். (ற-21,35)

# கட்டுப்பாட்டு விலையில் விற்கப்படவில்லை அரிசி

## பொதுமக்கள் குற்றச்சாட்டு

யாழ்ப்பாணம், பெப்.24

அரசால் அறிவிக்கப்பட்டுள்ள கட்டுப்பாட்டு விலையில் அரிசியைப் பெற்றுக் கொள்ள முடியவில்லை என்று பொது மக்கள் கவலை தெரிவித்தனர்.



அண்மையில் கொழும்பு அரசு அரிசிக்கான கட்டுப்பாட்டு விலையை அறிவித்தது. பெரும்பாலான வர்த்தக நிலையங்களில் அந்த விலையில் அரிசியைப் பெற்றுக் கொள்ள முடியவில்லை. பொதுவாக ஒரு கிலோ 100 ரூபாவுக்கே விற்பனை செய்யப்படுகின்றது. சில வர்த்தக நிலையங்களிலேயே நிர்ணய விலையில் அரிசியைக் கொள்வனவு செய்யக் கூடியதாக உள்ளது– என்று அவர்கள் தெரிவித்தனர்.

எங்கள் விற்பனை நிலையத்தில் விற்பனை செய்யப்படும் அரிசி வகைகளின் விலை விவரங்கள் பொதுமக்களுக்காக காட்சிப்படுத்தப்பட்டுள்ளன. நாட்டரிசி 80 ரூபாவுக்கும், கீரிச் சம்பா 125 ரூபாவுக்கும், வெள்ளைப் பச்சை 70 ரூபாவுக்கும், சம்பா 90 ரூபாவுக்கும், பொன்னி 80 ரூபாவுக்கும் விற்பனை செய்யப்படுகின்றன– என்று யாழ்ப்பாணத்தில் பிரபல்யமான அரிசி வர்த்தக நிலையத்தினர் தெரிவித்தனர்.

அரசு அண்மையில் அறிவித்த நிர்ணய விலையின் படி உள்நாட்டில் உற்பத்தி செய்யப்படும் ஆகக் கூடிய விலையாக கீரிச் சம்பா தவிர்ந்த ஏனைய சம்பா அரிசி 90 ரூபாவுக்கும், நாட்டரிசி 80 ரூபாவுக்கும், பச்சரிசி 78 ரூபாவுக்கும் விற்பனை செய்யப்பட வேண்டும். இறக்குமதி செய்யப்படும் அரிசிகளின் ஆகக்கூடிய விலைகளாக கீரிச் சம்பா தவிர்ந்த ஏனைய சம்பா அரிசி 80 ரூபாவாகவும், நாட்டரிசி 72 ரூபாவாகவும், பச்சரிசி 70 ரூபாவாகவும் விலை நிர்ணயிக்கப்பட்டுள்ளன.

இந்த விலைகளின் அடிப்படையிலேயே அரிசி விற்பனை செய்யப்பட வேண்டும். நிர்ணய விலையை மீறி வியாபாரத்தில் ஈடுபட்ட 5 வியாபார நிலையங்களுக்கு எதிராகச் சட்ட நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன. விலைக் கட்டுப்பாட்டை மீறி வியாபாரத்தில் ஈடுபடுவோர்கள் மீது நடவடிக்கை எடுக்கப்படும்– என்று யாழ்.மாவட்ட பாவனையாளர் அதிகார சபையினர் தெரிவித்தனர். (ற-8)

# மக்களின் பேராதரவே எங்களுக்குத் தேவை

## காணாமல் ஆக்கப்பட்டோரின் உறவினர்கள் வேண்டுகோள்

கிளிநொச்சி, பெப்.24

நாம் இனியும் அரசியல்வாதிகளை நம்பத் தயாராக இல்லை. எமது மக்களை நம்பியே போராட்டத்தை ஆரம்பித்துள்ளோம். மக்கள் எமக்கு ஆதரவு வழங்க வேண்டும்.

இவ்வாறு கிளிநொச்சியில் வலிந்து காணாமல் ஆக்கப்பட்டோர் சங்கத்தின் பிரதிநிதி ஆனந்த நடராஜா லீலாவதி தெரிவித்தார்.

காணாமல் ஆக்கப்பட்டவர்களின் உறவினர்கள் கிளிநொச்சி கந்தசுவாமி கோயில் முன்றிலில் தொடர் போராட்டத்தில் ஈடுபட்டுள்ளனர். அவர்களுக்கு ஆதரவு தெரிவித்து கிளிநொச்சி சந்தை வர்த்தகர்கள் நேற்றுத் தமது கடைகளை அடைத்துப் போராட்டத்தில் ஈடுபடுபவர்களுடன் தாமும் இணைந்திருந்தனர். அங்கு கருத்துத் தெரிவித்தபோதே ஆனந்த நடராஜா லீலாவதி இவ்வாறு தெரிவித்தார்.

அவர் தெரிவித்ததாவது:

காணாமல் ஆக்கப்பட்ட எமது பிள்ளைகளுக்கும், உறவுகளுக்கும் நல்லதொரு தீர்வு கிடைக்க வேண்டும். அது விரைவாகக் கிடைக்க வேண்டும். இலங்கை அரசுக்குப் பொறுப்புக் கூறல் விடயத்தில் ஐ.நா. மேலும் கால அவகாசம் வழங்கக் கூடாது என்பவற்றை வலியுறுத்தியே நாம் போராட்டத்தில் ஈடுபட்டுள்ளோம். இந்தப் போராட்டத்துக்காக நாம் அரசியல்வாதிகளை நம்பியிருக்கவில்லை. அவர்கள் விரும்பினால் எமது போராட்டத்தில் கலந்து கொள்ளலாம். நாம் எமது போராட்டத்துக்கு மக்களின் ஆதரவையே நம்பியுள்ளோம். இன்று (நேற்று) சந்தை வர்த்தகர்கள் எமது போராட்டத்தில் கலந்து கொண்டு தமது ஆதரவைத் தெரிவித்தனர். அதைப் போன்று ஏனைய அமைப்புக்கள், பொதுமக்களின் ஆதரவும் எமக்கு வேண்டும்.

எமது தொடர்போராட்டத்துக்குத் தீர்வு கிடைக்காவிட்டால், எமது போராட்ட வடிவத்தை மாற்றுவோம்– என்றார். (ற-21,35)



# வாழைச்சேனையில் கைக்குண்டுகள் மீட்பு

எருவில், பெப்.24

மட்டக்களப்பு – வாழைச்சேனை பொலிஸ் பிரிவுக்குட்பட்ட கும்புறுமூலையில் நேற்று இரு கைக்குண்டுகள் மீட்கப்பட்டுள்ளன என்று வாழைச்சேனை பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி தெரிவித்தார்.

கிரான், கும்புறுமூலை, மரமுந்திரகை வீதியில் புதிதாக அமைக்கப்படும் உல்லாச விடுதிக்கான காணியை துப்புரவு செய்யும்போதே குண்டுகள் கண்டுபிடிக்கப்பட்டன. சம்பவ இடத்துக்குச் சென்ற பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டனர். குண்டைச் செயலிழக்கச் செய்யும் நடவடிக்கைகளை அவர்கள் முன்னெடுத்தனர். (ற-ய)

# தலை மன்னார் கடலில் சுருக்குவலை மீன்பிடி தடை: ஆராய வருகிறார் அமைச்சர்

மன்னார், பெப்.24

தலைமன்னார் கடலில் சுருக்குவலை மீன்பிடிக்கு ஏற்படுத்தப்பட்ட தடைகள் தொடர்பாக ஆராய்வதற்காக நாளை கடற்றொழில் நீரியல் வள அமைச்சர் மன்னார் வரவுள்ளார்.

தலைமன்னார் மீனவர் சங்கப் பிரதிநிதி மொஹமட் ரூமி தலைமையிலான குழுவினர் அமைச்சர் ரிசாத் பதியுதினிடம் தமது பிரச்சினைகள் தொடர்பாகத் தெரியப்படுத்தினர். அதையடுத்து அமைச்சர் ரிசாத் இந்த ஏற்பாட்டைச் செய்துள்ளார் என்று தெரிவிக்கப்பட்டது.



3/4அங்குலகண்வலையைப்பாவித்து பரம்பரை பரம்பரையாக மீன்பிடியில் ஈடுபட்டோம். தற்போது 1/4 அங்குல கண் வலைகளைப் பாவித்து மீன் பிடியில் ஈடுபட வேண்டும் என்று கடற்றொழில் திணைக்கள அதிகாரிகளும், கடற்படையினரும் நிர்ப்பந்திக்கின்றனர்.

பொதுவாக தலைமன்னார் கடலில் சூடை, கரட்டை, சாளை போன்ற மீன்களே அதிகமாக இருக்கின்றன. 3/4 அங்குல கண் வலையைப் பயன்படுத்தியே அவற்றைப் பிடிக்க முடியும். 1/4 அங்குல கண்வலையைப் பயன்படுத்தினால் அவற்றைப் பிடிக்க முடியாது.

நாம் எமது வாழ்வாதாரத்தைக் கொண்டு நகர்த்த முடியாத நிலைமை ஏற்பட்டுள்ளது. நவம்பர் மாதம் முதல் ஏப்ரல் மாதம் வரையே இந்தத் தொழிலைச் செய்யமுடியும். ஏனைய காலங்களில் இந்த மீன்கள் கடலில் இருக்காது. காலை 6 மணி முதல் மாலை6மணிவரையே தொழில் செய்கின்றோம்.

எமது கடல் பிராந்தியத்துக்கு அப்பால் சுமார் 10 கிலோ மீற்றரில் இந்தியக் கடல் எல்லை இருக்கின்றது. ஆறு மணிக்குப் பின்னர் பெரும் படகுகளிலும் ரோலர்களிலும் இந்திய மீனவர்கள் எமது கடலுக்குள் ஊடுருவி மீன்களை அள்ளிச் செல்கின்றனர். சிறுபடகுகளில் தொழில் செய்யும் நாங்கள், அவர்களுடன் முரண்பட்டு, போட்டி போட்டு தொழில் செய்ய முடியாது. எமது உயிருக்கும் உத்தரவாதம் இல்லை. குறைந்தது ஓர் அங்குல கண் வலையைப் பாவித்து மீன் பிடியில் ஈடுபடுவதற்கு அனுமதி தர வேண்டும்.

இது தொடர்பாக அமைச்சர் ரிசாத் பதியுதீனின் கவனத்துக்குக் கொண்டு சென்றோம். அவர் கடற்றொழில் நீரியல் வள அமைச்சர், மகிந்த அமரவீரவுடன் உடன் தொடர்பு கொண்டார். அதையடுத்து அமைச்சர் மகிந்த அமரவீர நாளை மன்னார் வரவுள்ளார் - என்று மீனவர்கள் தெரிவித்தனர். (ற-21,56)



மன்னார், சௌத்பார் காட்டுப்பகுதியில் பச்சை நிற புதிய முச்சக்கர வண்டி ஒன்று முற்றாக எரிந்த நிலையில் நேற்று மீட்கப்பட்டுள்ளது. கடற்கரைக்கு முன்பாகவுள்ள காட்டுப்பகுதியிலேயே முச்சக்கர வண்டி மீட்கப்பட்டது. அங்குள்ள கடற்படையினர் வழங்கிய தகவலின் அடிப்படையிலேயே பொலிஸார் முச்சக்கர வண்டியை மீட்டனர். முச்சக்கர வண்டி வடக்கு மாகாணத்தில் பதிவு செய்யப்பட்டுள்ளது. உரிமையாளர் இனங்காணப்படவில்லை. பொலிஸார் விசாரணைகளை முன்னெடுத்துள்ளனர். (ற-56)

# மொழிபெயர்ப்பு, நுண்கலைமானி பாடநெறிகளுக்கு விண்ணப்பிக்கலாம்

அச்சுவேலி, பெப்.24

யாழ்ப்பாணப் பல்கலைக் கழகத்தின் 2016 - 2017 கல்வியாண்டு மொழிபெயர்ப்பு (தமிழ், ஆங்கில) கற்கை நெறிக்கும், யாழ். பல்கலைகழக நுண்கலைமானி இசை, நடனம், சித்திரமும் வடிவமைப்பும் பாடநெறிகளுக்கும் தெரிவு செய்யப்படவுள்ள மாணவர்களுக்கான உளச்சார்புப்பரீட்சைக்கான விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன.

நான்கு வருட பட்டப்படிப்புக் கற்கை நெறிக்கு அனுமதி பெற விரும்பும் தகுதியான விண்ணப்பதாரிகளிடம் இருந்து எதிர்வரும் 28ஆம் திகதிவரை விண்ணப்பங்கள் ஏற்கப்படும் என்று பதிவாளர் அறிவித்துள்ளார்.

தமிழ் மற்றும் ஆங்கிலக் கற்கை நெறிகளுக்கு யாழ்.பல்கலைக் கழகத்தால் நடத்தப்படும் தமிழ் மற்றும் ஆங்கில கற்கைநெறிகளுக்கு யாழ். பல் கலைக் கழகத்தால் நடத்தப்படும் தமிழ் மற்றும் ஆங்கில மொழித் திறன் அடிப்படையிலான உளச்சார்புப் பரீட்சைக்கும், நுண் கலைமானி, இசை, நடனம், சித்திரமும் வடிவமைப்பும் பாட நெறிகளில் சங்கீதம், நடனம் என் பவற்றுக்கு ஆற்று கையும், சித்திரமும் வடிவமைப்பும் பாட நெறிக்கு ஆற்றுகை மற்றும் உளச்சார்புப் பரீட்சையும் நடைபெறும்.

பரீட்சைக்கு தோற்றி சித்தி பெறாதவர்கள் பாட நெறிகளுக்கான பல்கலைக் கழக அனுமதியைப் பெற முடியாது. தகுதியானவர்கள் மேற்படி விண்ணப்பத்துடன் யாழ்.பல்கலைக் கழக மக்கள் வங்கியின் கணக்கு இலக்கத்துக்கு செலுத்திப் பெறப்பட்ட 300 ரூபா பற்றுச் சீட்டையும் இணைத்து அனுப்ப வேண்டும். மேலதிக விவரங்களைப் பல்கலைக்கழக அனுமதிக் கிளையில் அல்லது பல்கலைக்கழக இணையத்தளத்தில் பெற்றுக் கொள்ளலாம் என அறிவிக்கப்பட்டுள்ளது. (ற-1)



யாழ். மாவட்டத்தில் உள்ள பாடசாலை மாணவிகள் மற்றும் சுயதொழில் செய்வோரில் தெரிவு செய்யப்பட்ட பயனாளிகளுக்கு வடக்கு மாகாண கிராம அபிவிருத்தி அமைச்சர் பா.டெனீஸ்வரனின் நிதியுதவில் 4 துவிச்சக்கர வண்டிகள் வழங்கப்பட்டன. இந்த நிகழ்வு கடந்த செவ்வாய்க்கிழமை மாலை யாழ்ப்பாணம் நாவலர் வீதியில் உள்ள அமைச்சரின் அலுவலகத்தில் இடம்பெற்றது. (ற-21)

# அமைச்சர் ரிசாத்தின் வருகைக்காக காத்திருக்கும் உதவிப் பொருள்கள்

## 3 மாதங்களாக தவமிருக்கும் பயனாளிகள்

முல்லைத்தீவு, பெப்.24



ஒட்டுசுட்டான் பிரதேச செயலாளர் பிரிவுக்கு உட்பட்ட 32 பயனாளிகளுக்கு வழங்குவதற்காக சுமார் 10 லட்சம் ரூபா செலவில் 3 மாதங்களுக்கு முன்னர் கொள்வனவு செய்யப்பட்ட பொருள்கள் இதுவரை வழங்கப்படவில்லை. அமைச்சர் ரிசாத் பதியுதீனின் வருகைக்காகவே அவை காத்திருக்கின்றன என்று தெரிவிக்கப்பட்டது.

வணிக கைத்தொழில் அமைச்சின் நிதி ஒதுக்கீட்டில் விவசாயம், தையல், சிறுவியாபாரம் சார்ந்த வாழ்வாதார நடவடிக்கைக்காக தளபாடங்கள், உபகரணங்கள், பொருள்கள் கொள்வனவு செய்யப்பட்டன. அவை இன்னமும் பயனாளிகளிடம் வழங்கப்படவில்லை. அந்தப் பொருள்கள் கடந்த 3 மாத காலமாக பிரதேச செயலகக் கட்டடத் தொகுதித் தாழ்வாரத்தில் உரிய பராமரிப்பின்றிப் போடப்பட்டுள்ளன. மழை, வெயிலால் அவை பாதிப்படைகின்றன.

கைத்தொழில் வணிகத்துறை அமைச்சர் ரிசாத் பதியுதீனின் வருகைக்காகவே இதுவரை அவை பயனாளிகளிடம் வழங்கப்படவில்லை என்றும் மூன்று மாத காலப்பகுதிக்குள் பல தடவைகள் திகதிகள் குறிப்பிடப்பட்டபோதிலும் அமைச்சரின் வருகை ஒத்திவைக்கப்பட்டு வந்துள்ளது என்றும் கூறப்படுகின்றது.

கொள்வனவு செய்யப்பட்ட உதவிப் பொருள்கள் பழுதடைவதற்கு முன்னதாகத் தமக்கு வழங்க மாவட்டச் செயலர் நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று பயனாளிகள் கோரிக்கை விடுத்துள்ளனர். (ற-21,102)

# அகில இலங்கை ரீதியில் இசைப்போட்டி

இளங்கலைஞர் மன்றம் அகில இலங்கை ரீதியில் ஓர் இசைப் போட்டியை (வாய்ப்பாட்டு) நடத்த உள்ளது. இது, கீழ்ப்பிரிவு, மத்தியபிரிவு, மேற்பிரிவு என இளங்கலைஞர்களுக்காக நடத்தப்படும். ஒவ்வொரு பிரிவிலும் முதலிடம் பெறுபவருக்குத் தங்கப் பதக்கமும், இரண்டாம் மூன்றாம் இடங்களுக்கு முறையே வெள்ளி மற்றும் வெண்கலப்பதக்கமும் வழங்கப்படும்.

விண்ணப்பப் படிவத்தையும் நிபந்தனைகளையும் நல்லூர் சட்டநாதர் வீதியிலுள்ள மன்ற அலுவலகத்தில் பெற்று முழுமைப்படுத்தி மார்ச் மாதம் 3 ஆம் திகதிக்கு முன்னர் நேரிலோ, பதிவுத் தபால் மூலமோ அல்லது ikm.jaf.lkgmil.com என்ற மின்னஞ்சல் ஊடாகவேர அனுப்பலாம் எனத் தெரிவிக்கப்பட்டது. (ற)

# கிராமத்துக்கு ஒரு மில்லியன்; 50 வீதத்தால் குறைந்தது நிதி

அச்சுவேலி,பெப்.24

கிராமத்துக்கு ஒரு மில்லியன் ரூபா அபிவிருத்தி வேலைத் திட்டத்துக்கான நிதி ஒதுக்கீடு இந்த வருடம் 50 சதவீதத்தால் குறைக்கப்பட்டுள்ளது. திட்டத்தின் கீழ் மேற்கொள்ளப்பட வேண்டிய வேலைகள் தொடர்பான பட்டியல் அனுப்பப்பட்டுள்ளது. பட்டியலில் உள்ளடக்கப்பட்டிருக்கும் வேலைகள் தவிர்ந்த ஏனைய வேலைகளுக்கு அனுமதி வழங்கப்பட மாட்டாது என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

தேசிய கொள்கைகள் மற்றும் பொருளாதார விவகாரங்கள் அமைச்சால் கடந்த வருடங்களில் கிராமிய உட்கட்டமைப்பு அபிவிருத்திக்குகிராம அலுவலர்பிரிவுஒவ்வொன்றுக்கும் தலா ஒரு மில்லியன் ரூபா வழங்கப்பட்டது. அந்த நிதி ஒதுக்கீடு இந்த வருடம் ஐந்து லட்சம் ரூபாவாகக் குறைக்கப்பட்டுள்ளது.

இந்த நிதியில் 30 வீதத்தை வாழ்வாதார மேம்பாட்டுக்கான உதவிகளுக்கும் மிகுதி 70 வீதத்தை குடி தண்ணீர் விநியோகம், விவசாயக் கிணறுகள் திருத்துதல் உள்ளிட்ட கிராமிய உட்கட்டமைப்பு மேம்பாட்டுக்கும் பயன்படுத்த வேண்டும் என அறிவுறுத்தப்பட்டுள்ளது. பட்டியலுக்குப் புறம்பான வேலைத்திட்டங்களுக்கு அனுமதி வழங்கப்படமாட்டாது எனவும் அறிவுறுத்தப்பட்டுள்ளது.

ஒவ்வொரு கிராம அலுவலர் பிரிவுகளிலும் உரிய வேலைத் திட்டங்களை இனங் காண்பதற்கான கலந்துரையாடல்கள் பிரதேச செயலகங்களின் திட்டமிடல் பிரிவுகளால் நடத்தப்படுகின்றன. கிராம அலுவலர் பிரிவில் உள்ள சனசமூக நிலையங்கள் மற்றும் கிராம அபிவிருத்திச் சங்கம் மற்றும் பொது அமைப்புக்களின் நிர்வாகிகளை உள்ளடக்கி கலந்துரையாடல்கள் நடத்தப்படுகின்றன.

கிராமிய உட்கட்டமைப்பு அபிவிருத்திக்கான நிதி ஒதுக்கீடும் 50 வீதத்தால் குறைக்கப்பட்டு குறித்து ஒதுக்கப்பட்ட வேலைகளை மட்டும் மேற்கொள்ளவேண்டும் என வரையறுக்கப்பட்டிருப்பது தொடர்பாக சமூக ஆர்வலர்கள் விசனம் தெரிவிக்கின்றனர். (ற-11)

### விமல்ராஜ் சூட்டுச்சம்பவம்

# குற்றவாளிகளைக் கைது செய்யுமாறு மட்டக்களப்பில் நேற்றுப் போராட்டம்





செங்கலடி, பெப்.24
மட்டக்களப்பு, திருகோணமலை மாவட்ட காணிசீர்திருத்தப் பணிப்பாளரும், யாழ் மாவட்டப் பதில் பணிப்பாளருமான என்.விமல்ராஜ் மீது துப்பாக்கிப் பிரயோகம் மேற்கொள்ளப்பட்ட சம்பவத்துடன் தொடர்புடையவர்களைக் கைது செய்யக்கோரி மாவட்டச் செயலக உத்தியோகத்தர்கள் நேற்று கவனவீர்ப்புப் போராட்டத்தில் ஈடுபட்டனர். இந்தப் போராட்டத்தில் கலந்து கொண்டவர்கள் எவ்வித கோசங்களையும் எழுப்பாமல், பதாகைகளை ஏந்தியிருந்தனர்.

இந்தப் போராட்டத்தில் மாவட்ட மேலதிக மாவட்டச் செயலர் எஸ்.கிரிதரன், மாவட்ட திட்டமிடல் பணிப்பாளர் ஆர்.நெடுஞ்செழியன், மாவட்ட பிரதம கணக்காளர் எஸ்.நேசராஜா மற்றும் திணைக்களத்தலைவர்கள், உத்தியோகத்தர்களும் கலந்து கொண்டனர்.

மட்டக்களப்பு மாவட்டக் காணி சீர்திருத்த ஆணைக்குழுவின் பணிப்பாளர் நேசகுமார் விமல்ராஜ் நேற்று முன்தினம் இரவு 7.05 மணியளவில் துப்பாக்கிச் சூட்டுக்கு இலக்கான நிலையில், மட்டக்களப்பு போதனா வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ளார்.

களுதாவளை கடற்கரை வீதியிலுள்ள அவரது வீட்டுக்கு மோட்டார் சைக்கிளில் சென்ற இரு நபர்கள், விமல்ராஜை அழைத்து துப்பாக்கியால் சுட்டுவிட்டுத் தப்பிச் சென்றுள்ளனர்.

துப்பாக்கிச்சூட்டுக்கு இலக்கான நிலையில் களுவாஞ்சிக்குடி ஆதார வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்ட அவர், மேலதிக சிகிச்சைக்காக மட்டக்களப்பு போதனா வைத்தியசாலைக்கு மாற்றப்பட்டுள்ளார்.

சம்பவம் தொடர்பான விசாரணைகளைகளுவாஞ்சிக்குடி பொலிஸார் மேற்கொண்டுள்ளனர். பொலிஸ் தரப்புத் தகவல்களின்படி, துப்பாக்கிதாரிகளோ அல்லது அதற்கான பின்னணியோ இதுவரை கண்டறியப்படவில்லை.

மட்டக்களப்பில் அரச அதிகாரியொருவர் சுடப்பட்ட இந்தச் சம்பவமானது அதிகாரிகள், பொதுமக்கள் பலரையும் அதிர்ச்சிக்குள்ளாக்கியுள்ளது.

மண்டூர் பிரதேசத்தில் சமூக சேவை அதிகாரி ஒருவர் சுட்டுக் கொல்லப்பட்ட சம்பவத்திலும், இதுவரையில் குற்றவாளிகள் கைது செய்யப்படாத நிலையில் மீண்டும் ஓர் அரச அதிகாரி மீது துப்பாக்கிப்பிரயோகம் மேற்கொள்ளப்பட்டுள்ளது.

அதேபோன்று மகிழூர் பிரதேசத்தில் கிராம உத்தியோகத்தர் ஒருவர் தாக்கப்பட்டுக் கொல்லப்பட்டிருந்தார்.

கிரான் பிரதேச செயலாளர் பிரிவில் தொப்பிக்கல காட்டுப்பிரதேசத்தில் மரக்கொள்ளையில் ஈடுபட்டவர்களைக் கைதுசெய்யச்சென்றவேளை, கிராம உத்தியோகத்தரும் வனபரிபாலனத்திணைக்கள அதிகாரிகளும் தாக்கப்பட்டிருந்தனர் என்பது குறிப்பிடத்தக்கது. (ஐ-ய-47)

## ஆலயத்தை சீரமைக்குமாறு மக்கள் கோரிக்கை

திருமலை, பெப்.24
திருகோணமலை - மாவட்டத்தில் எல்லைக் கிராமத்தில் அமைந்துள்ள தென்னமரவாடி வரிசித்தி விநாயகர் ஆலயத்தை முழுமையாகச் சீரமைத்துத் தருமாறு அந்தக் கிராம மக்கள் வேண்டுகோள் விடுக்கின்றனர்.

குறித்த கிராமத்தில் 1984 ஆம் ஆண்டு டிசெம்பர் மாதம் வன்செயல் காரணமாக மக்கள் இடம்பெயர்ந்து, முல்லைத்தீவு மாவட்டத்துக்குச் சென்று, நலன்புரி முகாம்களில் வாழ்ந்து, மீண்டும் 2011 ஆம் ஆண்டு தமது சொந்தக் கிராமமான தென்னமரவாடியில் மீள்குடியமர்த்தப்பட்டனர்.


அந்தக் காலப்பகுதியில், இந்தக் கிராமத்தில் இருந்த வரிசித்தி விநாயகர் ஆலயம் முழுமையாக சேதமாக்கப்பட்டிருந்தது. பல தொண்டு நிறுவனங்கள் மற்றும் அரசாலும் குறித்த ஆலயத்தைச் சீரமைப்பதற்காக 40 லட்சம் ரூபா நிதி வழங்கப்பட்டிருந்தது.

ஆனாலும், ஆலயத்தின் நிர்மாணப்பணிகள் இன்னமும் நிறைவு பெறவில்லை. அதற்கான பணிகள் கைவிடப்பட்ட நிலையில் உள்ளன.

அதனால் மக்கள் அந்த ஆலயத்துக்குச் சென்று வழிபாட்டில் ஈடுபட முடியாத நிலையில் உள்ளனர். எனவே, ஆலயத்தின் நிர்மாணப் பணிகளை கூடிய விரைவில் நிறைவு செய்து தருமாறு கிராம மக்கள் வேண்டுகோள் விடுக்கின்றனர். (ய-45)

## அரச அதிகாரிகளுக்கு மீண்டும் பாதுகாப்பில்லை

*நாடாளுமன்ற உறுப்பினர் யோகேஸ்வரன் தெரிவிப்பு*



செங்கலடி, பெப்.24
மட்டக்களப்பு மாவட்ட காணி சீர்திருத்த ஆணைக்குழுவின் பணிப்பாளர் நேசகுமாரன் விமல்ராஜ் மீதான துப்பாக்கிப் பிரயோகம், அரச அதிகாரிகளுக்கு பாதுகாப்பு இல்லாத தன்மையை மீண்டும் உறுதிப்படுத்தியுள்ளது. இந்தச் சம்பவத்தின் குற்றவாளிகளைச் சட்டத்தின் முன் நிறுத்த வேண்டியது பொலிஸாரின் கடமை.

-இவ்வாறு தமிழ்த்தேசிய கூட்டமைப்பின் மட்டக்களப்புமாவட்டநாடாளுமன்ற உறுப்பினர் சீனித்தம்பி யோகேஸ்வரன் தெரிவித்தார்.

மட்டக்களப்பு மாவட்ட காணி சீர்திருத்த ஆணைக்குழுவின் பணிப்பாளர் நேசகுமாரன் விமல்ராஜ் மீது, நேற்று முன்தினம் நடத்தப்பட்ட துப்பாக்கிச் சூட்டுச் சம்பவம் தொடர்பில் கருத்துத் தெரிவிக்கும் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் தெரிவித்ததாவது:
நேசகுமாரன் விமல்ராஜ் சிறந்த அதிகாரியாக விளங்கினார். அரச காணிகளைச் சட்டவிரோதமாக கைப்பற்ற முற்படுபவர்களால் அவர் மீது துப்பாக் கிப்பிரயோகம்மேற்கொள்ளப்பட்டிருக்கலாம் என்று மக்கள் கருதுகின்றனர்.

கிழக்கு மாகாணம் அரசின் முழுமையான கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவரப்பட்டு 10 ஆண்டுகள் கடந்த பின்பும், மட்டக் களப்பு மாவட்டத்தில் ஆயுதப்பாவனை உள்ளது. ஆயுதம் வைத்துள்ள சூத்திரதாரிகளைச் சட்டத்தின் முன் நிறுத்த வேண்டும். அதன் உண்மை நிலை கண்டறியப்பட வேண்டும்.

விசாரணைகள் என்ற பெயரில் கால இழுத்தடிப்புக்களைச் செய்யாமல் துரிதமாக இந்தச் சம்பவத்தின் பின்புலம் கண்டறியப்படவேண்டும்- என்றார். (ய-47)

## ஆசிரியர் வெற்றிடங்களை நிரப்புவதற்குப் பின்னடிக்கிறது வட மாகாண கல்வித்துறை

யாழ்ப்பாணம், பெப். 24
**வடக்கு மாகாணத்தின் ஒவ்வொரு மாவட்டங்களிலும் நிலவும் ஆசிரியர் வெற்றிடங்களை நிரப்புவதற்கு தகுதியானவர்கள் உள்ள போதிலும், வடக்கு மாகாணக் கல்வித்துறை அந்த விடயத்தில் தொடர்ந்தும் அசமந்தப் போக்கையே கடைப்பிடிக்கிறது.**

ஆசிரிய சேவையில் பட்டதாரிகளை இணைத்துக் கொள்வதற்காக நடத்தப்பட்ட பரீட்சைக்குத் தோற்றிய வடக்குப் பரீட்சார்த்திகளில், சிறப்பான பரீட்சை முடிவுகளை வெளிக்காட்டுபவர்களைக் கொண்டு வடக்கில் ஆசிரியர் வெற்றிடங்களை நிரப்ப முடியும். ஆனால் அதனை விரும்பாத மாகாணக் கல்வித்துறை, தொடர்ந்தும் தவறிழைத்து வருகின்றது. இவ்வாறு வடக்கு மாகாண சபை உறுப்பினர் க.சிவனேசன் குற்றம் சாட்டினார்.

இது தொடர்பாக அவர், வடக்கு மாகாண முதலமைச்சருக்கு கடிதம் அனுப்பியுள்ளார்.

அதில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:
தொடர்ச்சியாக வடமாகாணத்தின் பாடசாலைகளில் நிலவும் ஆசிரியர் பற்றாக்குறை பற்றியும், அவற்றை நிவர்த்தி செய்யக் கூடிய நடைமுறைச் சாத்தியமான, யாழ் மாவட்டம் தவிர்ந்த, ஏனைய பின்தங்கிய மாவட்டங்களின் கல்வித்தரத்தை மேம்படுத்தக்கூடிய வழிமுறைகள் பற்றியும், நாம் பல தடவைகள் பல நிர்வாக, அரசியல் தலைமை மட்டங்களிலும் வலியுறுத்தியுள்ளோம். ஆனால் இதற்கான பலாபலன் செவிடன் காதில் சங்கு ஊதுவது போலவே அமைகின்றது.

அண்மையில் வட மாகாண ஆசிரிய சேவையில் பட்டதாரிகளை இணைத்துக் கொள்வதற்காக நடத்தப்பட்ட பரீட்சையின் பெறுபேறுகள் பற்றி நிறையவே சந்தேகங்கள் பல மட்டத்திலும் ஏற்பட்ட வண்ணமேயுள்ளன.

2 ஆயிரத்து 300 விண்ணப்பதாரிகள் பரீட்சைக்குத் தோற்றிய பின், பரீட்சை முடிவுகளின்படி, சுமார் 800 பேர் வரையிலான பட்டதாரிகள், ஆசிரியர் சேவைக்கு உள்வாங்கப்படவுள்ளனர். அதாவது ஏனையவர்கள் சித்தியடையவில்லை என்று கருத்திலெடுக்கப்படுகின்றது. இதன் மூலம் வித்தியாசமான பாடவிதானத்துடன், தேவைக்கு மேலான இறுக்கமான, நடைமுறைக்கு பொருத்தமில்லாத பரீட்சை ஒன்றின் மூலம், நான்கு, ஐந்து வருடக் கல்விக்கு பின்னர் பல்கலைக்கழகத்தால் பட்டதாரிகள் என அங்கீகரிக்கப்பட்டவர்கள், தொழில் சந்தைக்குத் தகுதியற்றவர்கள் என பிரகடனப்படுத்தப்பட்டுள்ளது. இந்தப் பட்டதாரிகள் தத்தமது பெயருடன் வைத்திருக்கும் சான்றிதழ்களினதும், பல்கலைக்கழக பாடவிதான செயற்பாடுகளினதும் தகுதியையும், தரத்தையும் இது கேள்விக்குள்ளாக்கியுள்ளது. குறிப்பிட்ட பாடத்தில் கல்வி கற்றுப் பட்டம் பெற்று வெளியேறும் பட்டதாரிகளை, சம்பந்தமில்லாத துறைகள் சார்ந்த கேள்விகளால் பரீட்சிப்பது பொருத்தமான செயற்பாடாகத் தெரியவில்லை.

நடந்து முடிந்த பரீட்சையில் சித்தியடைந்தவர்களில் 60 வீதத்துக்கும் மேலானவர்கள் யாழ்ப்பாணத்தைச் சேர்ந்தவர்கள். ஆனால் யாழ்ப்பாணக் குடாநாட்டில், தீவகப் பகுதியின் பாடசாலைகளில் கூடுதலாக ஆசிரியர் பற்றாக்குறை காணப்படுகின்றது. அதேநேரத்தில் குடாநாட்டின் ஏனைய பகுதிகளில் மேலதிகமாக ஆசிரியர்கள் உள்ளதும், வடக்கு மாகாணக் கல்வித்துறையின் வெளிப்படையான இரகசியமாக உள்ளது. இங்கு காணப்படும் மேலதிக ஆசிரியர்களைக் கொண்டு தீவகத்தில் ஆசிரியர் தேவைகளை நிரப்ப முடியும் என்பது சாத்தியமான தீர்வுகளில் ஒன்றாகவுள்ளது.

வன்னி பெருநிலப்பரப்பின் நான்கு மாவட்டங்களிலும் தீர்க்க முடியாத அளவிலேயே ஆசிரியர்கள் பற்றாக்குறை நிலவுகின்றது. முல்லைத்தீவு மாவட்டத்தில் ஆசிரியர்கள் தேவைப்பாடு 128 ஆக இருக்கின்ற வேளை, சித்தியடைந்த பட்டதாரிகள் 41என அறிவிக்கப்படுள்ளது. எனவே மீதமுள்ள வெற்றிடங்கள் வெளி மாவட்ட பட்டதாரிகளால் நிரப்பப்படவுள்ளது. இவ்வாறான நியமனதாரிகள் அதி கஷ்டப் பிரதேச நியமனமாக தங்களை கருதுவதால் அவர்களது எண்ணங்களும் செயற்பாடுகளும் கல்வி கற்பிப்பதில் இருக்காது.

தேசிய கல்வியியல் கல்லூரிக்கு பயிலுநர்கள் உள்வாங்கப்படும் போது, கடைப்பிடிக்கப்படுகின்ற மாவட்ட வெற்றிடம் பற்றிய தரவுகளின் அடிப்படையிலான நடைமுறைகளைப் பாடசாலை ஆசிரியர் நியமனங்களிலும் கடைப்பிடிப்பதன் மூலம் நடைமுறை முரண்பாடுகளையும் தவிர்க்கக் கூடியதாக இருக்கும்.

போரின் வடுக்களில் இருந்து மீளுகின்ற சமுதாயத்தின் தேவைகளை முன்னிலைப்படுத்தி தரமான கல்வியை வழங்கும் நல்லெண்ண நோக்குடன் செயற்பட வேண்டும் -என்றுள்ளது. (ஐ-10)

# வவுனியாவில் மீண்டும் இன்று உணவு ஒறுப்புப் போராட்டம்

வவுனியா, பெப்.24
வவுனியாவில் இன்று முதல் மீண்டும் சுழற்சி முறையிலான உணவு ஒறுப்புப் போராட்டத்தில் ஈடுபட உள்ளதாக காணாமல் ஆக்கப்பட்டவர்களின் உறவினர்கள் தெரிவித்தனர்.

வவுனியா மாவட்டத்தை சேர்ந்த காணாமல் ஆக்கப்பட்டவர்களின் உறவினர்களுக்கிடையில் கடந்த செவ்வாய்க்கிழமை வவுனியா விருந்தினர் மண்டபத்தில் இடம் பெற்ற கலந்துரையாடலிலேயே இவ்வாறு முடிவு செய்யப்பட்டது என்று காணாமல் ஆக்கப்பட்டவர்களின் உறவினர்கள் தெரிவித்தனர்.

கையளிக்கப்பட்டு, கடத்தப்பட்ட காணாமல் ஆக்கப்பட்ட சங்கத்தினரின் ஏற்பாட்டில் இடம் பெற்ற கலந்துரையாடலில் இந்த முடிவு எட்டப்பட்டுள்ளது. இதில் முச்சக்கரவண்டி உரிமையாளர் சங்கம், பொது அமைப்புக்கள் என பலவும் கலந்து கொண்டன.

'எமது சங்கத்திலுள்ள அங்கத்தவர்கள் 50 இற்கும் மேற்பட்டோர் இந்தக் கலந்துரையாடலில் பங்கு கொண்டனர். எதிர்கால நடவடிக்கைகள் தொடர்பாகவும், ஐக்கிய நாடுகள் சபை இலங்கைக்கு வழங்கிய கால அவகாசத்தை இலங்கை அரசு நடைமுறைப் படுத்தத் தவறியுள்ளமை தொடர்பாகவும் நாம் கலந்துரையாடினோம். அதனை அடுத்து இன்று சுழற்சி முறையில் போராட்டம் ஒன்றை மேற்கொள்ளவுள்ளோம். அதற்குப் பொது அமைப்புக்கள், இளைஞர்கள், அரசியற் கட்சிகள் தமது ஆதரவை வழங்குமாறும் கேட்டுக் கொள்கின்றோம்' என்று வவுனியா மாவட்ட கையளிக்கப்பட்டு கடத்தப்பட்டு காணமாமல் ஆக்கப்பட்டோர் சங்கத் தலைவி திருமதி காசிப்பிளை ஜெயவதனா தெரிவித்தார்.

கடந்த சில நாள்களுக்கு முன்னர் வவுனியாவில் தொடர் உணவு ஒறுப்புப்போராட்டத்தைமேற்கொண்ட குறித்த அமைப்பைச் சார்ந்தவர்கள், பாதுகாப்பு இராஜாங்க அமைச்சரின் வாக்குறுதியைடுத்து போராட்டத்தைக் கைவிட்டிருந்தனர்.

எனினும் கொழும்பில் அரச தரப்பினருடன் இடம்பெற்ற கலந்துரையாடலில் எவ்வித முடிவும் எட்டப்படாத நிலையில் மீண்டும் சுழற்சி முறையிலான போராட்டத்தில் அவர்கள் ஈடுபடவுள்ளனர். (ஐ-21)

## கடந்த வருடத்தில் தொழிலாளர்களாக மாறிய சிறுவர்கள் 2.3 வீதமானோர்

கொழும்பு, பெப். 24
கடந்த வருடம் இலங்கையில் 5 தொடக்கம் 17 வயது வரையான சிறுவர்களின் மொத்தத் தொகையானது 4.6 மில்லியனாக மதிப்பிடப்பட்டிருந்தது. அதில் 2.3 வீதமான சிறுவர்கள் பொருளாதார நடவடிக்கை காரணமாக தொழிலுக்கு அமர்த்தப்பட்டிருந்தனர் என்று தொகை மதிப்பு புள்ளிவிவரத் திணைக்களம் தகவல் தெரிவித்துள்ளது.

அத்துடன் கடந்த வருடம் 90.1 வீதமான சிறுவர்கள் பாடசாலைக்குச் சென்றிருந்தனர். அதேவேளை 2.3 வீதமான சிறுவர்கள் தொழிலுக்கு அமர்த்தப் பட்டிருந்தனர்.

இவர்களில் தீங்கு விளைவிக்கக்கூடிய தொழிலிலுள்ள சிறுவர் தொழிலாளர்கள் 0.9 வீதத்தை விடவும் குறைவாக உள்ளனர் எனவும் அந்தத் திணைக்களம் தகவல் வெளியிட்டுள்ளது. (ஐ-10)

## இலங்கை- இந்திய மீனவர்கள் தொடர்பில்

# இரு நாட்டு அரசுகளதும் தலையீடுகள் இல்லாமல் பேச்சு நடத்த வேண்டும்

## யாழ்.மாவட்டக் கடற்றொழிலாளர்கள் தீர்மானம்

யாழ்ப்பாணம்,பெப்.24
இலங்கை- இந்திய மீனவர்களது பிரச்சினைகள் தொடர்பில் இடம்பெறும் பேச்சுக்களில் இரு நாட்டு அரசுகளதும்தலையீடுகள் இருப்பதால், இந்தப் பிரச்சினைக்கு நிரந்தரத் தீர்வு காணமுடியாத நிலை ஏற்பட்டுள்ளது. எனவே இரு நாடுகளதும் அரசுகளது தலையீடின்றிப் பேச்சுக்களைநடத்துவதற்கான ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட வேண்டும்.

-இவ்வாறு யாழ்.மாவட்ட கிராமியக் கடற்றொழில் அமைப்புக்களின் சம்மேளனம் கோரிக்கை விடுத்துள்ளது.

யாழ்.மாவட்ட கடற்றொழில் நீரியல்வளத்துறைத்திணைக்களத்தில் சம்மேளனத் தலைவர் தலைமையில் அண்மையில்நடைபெற்ற செயற்குழுக்கூட்டத்தில் இது தொடர்பான தீர்மானம்ஏகமனதாகநிறைவேற்றப்பட்டது.

அங்கு மேலும் நிறைவேற்றப்பட்டதீர்மாணங்களாவன: சட்ட விரோதமான முறையில் தடை செய்யப்பட்ட வலைகளைப்பயன்படுத்தி இலங்கைக் கடற்பரப்பில் மீன்பிடித் தொழிலில் ஈடுபட்ட போது, இலங்கைக் கடற்படையினரால் கைது செய்யப்பட்டு, விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ள இந்திய மீனவர்களையும், அவர்களின் படகுகளையும் நல்லெண்ண அடிப்படையில் அரசு விடுவிக்க வேண்டும்.

இந்திய மீனவர்களின் ஊடுருவலைத் தடுக்கும் வகையில் இலங்கைக் கடற்பரப்பு எல்லையில் ஒலி ஒளி எழுப்பக்கூடிய சாதனங்களை மிதக்கவிட வேண்டும். இந்திய மீனவர்களின் அத்துமீறலாலும், போர்க்காலச் சூழ்நிலையாலும் இலங்கைக் கடற்பரப்பில் 1990 ஆம் ஆண்டிலிருந்து மீன் பிடித் தொழிலில் ஈடுபட முடியாமல் பாதிக்கப்பட்ட மீனவர்களுக்கு, அரசு நட்டஈடு வழங்க வேண்டும்.

பன்னாட்டில் நிர்ணயிக்கப்பட்ட இலங்கைக்கான கடல் எல்லையை மீறி, மீன் பிடிக்கவரும் மீனவர்களைக் கைது செய்து, சட்ட நடவடிக்கை எடுக்க வேண்டும். உள்ளிட்ட தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன.

இந்தத் தீர்மானங்களின் பிரதி, யாழ்ப்பாணத்திலுள்ள இந்திய துணைத் தூதரக அதிகாரியிடமும் கையளிக்கப்பட்டது. (ஐ-15)

# முன்னேற்றமடைகிறது கொழும்புத் துறைமுகம்

கொழும்பு, பெப். 24
உலகிலுள்ள சிறந்த 25 துறைமுகங்களுக்குள், கொழும்புத் துறைமுகம் பெரும் முன்னேற்றம் கண்டுள்ளது. அதற்கமைவாக கடந்த வருடம் துறைமுகங்களுக்கான தரப்படுத்தலில், இந்தத் துறைமுகம் 23 ஆம் இடத்தைப் பிடித்துள்ளது என்று துறைமுகங்கள் மற்றும் கப்பல் துறை அமைச்சர் அர்ஜுன ரணதுங்க தெரிவித்தார்.

கொழும்புத் துறைமுகத்தின் ஊழியர்களை நேற்று சந்தித்துக் கலந்துரையாடிய போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

இது தொடர்பில் துறைமுகங்கள் மற்றும் கப்பல் துறை அமைச்சர் அலுவலகத்தால் அனுப்பி வைக்கப்பட்டுள்ள ஊடக அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:

உலகில் கொள்கலன்கள் நடவடிக்கையை முன்னெடுக்கின்ற அனைத்துத் துறைமுகங்களும், எல்பாலைனர் தரப்படுத்தலில் உள்வாங்கப்படும். இந்தத் தரப்படுத்தலுக்கு அமைவாக, கொழும்புத் துறைமுகம் கடந்த வருடம், உலகிலுள்ள சிறந்த துறைமுகங்களுள் 23 ஆம் இடத்தைப் பிடித்திருந்தது.

இந்தத் துறைமுகம் 2014 ஆம் ஆண்டு 27ஆம் இடத்திலும், 2015 ஆம் ஆண்டு 26 ஆம் இடத்திலும் தரப்படுத்தப்பட்டிருந்தது. 2015 ஆம் ஆண்டு கொழும்பு துறைமுகம் முன்னெடுத்த மொத்த கொள்கலன்கள் செயற்பாட்டின் அளவு 5.2 மில்லியன்களாகும். இந்தக் கொள்கலன்கள் செயற்பாடானது 2016 ஆம் ஆண்டில் 5.7 மில்லியன்கள் வரையில் அதிகரித்ததுடன், கொள்கலன்கள் செயற்பாட்டு வளர்ச்சி வீதம் 10.6 வீதமாகப் பதிவு செய்யப்பட்டது.

கொழும்புத்துறைமுகத்துக்குள் வியாபார நடவடிக்கைகளை முன்னெடுக்கக்கூடிய சிறந்த சூழலை உருவாக்கியமையே இந்த வெற்றியின் இரகசியமாகும். கொழும்புத்துறைமுகத்தின் ஆழமான நுழைவாயில், ஆழமான முனையங்கள், முனையங்கள் விரிவாக்கப்பட்டமை மற்றும் முனையங்களின் செயற்பாட்டுத் திறன் அதிகரிக்கப்பட்டமை ஆகிய காரணிகளால் கொழும்புத் துறைமுகத்தால் மிகப் பெரிய மற்றும் பெரிய கப்பல்களுக்குச் சேவைகளை வழங்க முடிந்துள்ளது.

கொழும்புத் துறைமுகத்தில் இலங்கைத் துறைமுக அதிகார சபைக்கு மேலதிகமாக, தனியார் துறையினரும் வியாபார நடவடிக்கைகளை முன்னெடுத்துச் செல்கின்றார்கள். அதற்கு முன்னர் ஒவ்வொரு நிறுவனமும் தனித் தனியாகவே செயற்பட்டன. ஆனால் தற்போதைய அரசின் கீழ் நாம் கொழும்புத் துறைமுகத்துக்குப் பொது வியாபாரத் திட்டமொன்றை அறிமுகப்படுத்தியுள்ளோம்.

கொழும்புத் துறைமுக வளாகத்தினுள் வியாபார நடவடிக்கைகளை முன்னெடுக்கக்கூடிய சூழ்நிலையை உருவாக்கியுள்ளோம். அதன் அடிப்படையில் ஒட்டுமொத்த கொழும்புத் துறைமுகத்தின் அபிவிருத்தியின் பொருட்டு அனைத்துத் தரப்பினரையும் எம்மால் ஒன்றிணைக்க முடிந்துள்ளது.

இதற்கு மேலதிகமாக கொழும்புத் துறைமுகத்தின் அடிப்படை வசதிகளை மேம்படுத்தும் திட்டமொன்றும் நடைமுறைப்படுத்தப்படுகின்றது. இந்தத் திட்டத்தின் பிரதிபயனாகவும், ஏனைய காரணிகளின் அடிப்படையிலும் எதிர்வரும் ஆண்டுகளில் கொழும்புத் துறைமுகத்தை உலகிலுள்ள 20 சிறந்த துறைமுகங்களுக்குள் ஒன்றாகத் தரமுயர்த்த இயலும் -என்றுள்ளது. (ஐ-10)



# பெண்களுக்கு எதிரான வன்முறைகளுக்கு தேசிய ஆணைக்குழு நடவடிக்கை எடுக்கும்

கொழும்பு, பெப். 24
இலங்கையில் பரந்தளவில் இடம்பெறும் பாலியல் துன்புறுத்தல்கள் மற்றும் பெண்களுக்கு எதிரான வன்முறைகள் தொடர்பாக நடவடிக்கைகளை எடுப்பதற்காக தேசிய ஆணைக்குழு அமைக்கப்படவுள்ளது என்று அரசு தெரிவித்துள்ளது. போரினால் பாதிக்கப்பட்ட பெண்கள், இராணுவத்தினராலும், அரச அதிகாரிகளாலும், பாலியல் ரீதியான துன்புறுத்தல்களை எதிர்கொள்வதாக, எழுந்த குற்றச்சாட்டுகளை அடுத்து, அரசு இந்த் அவசர அறிவிப்பை வெளியிட்டுள்ளது. தேசிய ஒற்றுமை மற்றும் நல்லிணக்கப் பணியகத்தின் தலைவரான சந்திரிகா குமாரதுங்க இந்தக் குற்றச்சாட்டை முன்வைத்திருந்தார். எனினும், இராணுவம் இந்தக் குற்றச்சாட்டை மறுத்திருந்தது.

ஐ.நா. மனித உரிமைகள் சபையின் 34 ஆவது அமர்வு திங்கட்கிழமை ஆரம்பமாகவுள்ள நிலையில், இந்த விவகாரம் அரசுக்கு நெருக்கடியாக அமையலாம் என்பதைக் கருத்தில் கொண்டே, பெண்களுக்கு எதிரான வன்முறைகளைத் தடுப்பதற்கான தேசிய ஆணைக்குழுவை அமைக்கப் போவதாக அரசு அறிவித்துள்ளது. பெண்களுக்கு எதிராக குற்றமிழைத்தவர்களைச் சட்டத்தின் முன் நிறுத்தும் அதிகாரம் இந்த ஆணைக்குழுவுக்கு வழங்கப்படும் என்றும் அந்த அறிவிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ஐ-5)

# தள்ளுவண்டில்கள் செல்லக்கூடிய பாதைகள் வங்கிகளில் தேவை

## விசேட தேவை உடையோர் கோரிக்கை

முல்லைத்தீவு. பெப். 24
இடுப்புக்குக் கீழ் இயங்காத விசேட தேவை உடையவர்கள், தள்ளுவண்டில்களில் வங்கி நடவடிக்கைகளுக்காகச் செல்லும்போது, குறித்த வங்கிகளில் இவர்களுக்கு ஏற்ற பாதைகள் அமைக்கப்படாத காரணத்தால் மிகுந்த சிரமங்களை ஞிர்கொண்டுவருகின்றனர்.


இது தொடர்பில் ஒட்டுசுட்டான் பகுதியை சேர்ந்த இடுப்புக்குக் கீழ் இயங்காத விசேட தேவையுடைவர்கள் மேலும் தெரிவித்ததாவது:

'சகல இடங்களிலும் எமக்கு உரிய வசதிகள் செய்து கொடுக்கப்படவுள்ளதாக அறிவிக்கப்பட்ட போதிலும், எமது தேவைக்காக வங்கிகளுக்குச் செல்லும்போது பல சிரமங்களை எதிர்கொள்கிறோம். குறிப்பாக வங்கிகளின் தன்னியக்கப் பணமாற்று இயந்திரங்களில் பணம் எடுக்க, அந்த நிலையங்களுக்குள் செல்லும்போது, நாம் பிறருடைய உதவிகள் இன்றிச் செல்ல முடியாது.

எனவே வங்கிச் சேவைகளை நாம் இலகுவாகப் பெற்றுக்கொள்வதற்கு ஏற்ற வசதிகளை ஏற்படுத்திக் கொடுத்து அனைவரும் எமக்கு ஒத்துழைப்பு வழங்க வேண்டும்.' என்றனர்.

'இவர்கள் வங்கிச் செயற்பாடுகளை இலகுவான முறையில் பெற்றுக்கொள்ளும் வகையில், ஒட்டுசுட்டானில் இலங்கை வங்கி கட்டடவசதிவிரைவாகமாற்றி அமைக்கப்படும்' என்று அதன் முகாமையாளர் தெரிவித்தார். (ஐ-7)

# மாடு கடத்தல் முயற்சி தையிட்டியில் முறியடிப்பு



யாழ்ப்பாணம், பெப்.24

யாழ்ப்பாணம், காங்கேசன்துறை தையிட்டியில் மேற்கொள்ளப்பட்ட மாடு கடத்தல் முயற்சியொன்று பொலிஸாருக்குக் கிடைத்த இரகசியத் தகவலை அடுத்து முறியடிக்கப்பட்டது.

பட்டா ரக வாகனத்தில் மாட்டின் மேல் இலை, தழைகள் பரவி மறைப்புச் செய்து கடத்தியபோது பொலிஸார் வாகனத்தை தையிட்டியில் மடக்கிப் பிடித்துள்ளனர். சந்தேகநபர் ஒருவர் கைது செய்யப்பட்டார். ஏனையோர் தப்பியோடி விட்டனர்.

மேலதிக விசாரணைகளை காங்கேசன்துறைப் பொலிஸார் மேற்கொண்டுள்ளனர். (ற-26,ரி)

# கீத் நோயார் மீதான தாக்குதல் வழக்கு 3ஆம் திகதி அடையாள அணிவகுப்பு

கொழும்பு, பெப். 24

'தி நேசன்' பத்திரிகையின் இணை ஆசிரியரான கீத் நோயார் மீது மேற்கொள்ளப்பட்ட தாக்குதல் தொடர்பான வழக்கில் அடுத்த மாதம் 3 ஆம் திகதி அடையாள அணிவகுப்பு நடைபெறவுள்ளது.


2008ஆம் ஆண்டு 'தி நேசன்' பத்திரிகையின் இணை ஆசிரியரான கீத் நோயார் மீது தாக்குதல் நடத்தப்பட்டது. அதில் சம்பந்தப்பட்டுள்ளார்கள் என்ற சந்தேகத்தில் இராணுவ புலனாய்வுப் பிரிவைச் சேர்ந்த 5 பேர் அண்மையில் கைதுசெய்யப்பட்டனர். இவர்கள் நீதிமன்ற உத்தரவுக்கு அமைய விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளனர். கல்கிஸை மேலதிக நீதிமன்ற நீதிவான் லோச்சன அபேசிங்க முன்னிலையில் இந்த வழக்கு மீதான விசாரணை நேற்று நடைபெற்றது.

வழக்கில் சம்பந்தப்பட்டுள்ள 5 பேரில் 3 பேர் மன்றில் முன்னிலையாகியிருந்தனர். வழக்கு விசாரணையின்போது தாக்குதல் நடத்தியவர்களை அடையாளம் காணும் அடையாள அணி வகுப்பை அடுத்த மாதம் 3ஆம் திகதி நடத்தத் தீர்மானிக்கப்பட்டது.

தாக்குதலுக்கு இலக்கான ஊடகவியலாளர் கீத் நோயார் உயிர் அச்சுறுத்தல் காரணமாக வெளிநாட்டில் உள்ள நிலையில், அடையாள அணி வகுப்பு நடத்தப்படும் தினத்தன்று அவர் மன்றில் முன்னிலையாக வேண்டும் என்று உத்தரவிடப்பட்டுள்ளது. இந்த வழக்கு மீதான அடுத்த கட்ட விசாரணை அடுத்தமாதம் மார்ச் மாதம் 3 ஆம் திகதிவரை ஒத்தி வைக்கப்பட்டுள்ளது. (ற-10)

# பிரபாகரனுக்கு உயிர்கொடுப்பதே புதிய அரசமைப்பின் நோக்கம்

## கூட்டு எதிர்க்கட்சி எம்.பி. பியலால் நிசாந்த கூறுகின்றார்



கொழும்பு, பெப்.24

உயிரிழந்த பிரபாகரனுக்கு மீள உயிர் கொடுப்பதுதான் புதிய அரசமைப்பின் நோக்கம். அது ஈடு செய்ய முடியாத இழப்பை நாட்டுக்கு ஏற்படுத்தும்.

இவ்வாறு கூட்டு எதிர்க்கட்சி நாடாளுமன்ற உறுப்பினரான பியலால் நிசாந்த தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

புதிய அரசமைப்பை உருவாக்கவோ அல்லது நாட்டுக்கு ஆபத்தை ஏற்படுத்தப்போகும் அரசியல் தீர்வை உருவாக்கவோ மக்கள் இந்த அரசுக்கு ஆணை வழங்கவில்லை. ஆயினும் புதிய அரசமைப்பை உருவாக்கும் பணிகள் அனைத்தும் நிறைவடைந்துள்ளன.

படையினர் உயிரைக் கொடுத்துக் காப்பாற்றிய இந்த நாட்டை மீண்டும் புலிகளிடம் ஒப்படைப்பதற்கு இந்த அரசு முடிவெடுத்துள்ளது.

ஒற்றையாட்சி என்ற பதாகையைப் போட்டுக்கொண்டு சமஷ்டியை நோக்கி இந்த அரசு நகர்கின்றது. சிங்களவர்கள் அரசியல் தீர்வுக்கு இடப்படும் தலைப்பைத்தான் எதிர்க்கிறார்கள், உள்ளடக்கத்தை அல்ல என்று தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்

பினர் சுமந்திரன் சிங்கப்பூரில் வைத்துக் கூறியுள்ளார்.

ஒற்றையாட்சி என்ற பெயரில் நாட்டைப் பிரித்துக் கொடுக்கக்கூடிய அரசியல் தீர்வைத்தான் இந்த அரசு தயாரிக்கின்றது என்பது தெளிவாகிறது. இது தொடர்பில் மக்கள் விழிப்பாக இருக்க வேண்டும். அரசின் இந்த ஆபத்தான திட்டத்துக்கு மக்கள் ஆதரவு வழங்கக் கூடாது.

இந்த அரசு சரியான பாதையில் சென்றால் அதற்கு நாம் நிச்சயம் ஆதரவு வழங்குவோம். பிழையான பாதையில் சென்றால் வீட்டுக்கு அனுப்பி வைப்போம் - என்றார். (ற - 3)

# ஸ்னோவ்டனை பாதுகாத்த இலங்கையர்களை விசாரிக்கக் குழு!

கொழும்பு, பெப். 24

அமெரிக்கப் புலனாய்வு இரகசியங்களை வெளியிட்ட எட்வேர்ட் ஸ்னோவ்டனுக்கு அடைக்கலம் வழங்கினர் என்று கூறப்படும் இலங்கை அகதிகள் தொடர்பில் விசாரணைகளை முன்னெடுப்பதற்கு புலனாய்வு அதிகாரிகள் குழு ஒன்று ஹொங்கொங் சென்றுள்ளது என்று சீன ஊடகமொன்று செய்தி வெளியிட்டுள்ளது.

அமெரிக்காவின் முன்னாள் புலனாய்வு அதிகாரியான எட்வர்ட் ஸ்னோவ்டன், அமெரிக்க தேசிய பாதுகாப்புக் குறித்த தகவல்களை வெளியிட்டமைக்காகத் தேடப்படுகின்றார்.

2013ஆம் ஆண்டு ஹொங்கொங்கில் இலங்கை அகதிகள் தங்கும் பகுதியில் எட்வர்ட் ஸ்னோவ்டன் தலைமறைவாக இருந்தார் என்று தெரிவிக்கப்படுகின்றது. அவருக்கு அடைக்கலம் வழங்கிய இலங்கை அகதிகளை அமெரிக்க ஊடகங்கள் செவ்வி கண்டு செய்தி வெளியிட்டிருந்தன. இலங்கை அகதிகளின் பாதுகாப்பில் இருந்த ஸ்னோவ்டன் பின்னர் அங்கிருந்து வேறொரு நாட்டுக்குத் தப்பிச்சென்றார் என்று தெரிவிக்கப்படுகின்றது. இது குறித்துத் தமது அனுபவத்தைப் பகிர்ந்த ஸ்னோவ்டன், தாம் எதிர் நோக்கியுள்ள அபாயங்களைவிட, இலங்கை அகதிகள் அதிக அபாயங்களை எதிர்நோக்கியுள்ளனர் என்று கூறியிருந்தார். (ற-5)

# சிறையில் நான் இறக்க வேண்டும் இதுவே ராஜபக்ச குடும்பத்தின் விருப்பம்

## அமைச்சர் சரத் பொன்சேகா தெரிவிப்பு



கொழும்பு, பெப்.24

"என்னைத் தூக்கிலிட்டுக்கொல்ல வேண்டும், அல்லது சிறைக்குள்ளேயே நான் இறக்க வேண்டும். இதுவே ராஜபக்ச குடும்பத்தின் திட்டமாக இருந்தது. தேசிய, பன்னாட்டு மட்டத்தில் எழுந்த எதிர்ப்பால் அது முடியாமல் போனது".

இவ்வாறு தெரிவித்தார் அமைச்சர் பீல்ட் மார்ஷல் சரத் பொன்சேகா.

அவர் தெரிவித்ததாவது:-

என்மீது ராஜபக்ச சகோதரர்கள் கடுமையான கோபம் கொண்டிருந்தனர். என்னை எப்படியாவது கொல்ல வேண்டும் என்று திட்டம் தீட்டினர். அதற்கு ஏற்பவே அவர்கள் காய் நகர்த்தினர். பன்னாட்டு ரீதியில் எழுந்த எதிர்ப்பால் அந்தத் திட்டத்தை அவர்களால் நிறைவேற்ற முடியாமல் போனது.

இப்போது அவர்கள் கொசுவுக்குக் கூட பாவம் செய்யாதவர்கள் போலவும் கனவில்கூட எவருக்கும் தீங்கு செய்யாதவர்கள் போலவும் பேசுகின்றனர். இரண்டரை வருடங்கள் நான் சிறை வாழ்வைக் கழித்தேன். ஏனைய சிறைக் கைதிகளுக்கு வழங்கப்பட்ட சலுகைகளோ உரிமைகளோ எனக்கு வழங்கப்படவில்லை.

வீட்டில் இருந்து உணவுகள் கொண்டு வந்து கொடுக்க முடியும், உறவினர் வந்து சந்திக்க முடியும் என்ற உரிமைகள் இருந்தபோதும் அவை எனக்கு மறுக்கப்பட்டன. மாதத்தில் ஒரு தடவை மாத்திரம் எனது மனைவி வந்து என்னைச் சந்திக்கச் சந்தர்ப்பம் வழங்கப்பட்டது. அதுவும் அரைமணி நேரம் மாத்திரமே பேச முடியும்.

அப்படியான பழிவாங்கலை எமது அரசு செய்யவில்லை. இன்று சிறையில் அடைக்கப்பட்டிருக்கும் விமல் வீரவன்சவுக்கு எவ்வாறான சலுகைகள், உரிமைகள் வழங்கப்படுகின்றன என்று போய்ப் பாருங்கள். நல்லாட்சியை நீங்கள் அங்கே காணலாம்.

ஊழல்வாதிகளைத் தண்டிக்கும் விடயத்தில் கூட நாம் சரியாகவே நடக்கின்றோம். மகிந்தவைப் போல் நடந்திருந்தால் இப்போது அனைவரையும் சிறையில் தள்ளி இருப்போம். நாம் நீதியை மதித்து செயற்படுகின்றோம். நீதிமன்ற விடயத்தில் தலையிடுவதில்லை. அதனால்தான் தண்டனை வழங்குவது தாமதமாகின்றது - என்றார். (ற-3)

# பதவி விலகுவதானால் மக்கள் ஆணை தேவை

## அத்துரலிய ரத்னதேரர் திட்டவட்டம்

கொழும்பு, பெப்.24

பதவியிலிருந்து விலக வேண்டும் என்று மக்கள் உத்தரவிட்டால் மாத்திரமே பதவியில் இருந்து விலகுவேன். அதையும் மீறி பதவியில் இருந்து பலவந்தமாக என்னை விலக்க விரும்பினால் அவர்கள் அதைச் செய்யட்டும்.

இவ்வாறு திட்டவட்டமாகத் தெரிவித்தார் நாடாளுமன்ற உறுப்பினரான அத்துரலிய ரத்ன தேரர்.

ஐக்கிய தேசியக் கட்சியின் தேசியப் பட்டியல் நாடாளுமன்ற உறுப்பினரான அவர் நாடாளுமன்றில் சுயாதீனமாகச் செயற்பட முடிவெடுத்துள்ளார். அதையடுத்து அவரது கட்சியான ஜாதிக ஹெல உறுமய, அத்துரலிய ரத்னதேரர் பதவியில் இருந்து விலக வேண்டும் என்று அழுத்தம்கொடுத்துள்ளது. அதுதொடர்பாகக் கருத்துத் தெரிவித்தபோதே அவர் இவ்வாறு குறிப்பிட்டார்.

அவர் தெரிவித்ததாவது:-

மாவிலாறு முதல் தற்போது வரை இந்த நாட்டினதும், மக்களினதும் நலன்களை நோக்காகக் கொண்டே நான் பேசுகின்றேன். எனது குரலுக்குத் தனித்துவமான பலம் உண்டு என்று நான் நம்புகிறேன். அதனாலேயே இந்தப் பதவியும் கிடைத்தது.

சில விடயங்கள் காரணமாக நான் நாடாளுமன்றத்துக்குள் தனித்துச் செயற்பட முடிவெடுத்துள்ளேன். இப்போது நான் எந்தக் கட்சிக்கும் சொந்தக்காரன் அல்ல. நான் கூறும் கருத்துக்களுக்கு நானே பொறுப்பு. நாட்டின் நலன் கருதியே நான் இந்த முடிவை எடுத்துள்ளேன்.

பதவியில் இருந்து விலகினால் எனது போராட்டம் இன்னும் வீரியம் மிக்கதாக இருக்கும் என்று தெரிவித்து பதவியில் இருந்து விலக வேண்டும் என்று சிலர் என்னிடம் கோருகின்றனர். எனது கட்சியான ஜாதிக ஹெல உறுமயவும் எனக்கு இது தொடர்பில் அழுத்தம் கொடுக்கின்றது.

இது தொடர்பாக என்னால் தனித்து முடிவெடுக்க முடியாது. நான் தனி மனிதன் அல்ல. என்னுடன் பலர் இருக்கின்றனர். நான் பதவி விலக வேண்டுமா இல்லையா என அவர்களும், மக்களும்தான் முடிவெடுக்க வேண்டும். மக்கள் உத்தரவிட்டால் நான் உடனடியாகப் பதவி விலகுவேன். அதையும் மீறி பதவியைப் பறித்தெடுக்க ஐக்கிய தேசியக் கட்சியால் முடிந்தால் அதைச் செய்யட்டும். எனக்கு எந்தப் பிரச்சினையும் இல்லை.

நாடாளுமன்றத்துக்குள் இருந்தால் ஏராளமான பிரச்சினைகளைத் தீர்க்க முடியும், ஏராளமான விடயங்கள் பற்றிப் பேச முடியும் என்று நான் நம்புகிறேன் - என்கிறார். (ற-3)

# மகிந்த ஆதரவாளர்கள் மாகாண சபைகளில் சுயாதீனமாக செயற்படத் தீர்மானம்!

கொழும்பு, பெப்.24

மகிந்த அணியான பொது எதிரணியின் மாகாண சபை உறுப்பினர்கள் சுயாதீனமாகச் செயற்படத் தீர்மானித்திருகின்றனர் என்று மாகாண சபைகளின் தகவலறிந்த வட்டாரங்கள் தெரிவித்தன.

தென் மற்றும் மேல் மாகாண சபைகளில் இந்த நிலை உக்கிரமடைந்துள்ளது என்றும், தென் மாகாண சபையின் சிறிலங்கா சுதந்திரக் கட்சி உறுப்பினர்கள் சிலர் முதலில் சுயாதீனமாகச் செயற்படப் போகின்றனர் என்றும் அந்த வட்டாரங்கள் தெரிவித்தன.

மேல்மாகாணசபையில் அங்கம் வகிக்கும் சுமார் 45 சிறிலங்கா சுதந்திரக் கட்சி உறுப்பினர்கள் சுயாதீனமாகச் செயற்படத் தீர்மானம் எடுத்துள்ளனர் என்றும், அதற்கு முன்னர் தங்கள் தீர்மானம் பற்றி ஜனாதிபதியிடம் கலந்துரையாடவுள்ளனர் என்றும் தெரிய வருகின்றது. (ற)



தொண்டர் நாள் தொறும் துதிசெய

# திருக்கேதீச்சர

# மகா சிவராத்தி

துர்முகி வருடம் மாசித்திங்கள் 12 ஆம் நாள் (24.02.2017

பூசை, அர்ச்சனை நிகழ்வுகளும், அலங்கார

- நான்கு யாமங்களிலும் திருமுழுக்கும் பூசைகளும் இ
- நள்ளிரவு 12.15 இற்கு இலிங்கோற்பவ பூசை இடம்பெ

**சிவனடியார்கள் திரண்டு வாரீர் எம் பெருமானின் அரு**

திருக்கேதீச்சர ஆலயத் தி

**கௌரி இணை திருக்கேதீச்சர நாதரின்**
**மகா சிவராத்திரி தினம் சிறப்பாக நடைபெற வாழ்த்**

## திருக்கேதீச்சர வரலாறு

திருமூல நாயனாரால் சிவபூமி எனச் சிறப்பிக்கப்படும் இலங்கையில் பழமையும் பெருமையும் உடைய சிவத்தலங்களுள் சிறப்பு வாய்ந்தது திருக்கேதீஸ்வரமாகும். இது மூர்த்தி, தலம், தீர்த்தம் மூன்றும் சிறப்பாய் அமையப்பெற்ற திருத்தலமாகும்.

பெருந்தவமுடையோரான கேது, மாயன், மாதுவட்டா, மண்டோதரி, இராமர், அகத்தியர் போன்ற தவமுடையோர் தம் குறை தீர்த்து மீண்ட வரலாறு கொண்ட பழமை வாய்ந்தது.

கேது பூசித்த தலமாதலால் கேதீச்சரமாயிற்றென ஆய்வாளர் கூறுவர். இக்கோயில் மாதோட்ட நன்நகரில் அமைந்துள்ளது. அதாவது சூரபதுமனின் மனையாளின் பேரனார் துவட்டா என்பவர் பிள்ளைப்பேறு இன்றி திருக்கேதீச்சர பாலாவித் தீர்த்தத்தில் நீராடி கேதீச்சரத்தானை வழிபட்டமையால் திருவருள் கைகூடி பிள்ளைப்பேறு பெற்றார். பின் இத்தலத்தில் வாழத் தலைப்பட்டு அவ்விடத்தைப் பெருநகராக்கினார். துவட்டாவினால் உருவாக்கியமையால் அவ்விடம் துவட்டா எனவும், பெருநகரானபடியால் மாதுவட்டா எனவும் பின் மருவி மாதோட்டம் எனவும் பெயர் பெற்றது.

இத் தலத்திலமைந்த பாலாவித் தீர்த்தத்தில் நீராடி இறுதிக்கடன் புரிவோருக்குக் காயாவில் கடனாற் றும் புண்ணியம் கிட்டுமெனவும் நீராடுவோருக்குப் பிரமகத்தி போன்ற பாவங்கள் தீருமென்பதும் இத்தீர்த்தத்தின் மகிமையாகும்.

பழங்குடியினராகிய நாகர் வழிபட்ட தலமாதலால் நாகநாதர் என்ற பெயரும் வழங்கி வருகிறது. இது சைவத்தின் தொன்மையை யும் பழமையையும் எடுத்துக் காட்டுகின்றது.

மற்றும் சோழ, பாண்டிய மன்னர்களும் பல திருப்பணிகளை இத் திருக்கோயிலுக்காற்றிய பெருமையும் வன்னி, யாழ்ப்பாண அரசர்கள் நித்திய, நைமித்தியங்கள் இடையறாது செய்த பெருமை யும் கொண்ட திருத்தலமாகும்.

ஏழாம் எட்டாம் நூற்றாண்டில் வாழ்ந்த சம்பந்தர், சுந்தரர் போன்ற நாயன்மார்களால் தேவாரப் பாடல் பெற்ற திருத்தலம் என்ற பெருமையும் உடையதாகும். அதுமட்டுமன்றி நாவுக்கரசு நாயனாரின் திருத்தாண்டகத்திலும் சேக்கிழாரின் பெரிய புராணத்திலும் இத்திருத்தலம் சுட்டப்பட்டிருப்பது தொன்மைச் சிறப்பிற்குச் சான்றாகும்.

இத் திருத்தலத்தை அண்டிய பகுதிகளில் பல சிவாலயங்கள் இருந்தமையையும் அவை சிற்பம், கலை நுணுக்கம் நிறைந்த ஆற்றலுள்ள கலைஞர்களைக் கொண்டு திகழ்ந்த அழகு நகரமாகவும் இருந்தமையினை ஆய்வாளர்கள் கூறியுள்ளனர்.

பத்தாம் பதினொராம் நூற்றாண்டில் இக்கோயில் சோழ மன்னர்களால் இராஜராஜேஸ்வர மகா தேவன் கோயில் என அழைக்கப்பட்டது. வெளிநாட்டவர்களான ஒல்லாந்த போர்த்துக்கீசரால் இவ்வால யம் தகர்க்கப்பட்டு சிற்பங்கள் சிதைவடைந்தன.

அழிவுற்று சிதைவடைந்த இவ்விடத்தை யாழ்ப்பாணத்து விடிவெள்ளி ஆறுமுகநாவலர் வாங்கி சைவ சமயிகளின் பெருமையும் புகழும் நிலைக்க வேண்டுமென ஒரு துண்டுப்பிரசுரம் வெளியிட்டார். அதனை நிறைவேற்ற முயன்றவர்கள் கொழும்பு தம்பையா முதலியார், சுபைதார் வைத்திலிங்கம் , மாத்தளை ஆசைப்பிள்ளை ஆகியோராவர். அதுவும் நிறைவேறாத நிலையில் 1890 இல் அரச அதிபர் மூலமாக நிலம் கோயிலுடைமையாக்கப்பட்டு கோயிலுக்கென ஒரு சபையும் அமைக்கப்பட்டு

முதலா வது தலைவராக சிவபாத சுந்தரமும் செயலாளராக சிற்றம்பலமும் இரு
இல் பொது உடமைச் சட்டத்தின் கீழ் பதிவு செய்யப்பட்டது. இச்சபை மூலம்
அருந்தவ முயற்சிகளால் சிறு சிறு கோயில்களாக உருவாகி முதலாவது கும்பா
ஆம் ஆண்டு நிகழ்ந்தது. இக்கோயிலில் மூலக் கருவறையிலிருந்த சிவ
வருவிக்கப்பட்ட தென இராமேச்சர வரலாறு கூறுகின்றது.

1948ஆம் ஆண்டு இத் திருவிடத்தில் சைவப்பெரு மாநாடொன்று கூட்டப்ப
தொடர்ந்து பம்பலப்பிட்டி நகரத்தார் கதிரேசன் ஆலயத்தில் உருவாக்கப்பட்ட ச
விய பெருமையுடன் திகழ்கின்ற திருக்கேதீச்சர ஆலயத் திருப்பணிச் சபையாகு

இந்த திருக்கோயில் 1952இலும் 1960 ஆம் ஆண்டிலும் திருவுருவங்கள்
கும்பாபிஷேகம் இடம்பெற்றது. வழிபடவரும் அடியார் நலன்கருதி திருஞானசம்
நாதன் சத்திரம், மலேசியா மடம், கதிர்காமர் தொண்டர் மடம், பூநகரி மடம், 
மடம், சிவபூசைமடம், நரசிங்க மடம், மாதுவட்ட மணிமண்டபம், நாவலர்ம
சிவராத்திரி மடம், திருப்பதி மடம், கௌரீசர் மடம், திருக்குறிப்புத் தொண்டர் மட
பல்வேறு திருமடங்கள் நிறுவப்பட்டுள்ளன.

1976 ஆம் ஆண்டு வெகு சிறப்புடன் கும்பாபிஷேகம் நடைபெற்று 1990
பெருவிழாக்கள் சிறப்பாக நடைபெற்றது. 1990இற்குப் பின்பு பூசையோ பெரு
முடியாத நிலையிலிருந்து பின்னரும் சிறப்படைந்து இன்று பாலஸ்தாபன
இக்கோயில் சிவலிங்க திருநீராட்டுடன் சிவராத்திரி கொண்டாட இருப்பது யாவரு

அணு முதல் அண்டசராசரங்கள் வரை வியாபித்திருக்கும் பரம்பொருளி
முதலில் வணங்கு கின்றேன். வங்கம் மலிகின்ற கடல் மாதோட்ட நன்னகரில்
என்னும் முப்பெருஞ் சிறப்புக்களை யும் கொண்டு 2600 ஆண்டுகளுக்கும் மே
புராதன அடையாளமாகவும் திகழ்வது திருக் கேதீச்சரத் திருத்தலமாகும்.

15ஆம் நூற்றாண்டில் படையெடுத்து வந்த போர்த்துக்கீசப் பறங்கிகளா
பரப்பும் நோக்கில் திருக்கேதீச்சரத் திருக்கோயில் தரைமட்டமாக்கப்பட்டு திரு
சிற்பங்களையும் கொண்டு கிறிஸ்தவ தேவாலயமொன்றைக் கட்டினர் என்பது


**கண்ணகி பான்ஷி அன் புடைவை**



**KANNAKI FANCY & TEXTILE**
4ஆம் கட்டை, பூநகரி. 4th Milepost, Poonagary.
T.P: 076 721 3997

**அபான்ஸ் காட்சி அறை**



இலங்கையின் முதற்தர இலத்திரனியல் பொருள்களை
அதி கூடிய உத்தரவாதத்துடன் மாதாந்த தவணைக் கொடுப்பனவு
முறையில் பெற்றுக்கொள்ளலாம். ஏனைய பொருள்களையும்
உத்தரவாதத்துடன் பெற்றுக்கொள்ளலாம்.
நாச்சிக்குடா சந்தி, முழங்காவில்.
தொ.பேசி : 077 531 0005 / 021 577 6151
LG | Hisense | TOSHIBA | Haier | hp | Lenovo
Abans

**சந்நிதி முருகன்**



ஹாட்வெயார்
இல.9, முழங்காவில்,
நாச்சிக்குடா சந்தி,
கிளிநொச்சி.

**LUXMY MULTI CENTRE**
Dealers in Fancy Goods, Foot Ware, Stationaries, Furniture, Plastics, Electronics, Mobile Phone and Etc.



Mannar Road,
Nachchikuda Junction,
Mulangawil.
b.piratheeban@gmail.com

**Hotel AHASH**



Rooms (AC & Non Ac)
Wedding Hall
Dining
We also undertake special orders!
110/81, Thalvupadu Road, Mannar.
hotelahash@gmail.com
www.hotelahash.com
023 222 3300 077 991 3233

**நகுலேந்திரன்**
பல்பொருள் வாணிபம்
NAKULENTHIRAN STORES



Mannar Road, Mulankavil
மன்னார் வீதி, முழங்காவில்.
077 282 1630

**சிவசக்தி களஞ்சியம்**
SIVASAKTHI STORES



நாச்சிக்குடா சந்தி, மன்னார்சாலை,
முழங்காவில்.
Nachchikkuda Junction
Mannar Road, Mulankavil
T.P : 021 228 3135

**கந்தன் களஞ்சியம்**
KANTHAN STORES



மன்னார் வீதி,
நாச்சிக்குடாச் சந்தி,
முழங்காவில்
தொ.பே : 077 052 3586
Mannar Road , Nachchikuda
Junction, Mulangavil.

**சரணியா**
நகைப் பூங்கா.



அசல் 22 கரட் தங்க நகைகளை
குறித்த தினத்தில்
ஓடர்க்கு பெற்றுக்கொள்ளலாம்.
மன்னார் வீதி, நாச்சிக்குடா சந்தி,
முழங்காவில்
Tel: 077 446 2539

**Malar Stores**




No.04.
Market Building
Manner.
023 222 2046

செயவருள் செய் கேதீச்சரமதுதானே

# ச்சர ஆலயத்தில்

# திரிப் பெருவிழா


2.2017) வெள்ளிக்கிழமை திருக்குடத் திருமுழுக்கு (அபிடேகம்)
ங்கார மண்டப சிறப்பு நிகழ்ச்சிகளும் இடம்பெறும்.



ரும் இடம்பெறும்.
டெம்பெறும்.

அருளைப் பெறுக.
யத் திருப்பணிச்சபை.

**மகாலிங்கப் பெருமானுக்கு வழமைபோல் பாலாவித் தீர்த்தத் திருமுழுக்கு செய்ய ஒழுங்குகள் செய்யப்பட்டுள்ளன.**



தரின்
வாழ்த்துகிறோம்.

வைத்திய கலாநிதி **மு. கதிர்காமநாதன்**
தலைவர் - இந்து ஆலயங்களின் ஒன்றியம், மன்னார் மாவட்டம்

**023 2222 005**

## லாறு

பலமும் இருந்து இச்சபை 10.02.1951
டை மூலம் பல பல பெரியார்களின்
ாவது கும்பாபிஷேகம் 28.06.1903
ிருந்த சிவலிங்கம் காசியிலிருந்து

ாறு கூட்டப்பட்டது. இந்த மாநாட்டைத்
ாக்கப்பட்ட சபையே இன்று உலகளா
ச் சபையாகும்.
வுருவங்கள் நிறுவப்பட்டு இருமுறை
திருஞானசம்பந்தர் மடம், சுந்தரர் மடம்,
நகரி மடம், அடியார்மடம், நீர்ப்பாசன
நாவலர்மடம், அம்மா சத்திரம், மகா
ாண்டர் மடம், நகரத்தார் மடம் எனப்

ற்று 1990 வரை நித்திய நைமித்திய
சயோ பெருவிழாக்களோ நடைபெற
ாலஸ்தாபன நிலையில் இருக்கும்
ப்பது யாவரும் அறிந்ததே.
ரம்பொருளின் பாதார விந்தங்களை
நன்னகரில் மூர்த்தி - தலம்- தீர்த்தம்
ளுக்கும் மேற்பட்டுச் சைவ மக்களின்
குும்.
பறங்கிகளால் கிறிஸ் தவ மதத்தைப்
கப்பட்டு திருக்கோயிற் கற்களையும்
னர் என்பதும் மறு(றை)க்க முடியாத
வரலாற்று வலி. இவ்வாறு தரைமட்டமாக்கப்பட்ட திருக்கேதீச்சர திருக்கோயிலின் வரலாறு இறையருளாலும் 1872 இல் ஸ்ரீலஸ்ரீ ஆறுமுகநாவலர் அவர்களின் பெரு முயற்சியாலும் மக்களுக்கு வெளிக்கொணரப்பட்டு திருக்கோயில் நிலத்தை மீளப்பெற்றுக் கோயிலை மீளவும் அமைப்பதற் கான முயற்சிகளை தாமே முன்னின்று ஆரம்பித்தனர். ஆனால் நாவலர் பெருமான் இறைவன் திருவடி நிழலை அடைந்து 14 ஆண்டுகளின் பின்பு விஜய வருடம் கார்த்திகை 30ஆம் நாள் 1893. (13-12-1893) அவிட்ட நட்சத்திர நன்னாளில் (ஏலத்தொகை ரூபா 3100/=) இ திருவாளர் ராம.அரு.அரு.பழனியப்பச் செட்டியார் அவர்களின் கைங்கரியத்தாலும் யாழ்ப்பாணச் சைவப் பெருமக்களின் கைங்கரியத்தாலும் கோயில் நிலம் சைவப் பெருமக்கள் கைக்கு மீண்டும் கிடைத்தது.

இதன் பின்பு முதல் திருப்பணியாக திரு.சி.த.மு.பசுபதிச் செட்டியார் அவர்கள், மண்மாரி பொழிந்து மூடிய பழைய கோயிலிருந்த இடத்தை அகழ்ந்து கண்டுபிடித்ததுடன் புதிய சிவாலயத்தையும் கட்டுவித்து சோபகிருது வருடம் ஆனித் திங்கள் 14 ஆம் நாள் (28.06.1903) ஆயிலிய நட்சத்திரமும் வளர்பிறைச் சதுர்த்தசி திதியும் கூடிய நன்னாளில் மகாகும்பாபிஷேகம் செய்வித்தார். 1948ஆம் ஆண்டிலேயே உத்தியோக பூர்வமாக திருக்கேதீச்சர புனருத்தாரண சபை அமைக்கப்பட்டது. இச் சபையினரின் பெருமுயற்சியால் நந்தன வருடம் ஆகஸ்ட் 1952, சர்வாரி வருடம் ஐப்பசித் திங்கள் 15ஆம் நாள் (31.10.1960) ஆகிய ஆண்டுகளில் மகா கும்பாபிஷேகம் நிகழ்ந்தது. இத் திருப்பணிகளில் சேர்.கந்தையா வைத்தியநாதன் அவர்களின் பங்கு அளப்பரியது. அவரின் வழியில் சைவமணி இ.நமசி வாயம், மனிதநேய மாமணி வி.கயிலாயபிள்ளை போன்றவர்கள் செய்த அளப்பரிய திருப்பணிக் கைங்கரியங்களையும் குறிப்பிடக் கடமைப்பட்டுள்ளேன். இப்போது இந்திய அரசின் பெரும்பங்களிப்புடன் ரூபா 320 மில்லியனுக்கு மேற்பட்ட செலவில் மாமல்புரத்து சிற்பக் கலைஞர்களால் சிறப்பாக உருவாக்கப்பட்ட சிற்பக்கற்களால் உட்பிர கார மண்டபம் நிர்மாணிக்கும் திருப்பணி இறையருளால் நடைபெற்று வருகிறது.

இவ்வாறான வரலாற்றைக் கொண்டு விளங்கும் திருக்கோயிலும் திருப்பணிச் சபையும் பல்வேறு இடர்களின் மத்தியிலும் தொடர்ந்து அயராது கௌரியம்பாள் உடனுறை கேதீச் சரப் பெருமான் அருளுடன் அளப்பரும் சிவத்தொண்டாற்றி வருகின்றனர். காலத்துக்குக் காலம் திருக்கோயிலின் தெய்வீகப் பழமை மாறாதவாறு திருப்பணிகள் நிறைவேற்றப் பட்டுள்ளன.

**கந்தையா நீலகண்டன்**
**தலைவர்**
**திருக்கேதீச்சர ஆலய திருப்பணிச் சபை**

**மா.தவயோகராஜா**
**தலைவர் திருக்கேதீச்சர**
**ஆலய நம்பிக்கைப் பொறுப்பாளர் சபை**

## சிவராத்திரி விரதம் நோற்று சிவனருள் கிடைக்க வாழ்த்துகிறேன்

மாசி 12ஆம் நாள் (24.02.2017) வெள்ளிக்கிழமை வருகின்ற சிவராத்திரி விரதமானது பல சிறப்புக்களை உடையதாக விளங்குகின்றது. இந்த ஆண்டு சிவராத்திரி அன்று திரயோதசி திதியும் நடுநிசியில் சதுர்த்தசி திதியும் கூடி வெள்ளிக்கிழமை வருவதனால் இந்த வருடம் சிவனை நினைத்து அவரவர் வழமைபோல் விரதம் இருந்தால் 3 கோடி சிவராத்திரி விரதம் இருந்த பலன் கிடைக்கும் என பல பெரும் சிவாச்சாரியார்கள் உத்தரகாரணாகமத்தை ஆதாரமாக வைத்து கூறியுள்ளார்கள்.

சிவன் அடியார்கள் அனைவரும் ஆசார சீலராய் சிவவழிபாட்டை நடத்துவதோடு பாடல் பெற்ற தலமாகிய திருக்கேதீச்சரத்தில் நடைபெறுகின்ற சிவராத்திரி விஷேட அபிடேக, பூஜை வழிபாடுகள், தீர்த்தக்காவடி என்பனவற்றில் பங்குபற்றி சிறப்புடன் வாழ உதயன் பத்திரிகை வாயிலாக வாழ்த்தி ஆசிகள் கூறுகின்றேன்.

**சிவஸ்ரீ தி. கருணானந்தக்குருக்கள்**
**(பிரதம குரு)**
**திருக்கேதீச்சரம்.**


# N.R.Mobile & Electronic



**இலத்திரனியல் மற்றும் வீட்டுத் தளபாடப் பொருள்களை இங்கே பெற்றுக்கொள்ளலாம்.**

Mannar Road, Nachchikuda Junction.
077 314 8941

# V.T.A கடல் வாணிபம் &
## அம்மு லேடிஸ் ஸ்ரைல் and பான்சி ஹவுஸ்



இங்கே சகலவிதமான மீன்பிடி உபகரணங்களையும் மற்றும் வெளிணைப்பு இயந்திர உதிரிப்பாகங்களையும் பெற்றுக்கொள்ள முடியும். அத்துடன் பெண்களுக்கான ஆடைகள் மற்றும் பாதணிகள், அழகுசாதனப் பொருள்களையும் பெற்றுக் கொள்ளமுடியும்.

**மன்னார் வீதி, நாச்சிக்குடா சந்தி, முழங்காவில்.**
T.P : 077 644 5910, 077 522 7833

# Ambiga Jewellers
## அம்பிகா ஜுவலர்ஸ்

**மன்னாரில் மங்கையரின் மனங்கவர்ந்த தங்க நகை மாளிகை**



**பெரியகடை, மன்னார்.**
**GRAND BAZAAR, MANNAR.**
**Tel: 023 222 2561**



# Mannar
## Hardware

Dealers in Hardwares, Paints, Timber, Motorspares & Electrical Goods Etc.
Grand Bazaar, Mannar, Sri Lanka.
T.P: 023 222 3171
Fax : 023 222 2573
K.Chandrakanthan
Partner
E-mail - manarhardware@yahoo.com

திருக்கேதீஸ்வர ஆலயத்தில் சிவராத்திரி திருநாள் சிறப்புடன் நடைபெற வாழ்த்துகின்றோம்.



**திருக்கேதீஸ்வர தேவஸ்தான முன்னாள் அறங்காவலர் சபை தலைவர்**
**வே.க.கைலாசபிள்ளை**
**அவர்களை**
**இந்நாளில் நினைவு கூருகின்றோம்.**

# செல்வம் பிறதேர்ஸ்

**கிரான் பஜார் வீதி, மன்னார்.**

# மணமகள்
## நகையகம்

**ஓடர்கள் 22 கரட் தரத்தில் குறித்த தவணையில் செய்து தரப்படும்.**



9 ஆவது கட்டடம்,
நாச்சிக்குடா சந்தி,
முழங்காவில்.
077 938 4143

# லக்ஷ்சுமி
## உணவகம்



சகல விதமான உணவு வகைகளையும் தரமாகவும் சுகாதார முறைப்படியும் பெற்றுக்கொள்ளலாம்.
நாச்சிக்குடா சந்தி, முழங்காவில்.
தொ.பே. 076 711 4914

# ஜோதி புக் சென்ரர்



சகல விதமான அப்பியாசக் கொப்பிகளையும் பாடசாலை உபகரணங்களையும் தரமாகவும் நியாயமான விலையிலும் பெற்றுக் கொள்ள இன்றே நாடுங்கள்.

**மன்னார்.**
**தொடர்பு: 023 222 2052**

# தர்சிகா
## ஸ்ரூடியோ



Album Designing
Album Making

021 228 3130 , 077 281 2453



# கிருபா
## ஹாட்வெயார்

இரும்புப் பொருள்கள் , பெயின்ற் வகைகள், மாபிள் வகைகள், பைப் வகைகள் என்பனவற்றை மிக மலிவான விலையில் பெற்றுக் கொள்ளலாம்.
மன்னார் வீதி , முழங்காவில்
தொ.பே: 021 228 3110

# தலையை மறைக்கும் துணிகளுக்கு துருக்கி இராணுவத்தில் அனுமதி

துருக்கி இராணுவத்தில் பணிபுரியும் பெண் அதிகாரிகள் தலையை மறைக்கும் துணி அணிவதற்கு விதிக்கப்பட்டிருந்த தடை உத்தரவை அந்நாட்டு அரசு விலக்கியது.
நவீன துருக்கியின் தந்தையாகப் போற்றப்படும் கெமால் அடாடர்க் இயற்றிக் கொடுத்த அரசியல் சட்டத்தின்படி, அரச நிறுவனங்களில் தலையை மறைக்கும் அங்கிகளை அணிவது தடை செய்யப்பட்டிருந்தது.
ஆனால், கடந்த பத்தாண்டுகளில், துருக்கியின் பழைமைவாத அதிபரான ரஜீப் எர்டகன், பள்ளிகள், பல்கலைக்கழகங்கள், சிவில் சேவை மற்றும் காவல்துறை ஆகியவற்றில் இதற்கு விதிக்கப்பட்டிருந்த தடைகளை நீக்கியிருந்தார். தற்போது அவர் துருக்கி இராணுவத்திலும் தலையை மறைக்கும் துணிகளை அணிய அனுமதி கொடுத்தார். (ம)





# 'ஜெ' சாவை விசாரித்தால் சசிக்கு ஆயுள் தண்டனை

## ஸ்டாலின் வெளிப்படைப் பேச்சு ஓ.பி.எஸ்ஸுக்கும் கடும் தாக்கு

சென்னை, பெப். 24
ஜெயலலிதாவின் சாவு தொடர்பில் முறையான விசாரணைகள் நடத்தினால், இன்று நான்கு ஆண்டுகள் சிறையில் இருக்கும் சசிகலா ஆயுள் கைதியாக இருக்க வேண்டிவரும் என்று தெரிவித்தார் தமிழக சட்டசபையின் எதிர்கட்சித் தலைவரும் தி.மு. கழகத்தின் செயல் தலைவருமான ஸ்டாலின்.
முதல்வர் எடப்பாடி பழனிச்சாமி தலைமையிலான அமைச்சரவை மீதான நம்பிக்கை வாக்கெடுப்பு கடந்த 18 ஆம் திகதி சனிக்கிழமை நடைபெற்றது. வாக்கெடுப்பை இரகசிய வாக்கெடுப்பாக நடத்த வேண்டுமென்று தி.மு. கழகம் கோரிக்கை வைத்தது. இதைச் சபாநாயகர் தனபால் மறுத்தார். கூச்சல்களும் குழப்பங்களும் தொடர்ந்தன. இருமுறை சபை ஒத்திவைக்கப்பட்டும் அமைதி திரும்பாததால், தி.மு. கழகம் வலுக்கட்டாயமாக வெளியேற்றப்பட்டது. ஏனைய கட்சிகள் தாமாக வெளிநடப்புச் செய்தன.
எதிர்க்கட்சிகள் இல்லாமல் நடத்தி முடிக்கப்பட்ட இந்த வாக்கெடுப்பைக் கண்டித்தும், தி.மு. கழகம் வலுக்கட்டாயமாக வெளியேற்றப்பட்டமையைக் கண்டித்தும் தி.மு. கழகத்தின் சார்பில் நேற்றுமுன்தினம் உணவு ஒறுப்புப் போராட்டம் நடத்தப்பட்டது. திருச்சியில் நடந்த போராட்டத்தில் ஸ்டாலின் கலந்துகொண்டு உரையாற்றினார். அதன்போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.
75 நாள்களாக ஜெயலலிதா அப்பலோ மருத்துவமனையில் இருந்தபோது அவருக்கு வழங்கப்பட்ட சிகிச்சை தொடர்பான விவரங்கள் வெளியிடப்படவில்லை. ஜெயலலிதாவின் சாவை முறையாக விசாரித்தால், ஊழல் மோசடிக் குற்றச்சாட்டில் இன்று பெங்களூர் சிறையில் இருப்பவர்கள் ஆயுள் தண்டனைக் கைதிகளாக மாற்றப்படுவர்.
முன்னாள் முதல்வர் ஓ.பி.எஸ்., தான் பதவியில் இருந்தபோதெல்லாம் ஜெயலலிதா சாவு தொடர்பிலோ, அல்லது சசிகலாவின் மோசடி ஆட்சி தொடர்பிலோ எவ்வித கருத்தையும் வெளியிடவில்லை. பதவியில் இருந்து தூக்கி எறியப்பட்ட பின்னர் அம்மா சாவில் மர்மம் உள்ளது. சசிகலா குடும்ப ஆட்சியை நடத்துகிறார் என்றெல்லாம் தெரிவித்தார். தான் பதவியில் இருந்தபோது, முன்னாள் முதல்வர் ஜெயலலிதா சாவு தொடர்பில் விசாரணை நடத்த அவர் உத்தரவிடாதது ஏன்?.
மக்கள் இந்த ஆட்சியை வெறுக்கிறார்கள். விரைவில் இந்த ஆட்சி தூக்கி எறியப்படும். தி.மு. கழகம் கொல்லைப்புறமாக வந்து ஆட்சியைப் பிடிக்காது என ஸ்டாலின் மேலும் தெரிவித்தார். (ம)

# ஐ.எஸ்ஸின் தாக்குதலில் மூவர் சாவு

பாக்தாத், பெப். 24
ஈராக்கின் கிர்குக் நகரில் ஐ.எஸ்.ஐ.எஸ். அமைப்பு நேற்றுமுன்தினம் நடத்திய தாக்குதலில் மூன்று பேர் சாவடைந்தனர்.
கடந்த 2014 ஆம் ஆண்டுமுதல் கிர்குக் நகர் ஐ.எஸ்.ஐ.எஸ். அமைப்பின் பிடியில் உள்ளது. அங்கு வசித்து வருகிற குடிமக்கள் அங்கிருந்து வெளியேறக்கூடாது என அவர்கள் தடை விதித்துள்ளனர். தப்பிச் செல்பவர்களை ஐ.எஸ்.ஐ.எஸ். அமைப்பு கொலை செய்கிறது.
இந்த நிலையில், கிர்குக் நகரின் ஹாவிஜா பகுதியில் இருந்து நேற்றுமுன்தினம் தப்பிச் செல்லமுயன்ற மூவர் ஐ.எஸ். அமைப்பின் தாக்குதலில் கொல்லப் பட்டனர். (ம)



# கிம் ஜோங் நாம் படுகொலையில் வடகொரிய தூதருக்குத் தொடர்பு

கோலாலம்பூர், பெப். 24
வடகொரிய அதிபர் கிம் ஜோங் உன்னின் சகோதரர் கிம் ஜோங் நாம், மலேசியாவின் கோலாலம்பூர் நகரில் கொலை செய்யப்பட்டிருந்தார். இந்தக் கொலையில் வடகொரியத் தூதர் ஒருவருக்கு தொடர்பு உள்ளது என்று மலேசியப் பொலிஸார் சந்தேகம் தெரிவித்தனர்.
கடந்த 13 ஆம் திகதி திங்கட்கிழமை கிம் ஜோங் நாம் சடலமாக மீட்கப்பட்டார். இந்தக் கொலையின் பின்னணியில் இந்தோனேசியப் பெண் சிட்டி ஆய்சா, அவரது மலேசியக் காதலர், வியட்நாம் பெண் டொன் தி ஹவாங் மூவரும் ஏற்கனவே கைது செய்யப்பட்டிருந்தனர். வடகொரியாவைச் சேர்ந்த ரி ஜாங் சோல் என்பவரும் கைது செய்யப்பட்டார். அவரிடமும் தொடர்ந்து விசாரணைகள் நடைபெற்று வந்தன. இந்த நிலையிலேயே வடகொரியத் தூதர் ஹியாங் குவாங் சாங் என்பவர், நாமின் படுகொலையில் தொடர்புபட்டுள்ளார் என்று சந்தேகம் தெரிவிக்கப்பட்டது.
முன்னதாக, கிம் ஜாங் நாம் படுகொலை செய்யப்பட்டார் என்பது உறுதிப்படுத்தப்பட்டால் வடகொரிய அதிபரின் காட்டுமிராண்டித்தனமும், பதவி வெறியும் நிச்சயம் வெளிப்படும் என்று தென்கொரிய அதிபர் தெரிவித்திருந்தமை குறிப்பிடத்தக்கது. (ம)





# 7 புதிய கோள்கள்

பூமியின் அளவையொத்த 7 புதிய கோள்கள் கண்டுபிடிக்கப்பட்டன. பூமியில் இருந்து 39 ஒளியாண்டுகள் தொலைவில் உள்ள இந்தக் கோள்களில் மனிதர்கள் வாழ்வது சாத்தியம் என்ற நிலைப்பாடு காணப்படுகிறது என்று மூத்த ஆராய்ச்சியாளர் மைல்லகல் கிலான் தெரிவித்தார். பூமியின் அளவில் 7 புதிய கோள்கள் ஒரேநேரத்தில் கண்டுபிடிக்கப்பட்டமை வரலாற்றில் இதுவே முதல் தடவை. (ம)

# 1.1 கோடி அயல் ர

வொஷிங்டன், பெப். 24
அமெரிக்காவில் சட்டவிரோதமாகத் தங்கியிருக்கும் 1:1 கோடி வெளிநாட்டவர்களை வெளியேற்றுமாறு உத்தரவிட்டார் ட்ரம்ப்.
தனது தேர்தல் பரப்புரைகளில் அகதிகளுக்கு எதிராகக் கடும் நடைமுறைகள் பின்பற்றப்படும் என்று தெரிவித்துவந்தார் ட்ரம்ப். தற்போது அவற்றை நடைமுறைப்படுத்துவதிலும் அவர் கடும் முனைப்புடன் உள்ளார்.



# சிறையில் சசிக்கு வசதிகள்

சென்னை, பெப். 24
பெங்களூர் சிறையில் அடைக்கப்பட்டிருக்கும் அ.தி.மு. கழகத்தின் பொதுச் செயலாளர் சசிகலாவுக்கு சில சிறப்பு வசதிகள் செய்து கொடுக்கப்பட்டுள்ளன.

சொத்துக்குவிப்பு வழக்கில், ஜெயலலிதா, சசிகலா, சுதாகரன், இளவரசி ஆகிய நால்வருக்கும் தலா 4 வருடங்கள் சிறைத்தண்டனை விதித்தது உச்ச நீதிமன்றம். ஜெயலலிதா சாவடைந்ததால் அவருக்குத் தண்டனை விலக்கு வழங்கப்பட்டது. ஏனைய மூவரும் தற்போது சிறையில் உள்ளனர். சசிகலாவுக்கு அடிப்படை வசதிகளுடன் கூடிய அறையே ஒதுக்கப்பட்டது. எவ்வித சலுகைகளும் வழங்கப்படவில்லை.

ஆனால் தற்போது அவருக்கு சில வசிதிகள் வழங்கப்பட்டுள்ளன. இதன்படி கட்டில், தொலைக்காட்சி, மின்விசிறி உள்ளிட்ட வசதிகளே சசிகலாவுக்கு வழங்கப்பட்டுள்ளன. (ம)

# சராசரியாக 90 ஆண்டுகள் வாழ்வர் தென்கொரியர்கள்

சியோல், பெப். 24
2030 ஆம் ஆண்டு தென்கொரியர்களின் ஆயுட்காலம் சராசரியாக 90 ஆண்டுகளாக இருக்கும் என்று ஆய்வொன்றில்தெரியவந்துள்ளது.

பிரிட்டன் தலைநகர் லண்டனில் உலகசுகாதார நிறுவனம் நடத்திய ஆய்வொன்றிலேயே இந்தத் தகவல் வெளியிடப்பட்டது.

இதன்படி, 2030 ஆம் ஆண்டுதென்கொரியர்களின் ஆயுட்காலம் 90 ஆண்டுகளுக்கும் அதிகமாக இருக்கும். இதன்மூலம் உலகிலேயே அதிக வாழ்நாளைக் கொண்டவர்களாக தென்கொரியர்கள் விளங்குவர். பெண்களது ஆயுட்காலம் 90 ஆண்டுகள் 8 மாதங்களாகவும், ஆண்களது ஆயுட்காலம் 84 ஆண்டுகள் ஒரு மாத மாகவும் இருக்கும் என்றும் சொல்லப்பட்டது.

ஆய்வுக்குத் தலைமை வகித்த பேராசியர் மஜித் எஸ்ஸாட்டி, உலகில் சராசரி வாழ்நாள் 90 ஆண்டுகளுக்கு மேல் இருப்பது சாத்தியமில்லாதது என்று ஆராய்ச்சியாளர்கள் ஒரு கட்டத்தில் நினைத்தனர். ஆனால், மனிதர்களின் சராசரிவாழ்நாள் மேம்பட்டுள்ளமை தெரியவந்துள்ளது. தென்கொரியாவைப் பொறுத்த வரை, குழந்தைகளுக்கு அங்கு சரியான ஊட்டச்சத்து வழங்குதல், குருதிக் கொதிப்பு உள்ளவர்கள் குறைவாகக் காணப்படுதல், புகைப் பழக்கம் குறைந்து காணப்படுதல், உடல் நலனில் அதிக கவனம் செலுத்துதல், புதிய மருத்துவ அறிவு மற்றும் தொழில் நுட்பங்களைப் பயன்படுத்தல் போன்ற காரணங்களால் அவர்களின் சராசரிவாழ்நாள் அதிகமாக இருப்பது தெரியவந்துள்ளது என்றார். (ம)

# துணைப் பொதுச் செயலாளராக தினகரன் நேற்றுப் பொறுப்பேற்பு

சென்னை, பெப். 24
அ.தி.மு. கழகத்தின் துணைப் பொதுச் செயலாளராக நேற்றுப் பொறுப்பேற்றார் தினகரன்.

அ.தி.மு.க. பொதுச் செயலாளர் சசிகலாவின் சகோதரி மகன் தினகரன். முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினரான இவர், கடந்த 2011 ஆம் ஆண்டு அ.தி.மு. கழகத்தில் இருந்து நீக்கப்பட்டார். ஆனால் ஜெயாவின் மறைவுக்குப் பின்னர் கடந்த 15 ஆம் திகதி தற்போதைய பொதுச்செயலாளரான சசிகலா அவரை மீண்டும் கட்சியில் இணைத்தார். துணைப் பொதுச்செயலாளர் என்ற பதவியையும் வழங்கினார். சொத்துக்குவிப்பு வழக்கில் சசிகலா சிறை செல்லும் முன்னர், அவர் சிறை யிலிருந்தாலும் கட்சி மீது கட்டுப்பாட்டைச் செலுத்த வேண்டும் என்பதற்காகவே அவரது உறவினரான தினகரனுக்கு அவசர அவசரமாக இந்தப் பொறுப்பு வழங்கப்பட்டது என்று சொல்லப்பட்டது.

இந்த நிலையில் சென்னையில் உள்ள அ.தி.மு. கழகத் தலைமை அலுவலகத்தில் தினகரன் நேற்றுப் பதவியைப் பொறுப்பேற்றார். (ம)




ஜேர்மனியில் அண்மையில் கார்னிவேல் கொண்டாட்டமொன்று இடம்பெற்றது. அமெரிக்க அதிபர் ட்ரம்பின் கொள்கைகளுக்கு எதிர்ப்புத் தெரிவுக்கும் விதமாக அவரைப்போன்றதொரு உருவப்பொம்மை தயார் செய்யப்பட்டிருந்தது. ட்ரம்ப், தனது தேர்தல் பரப்புரைகளில் 'மேக் அமெரிக்கா கிறேட் எகெய்ன்' அமெரிக்காவை மீண்டும் பெரிதாக கட்டியெழுப்புவோம் என்ற வாசகத்தை அடிக்கடி பயன்படுத்தினார்.

ட்ரம்பின் உருவப்பொம்மையைத் தயார் செய்தவர்கள், மேக் பாசிசம் கிறேட் எகெய்ன் (பாசிசத்தை மீண்டும் பெரிதாகக் கட்டியெழுப்புவோம்,) என்று குறிப்பிட்டிருந்தனர். ட்ரம்பின் நடவடிக்கைகள் ஒரு சர்வாதிகாரியைப் போன்று இருப்பதாலேயே அவர்கள் இவ்வாறு குறிப்பிட்டனர் என்பது பொதுவான கருத்தாக உள்ளது. ஜேர்மனிக்கும், அமெரிக்காவுக்கும் ஈராக், சிரியா விவகாரங்களில் முறுகல் நிலை உள்ளமை குறிப்பிடத்தக்கது. (ம)



# ...நாட்டவர்களை வெளியேற்ற ட்ரம்ப் உத்தரவு

ஈராக், சிரிய நாடுகளின் அகதிகளுக்கு முற்றாகத் தடை விதித்தார். 7 முஸ்லிம் நாடுகளைச் சேர்ந்தவர்களுக்கு நுழைவிசைவுத் தடையை விதித்திருந்தார். இவற்றின் வரிசையில் தற்போது ஏராளமான வெளிநாட்டவர்களை வெளியேற்ற அவர் உத்தர விட்டுள்ளார்.

அமெரிக்காவில் குடியுரிமை பெறாமல் சட்டவிரோதமாகத் தங்கியிருக்கும் எவரும் எவ்விதமான நிபந்தனையோ அல்லது விதிவிலக்கோ இல்லாது வெளியேறிவிட வேண்டும் என்று கண்டிப்பான உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது. அமெரிக்காவில் கிட்டத்தட்ட 1.1 கோடி மக்கள் குடியுரிமை இல்லாமல் தங்கியுள்ளனர். எனவே ட்ரம்பின் இந்த உத்தரவு அவர்களுக்குப் பெரும் இடியாக அமைந்துள்ளது.

ட்ரம்பின் இந்த முடிவுக்கு அமெரிக்காவின் இரண்டாவது பெரிய கட்சியும், எதிர்க்கட்சியுமான ஜனநாயகக் கட்சி தனது கண்டனத்தை வெளியிட்டது. அமெரிக்க ஊடகங்களும் இந்த உத்தரவை விமர்சித்துள்ளன. இதனால் ட்ரம்புக்கு எதிராக மீண்டும் பெரிய ஆர்ப்பாட்டங்கள் நடத்தப்படலாம் என்று எதிர்பார்க்கப்படுகிறது. முன்னதாக மக்களின் அபிமானத்தை வென்ற அமெரிக்க அதிபர் யார் என்ற தலைப்பில் நடத்தப்பட்ட கருத்துக் கணிப்பு ஒன்றில் ட்ரம்ப் கடைசி இடத்தைப் பெற்றமை குறிப்பிடத்தக்கது. (ம)

உண்மை - நேர்மை - அஞ்சாமை

உதயன்

மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

தலைமையகம்: 361, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்

செய்தி : 021 493 0000
விளம்பரம் : 021-493 1111
விநியோகம் : 021-493 2222, 021 - 492 7450

செய்தி : uthayanprint@gmail.com கருத்து: comments@uthayan.com
விளம்பரம்: advt@uthayan.com

# எத்தனை காலம்தான் ஏமாற்றுவார்...?

பேச்சுப் பல்லக்கு, தம்பி கால் நடை என்ற சொலவடை ஒன்று தமிழில் உண்டு. காணி விடுவிப்புத் தொடர்பாகக் கொழும்பு அரசு தெரிவிக்கும் கருத்துக்களுக்கு மிகப் பொருத்தமான சொலவடையாக அதுதான் இருக்க முடியும்.

தமது காணிகளைத் தம்மிடமே திரும்பத் தருமாறு கேட்டு முல்லைத்தீவு, கிளிநொச்சி மாவட்டங்களில் தமிழ் மக்கள் வீதிகளில் இரவு பகலாக வாடிக் கிடக்கையில், அந்தக் காணிகளையும் அதுபோன்று படையினர் வசம் இருக்கும் ஏனைய காணிகளையும் அவர்கள் எப்போது விடுவிப்பார்கள் என்பது தொடர்பாக அரச தலைவர் மைத்திரிபால சிறிசேனவும் தலைமை அமைச்சர் ரணில் விக்கிரமசிங்கவும் படையினரிடம் அறிக்கை கேட்டிருக்கிறார்கள் என்ற தகவலைப் பதிலாகச் சொல்லியிருக்கிறார் அயலுறவுத் துறை அமைச்சர் மங்கள சமரவீர.

இதில் வேடிக்கை என்னவென்றால், அரச தலைவரும் தலைமை அமைச்சரும் பதவிக்கு வந்ததில் இருந்து இதைத்தான் கேட்டுக்கொண்டிருக்கிறார்கள். இப்போதும் அந்த அறிக்கைக்காக அவர்கள் காத்துக்கொண்டிருக்கிறார்கள் என்றால், இலங்கையின் முப் படையினரின் அதிகாரத்திற்கு முன்பாக அரச தலைவரின் அதிகாரமும் தலைமை அமைச்சரின் அதிகாரமும் சக்தியேதும் அற்றது என்றே பொருள்படுகிறது. படையினரை மீறிச் செயற்படும் அதிகாரமோ, குறைந்தபட்சம் படையினருக்கு உத்தரவிடும் அதிகாரமோகூட இந்த இரு தலைவர்களுக்கும் கிடையாது என்றே எண்ண வைக்கிறது.

இலங்கையின் முப்படைத் தளபதியாக அரச தலைவரே இருக்கிறார் என்றபோதிலும், அவரது உத்தரவுக்கு, கட்டளைக்குப் படைகள் கட்டுப்படாமல் செயற்படுகின்றன என்றே கொள்ள வேண்டியுள்ளது. ஆனால் உண்மை இதற்கு முற்றிலும் மாறானது என்பது எல்லோருக்குமே தெரியும்.

கடந்த ஒன்றரை வருடங்களுக்கும் மேலாக கொழும்பு அரச தலைவர்கள் இதே காரணத்தைத்தான் காணி விடுவிப்புத் தொடர்பில் சொல்லிக்கொண்டிருக்கிறார்கள். கடந்த வருடம் தலைமை அமைச்சர் ரணில் விக்கிரமசிங்க பலாலியில் படையினருடன் நடத்திய கூட்டத்தில்கூட இதனைத் தெரிவித்திருந்தார்.

இத்தகைய வாக்குறுதிகளைத் திரும்பத் திரும்பக் கேட்டுக் கேட்டுச் சலித்துப்போய், முடியாத கட்டத்தில்தான் மக்கள் தற்போது வீதிக்கு இறங்கியிருக்கறார்கள். அதன் பின்னரும் அந்த மக்களுக்கு ஒரு நீதியான தீர்வை வழங்காமல் படையினிடம் அறிக்கை கேட்டிருக்கிறோம் என்று சொல்வது நல்லாட்சி அரசு ஒன்று செய்யக்கூடிய காரியம் அல்ல. மக்களுக்குச் சாக்குப் போக்குச் சொல்லும், மக்களின் துன்ப துயரங்களைக் கண்டுகொள்ளாத அரசு ஒன்று செய்யும் காரியமே அது.

இந்தக் கூட்டு அரசும் அப்படி நடந்துகொள்வதாலேதான், மகிந்த அரசுக்கும் இந்த அரசுக்கும் இடையில் வேறுபாடு ஏதுமில்லை – மகிந்த அரசுபோன்றே இந்த அரசும் தமிழ் மக்களைக் கொடுப்படுத்துகிறது – என்று எதிர்க் கட்சித் தலைவரும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்றக் குழுத் தலைவருமான இரா.சம்பந்தன் நேற்றுமுன்தினம் நாடாளுமன்றத்தில் தெரிவித்திருக்கிறார். அவரது இந்தக் கருத்து இம்மியளவும் பிசகானதொன்றல்ல. இந்த அரசு தமிழர்கள் விடயத்தில் அவ்வாறே நடந்துகொள்கிறது.

ஆண்டாண்டு காலமாக கொழும்பு அரசுகள் அப்படித்தான் நடந்துகொண்டன. ஆனால் தமிழர்களின் ஆணித்தரமான வாக்குப்பலத்தோடு ஆட்சியில் அமர்ந்த இந்த அரசும் அவ்வாறே நடந்துகொண்டு தமிழர்களுக்குப் பாரபட்சம் காட்டுவதுதான் ஏற்றுக்கொள்ளமுடியாததாக இருக்கின்றது.

# திசை மாறப்போகும் போர்க்குற்ற விசாரணை

எம்.ஐ.முபாறக்

ஆட்சி மாற்றம் ஏற்பட்ட புதிதில் இந்த அரசு நடந்துகொண்ட விதத்துக்கும், இப்போது செயற்படுகின்ற விதத்துக்கும் இடையில் பெரிய வித்தியாசத்தை உணரக்ககூடியதாக இருக்கின்றது. தமிழர்கள் விடயத்தில் மகிந்தவின் நிலைப்பாட்டைஒத்தநிலைப்பாட்டை நோக்கி, இந்த அரசு சென்று கொண்டிருப்பதாகவே தெரிகின்றது.

தமிழர்கள் எதிர்நோக்கும் பல பிரச்சனைகளை மிக இலகுவில் தீர்க்கக்கூடிய ஆற்றல் இந்த அரசுக்கு இருக்கின்ற போதிலும், ஜனநாயகத்தை மதிக்கின்றோம்; எல்லோரின் கருத்துக்களையும் உள்வாங்குகின்றோம் என்று கூறி, சிறிய பிரச்சினைகளைக்கூடத் தீர்க்க முடியாத நிலைக்கு, சிக்கலுக்குள் தள்ளிவிடுகின்றது இந்த அரசு.

பிரச்சினைகளைத் தீர்ப்பதில் இருந்து நழுவிக்கொள்ளும் ஓர் இராஜதந்திரம்தான் இந்த ஜனநாயகம் என்ற போர்வை. பிரச்சனைகளை மக்கள்மையப்படுத்தி, ஏனையவர்கள் பிரச்சினை களுக்குள் நுழைந்து அவற்றைத் தீர்க்க முடியாத நிலையை உருவாக்கும் திட்டம்தான் இந்த ஜனநாயகப்போர்வை.

அந்த வகையில்தான், தமிழர்களின் பிரதான பிரச்சினைகளான அரசியல் தீர்வு விவகாரம் மற்றும் அவர்களுக்கு இழைக்கப்பட்டதாகக் கூறப்படும் போர்க் குற்றங்கள் குறித்த குற்றச் சாட்டுக்கள் தொடர்பாக இந்த அரசால் இலகுவாகத் தீர்வுகாண முடியாதவாறு திட்டமிட்ட அடிப்படையில் சிக்கல்கள் ஏற்படுத்தப்பட்டுள்ளன.

மேற்படி இந்த இரண்டு விடயங்களும், சிங்கள மக்களுடன் பின்னிப் பிணைந்துள்ள விடயங்கள் என்பதாலும், அவர்களை நேரடியாகப் பாதிக்கக் கூடியவை என்பதாலும் நினைத்தவாறு அவற்றைத் தீர்த்து வைக்க முடியாத நிலை ஏற்பட்டுள்ளது. அதிலும், சிங்களப் படையினருக்கு எதிரான போர்க் குற்றச்சாட்டு விவகாரம்தான் மேலும் சிக்கலானது.

**போர்க்குற்றங்கள் குறித்து குதர்க்கமான கருத்தை வெளிப்படுத்தத் தயாராகும் அரச தரப்பு**

போர்க் குற்றச்சாட்டு விசாரணைகள் மூலம் குற்றங்கள் நிரூபிக்கப்பட்டு படையினர் தண்டிக்கப்பட்டால், அது அவர்கள் செய்த குற்றங்களுக்காக வழங்கப்பட்ட தண்டனையாகக் காண்பிக்கப்படமாட்டாது. மாறாக, போரை வென்றமைக்காகவே புலம்பெயர் தமிழரின் கோரிக்கைக்கு அமைய அவர்கள் தண்டிக்கப்படுகிறார்கள் என்றொருபரப்புரை நிச்சயம் சிங்கள மக்கள் மத்தியில் கொண்டு செல்லப்படும்.

போர் வெற்றியால் படையினர் மீது சிங்கள மக்களுக்கு ஏற்பட்ட மதிப்புக் காரணமாக, அந்தப் பரப்புரை வெற்றி பெற்று, அது இந்த அரசின் இருப்புக்கு ஆபத்தாக மாறிவிடலாம். சிங்கள மக்களும் படையினரும் அரசுக்கு எதிராகத் திரும்பும் நிலை ஏற்படலாம்.

இதனை மேலும் சிறிது விளக்கமாகக் கூறப்போனால், ஒரு சிப்பாய் கொலை, கொள்ளை மற்றும் பாலியல் வல்லுறவு

> படையினருக்கு எதிரான போர்க்குற்ற விசாரணை விடயத்திலிருந்து மெல்ல மெல்ல விலகவேண்டும். அல்லது விசாரணையை நீர்த்துப் போகச் செய்ய வேண்டும். அரசு இப்போது ஈடுபட்டிருப்பதெல்லாம் அதை நீர்த்துப் போக வைக்கும் வேலையில்தான். அதற்காக கையில் எடுக்கப்பட்டிருக்கும் ஆயுதம் "புலிகளின் போர்க் குற்றங்கள்". இடம்பெறப் போகும் ஐ.நா மனித உரிமைகள் சபைக் கூட்டத்தில் முதன் முதலாக புலிகளுக்கு எதிரான போர்க்குற்றங்கள் முன்வைக்கப்படவுள்ளன.





போன்ற குற்றங்களுக்காகத் தண்டிக்கப்பட்டால், அந்தத் தண்டனையை மக்கள் எதிர்ப்பதில்லை. அவர் குற்றம் செய்ததற்காகத் தண்டிக்கப்படுகிறார் என்றே மக்கள் நோக்குவர்.

அதேவேளை, அந்தச்சிப்பாய்போரின் போது இவ்வாறான குற்றங்கள் செய்தால், அவற்றையெல்லாம் குற்றங்களாகப்பார்க்காது, போரின்போதான செயற்பாடுகளாகவே அவற்றைப் பார்க்கும்ஒருபிழையானஅணுகுமுறை இந்தச் சமூகத்தில் காணப்படுகின்றது.

(All is fair in love and war.) காதலிலும் போரின் போதும் எதைச் செய்தாலும் அது சரிதான் அல்லது ஆபத்துக்குப் பாவமில்லை என்ற இந்த ஆங்கிலப் பலமொழி இந்த அடிப்படையில்தான் தோன்றி இருக்கும்போலிருக்கிறது.

இந்தத்தவறானபார்வையை இன்று மகிந்த தரப்பினர் அவர்களுக்குச் சாதகமாகப் பயன்படுத்தத் தொடங்கியுள்ளனர். போரில் நடப்பவை எல்லாம் சேர்ந்துதான் அது போர் என்றாகிறது. போரில் தன்னுயிரைப் பாதுகாத்து எதிரியைக் கொல்லும்போது எதுவும் நடக்கலாம். அவை அனைத்தும் போரின் போதான செயற்பாடுகளே. அவ்வாறான செயற்பாடுகள் மூலம்தான் இந்தப் போரை வெல்ல முடிந்தது என்றொரு நியாயத்தை இனவாதிகள் சிங்கள மக்கள் மத்தியில் பரப்பி வருகின்றனர். படையினர்வேண்டுமென்று போர்க்குற்றங்களில் ஈடுபடவில்லை என்று அவர்கள் கூறி வருகின்றனர்.

ஆகவே, போர்க் குற்றங்களுக்காக படையினர் தண்டிக்கப்பட்டால், புலிகளுக்கு எதிராகப் போர் செய்தமைக்காகவே தண்டிக்கப்படுகின்றனர் என்ற எண்ணம் சிங்கள மக்கள் மத்தியில் உருவாக்கப்படலாம். இது அரசின் இருப்புக்கு ஆபத்தாக அமையக் கூடும்என்று அஞ்சத்தொடங்கியுள்ள அரசு, இந்தப் போர்க்குற்ற விசாரணையைஎப்படித்திசைதிருப்பலாம்; எப்படி நீர்த்துப் போகச் செய்யலாம் என்று சிந்திக்கத் தொடங்கியுள்ளது.

அந்த யோசனையில் சிக்கியதுதான் புலிகளுக்கு எதிரான போர்க்குற்றம். படையினருக்கு எதிராக போர்க்குற்ற விசாரணைநடத்தப்படும்என்று இந்த அரசு சர்வதேசத்துக்கு வாக்குறுதி வழங்கிவிட்டதால், அது தொடர்பிலான நடவடிக்கை எடுத்திருப்பதாகக் காட்டிக் கொண்டு விட்டதால், எடுத்த எடுப்பில் இந்த விசாரணையில் இருந்து அரசால் விலக முடியாது.

### புலிகளது போர்க்குற்றங்கள் என்ற தலைப்பைக் கையில் எடுத்துள்ள அரசு

எனவே, படையினருக்கு எதிரான போர்க்குற்றவிசாரணைவிடயத்திலிருந்து மெல்ல மெல்ல விலக வேண்டும். அல்லது விசாரணையை நீர்த்துப்போகச்செய்யவேண்டும். அரசு இப்போது ஈடுபட்டிருப்பதெல்லாம் அதை நீர்த்துப் போக வைக்கும் வேலையில் தான். அதற்காக கையில் எடுக்கப்பட்டிருக்கும் ஆயுதம் தான் "புலிகளின்போர்க்குற்றங்கள்".

இடம்பெறப் போகும் ஐ.நா மனித உரிமைகள் சபைக் கூட்டத்தில் முதன் முதலாக புலிகளுக்கு எதிரான போர்க்குற்றங்கள் முன்வைக் கப்படவுள்ளன. முன்னாள் கடற்படை உயர் அதிகாரி ரியர் அட்மிரல் சரத் வீரசேகர புலிகள் புரிந்தார்கள் என்று கூறப்படும் போர்க் குற்றச்சாட்டுக்களின் பட்டியலைஐ.நா. மனித உரிமைகள் சபையில் சமர்ப்பிக்கவுள்ளார். இவ்வாறானதொரு அறிக்கை சமர்ப்பிக்கப்படப் போவது இதுவே முதல் தடவையாகும். இந்தச் செயற்பாட்டில் அரசு நேரடியாக ஈடுபடாவிட்டாலும் இதன் பின்னணியில் இருப்பது அரசுதான் என்பதில் சந்தேகமில்லை. இது அரசின் இராஜதந்திரமாகும்.

படையினருக்கு எதிரான போர்க்குற்றச்சாட்டுக்களை தமிழர் தரப்பு முன்வைத்து வரும் வேளையில், புலிகளின் போர்க்குற்றங்கள் என்ற ஒன்றைத் தூக்கிப் போடும்போது அவை படையினரைக் காக்கும் கவசமாக அமையும்என்று அரசுநம்புகின்றது. அந்தக் கவசத்தையே அரசின் பாதுகாப்புக் கவசமாக மாற்றுவதற்கு அரசு திட்டமிடுகின்றது.

புலிகளுக்கு எதிரான போர்க் குற்றச்சாட்டின்மூலம்படையினரின்போரின் போதான செயற்பாடுகளை, போர்க் குற்றங்களை நியாயப்படுத்துவதற்கும் அரசு–படையினருனக்கு இடையேயான உறவைப் பலப்படுத்துவதனூடே அரசைஸ்திரப்படுத்துவதற்கும் அரசு திட்ட மிடுகின்றது.

போர்க்குற்ற விசாரணையில் இருந்து அரசு ப்டையினரைக் காப்பாற்றினால், அது மகிந்ததரப்புக்குத் தோல்வியாக அமைவதோடுபடைகள் மற்றும்சிங்கள மக்கள் மத்தியில் இன்றைய அரசுக்குச் செல்வாக்கை அதிகரிக்கச் செய்யும்.

ஒருபுறம், அரசு இவ்வாறான நகர்வுகளை மேற்கொள்ளும் அதேவேளை, போர்க்குற்றம் என்ற ஒன்று இங்கு புரியப்படவில்லை; குற்றங்கள் செய்யப்பட்டிருந்தால் அது மனித மீறல்களே அன்றி வேறில்லை; மனித உரிமை மீறல்கள் என்ற விடயத்தின் கீழ்த்தான் விசாரணை நடத்தப்படும் என்று ஜனாதிபதி ஏற்கனவே கூறிவிட்டார்.

இருந்தாலும், தமிழர் தரப்பு போர்க் குற்றச்சாட்டு என்ற பதத்தில் உறுதியாகவே இருக்கின்றது.

படையினர் தமிழர்களுக்கு இழைத்ததாகக் கூறப்படும் கொடுமைகள் அனைத்தும் போர்க் குற்றங்களே என்று தமிழர் தரப்பு வாதிடுகின்றது.

மொத்தத்தில் ஆட்சியைப்பிடிப்பதற்காக தமிழர்களுக்கு அதைத் தருகின்றோம், இதைத் தருகின்றோம் எனக் கூறிய அரசு, இன்று எதைக்கொடுப்பதற்கும் தயாரில்லை என்பதைச் சொல்லாமல் சொல்கின்றது. இந்த ஆட்சியிலும் தமிழர்கள் தமது உரிமைகளைப் போராடித்தான் பெற வேண்டும் என்ற உண்மையை, கேப்பாபுலவு மக்களின் போராட்டம் நிரூபித்துக்கொண்டிருக்கின்றது. அரசின் இந்த ஏமாற்று வித்தைக்குச் சர்வதேசம் துணை போகுமா என்று பொறுத்திருந்து பார்ப்போம்.



**புலிகளுக்கு எதிரான போர்க் குற்றச்சாட்டின் மூலம் படையினரின். போரின் போதான செயற்பாடுகளை,போர்க் குற்றங்களை நியாயப்படுத்துவதற்கும், அரசு– படையினருக்கு இடையேயான உறவைப் பலப்படுத்துவதனூடே அரசை ஸ்திரப்படுத்துவதற்கும் அரசு திட்டமிடுகின்றது.**



## வாசகர் திருமுகம்

### பணவீக்கம் பற்றி எவரும் சிந்திக்காது இருப்பது ஏன்?

வர்த்தக உலகம் இங்கு பூத்துக் குலுங்குகிறது. புலம்பெயர்ந்த உழைப்பாளிகளில் ஒரு சிலரைத் தவிர ஏனையோர் இங்கும் சரி அங்கும் சரி, ஆடம்பர வாழ்க்கை நடத்துகிறார்கள். கூலி உழைப்பாளர்கள் மற்றும் அரச சேவைகளில் உள்ளோர் அரைவயிறு கால்வயிறு கஞ்சிகுடிக்கும் நிலை. பத்துவருடங்களின் முன்னர் நூறு ரூபாவுக்கு இருந்த பெறுமதி, இன்று ஆயிரம் ரூபாவுக்கும் இல்லை. இவற்றைப் பற்றிச் சிந்திக்க, பேச, எழுத எவரும் முன் வருகிறார்களில்லை. அதனால் தமக்குச் சிரமம் ஏற்படுமென அவர்கள் அஞ்சுகிறார்கள் போல இருக்கிறது. இது படுமோசமான நிலையை ஏற்படுத்தி விடும். மோசடிகள், களவு, பொய், சிறை, அவமானம் எல்லாம் மலிந்துவிடும். கண் விழித்துச் சிரமப்பட்டு படித்து பட்டங்கள், பயிற்சிகள் பெற்றாலும், வேலை வாய்ப்பு குதிரைக் கொம்பாக இருக்கிறது. இத்தகைய விரக்திநிலை அவர்களுடைய சிந்தையைத் தவறான வழியில் இட்டுச் செல்வது இயல்பானது. போனது போகட்டும். இனியாவது இந்த இளைஞர்களையும், குழந்தைகளையும் சீர்படுத்துவோம். உங்களது நலநோக்கில் பணவீக்கத்தை மேலும் வளர்க்காதீர்.

*சி.ஜெயகணேசன்*
*சாவகச்சேரியூரான்*

### பொறுப்பில்லாமல் நடந்து கொள்ளும் வாகனச் சாரதிகள்

சில தினங்களுக்கு முன்னர் மல்லாகத்தில் மினிபஸ் ஒன்றில் ஏறி யாழ்ப்பாணம் நோக்கிப் பயணம் செய்து கொண்டிருந்தேன். மினிபஸ் மருதனார் மடம் சந்தியைக் கடந்து கொண்டிருந்த போது உடுவில் பக்கமிருந்து வேகமாக வந்த காரொன்று அவதானம் இன்றி சந்தியைக் கடந்து கொண்டிருந்தது. மினிபஸ் சாரதி திடீரெனப் 'பிரேக்' கைப் பயன்படுத்தியதால் , அவதானத்துடன் வாகனத்தைச் செலுத்தியதால் ஏற்படவிருந்த ஆபத்துத் தவிர்க்கப்பட்டது. இல்லையேல் விபத்துக்கு அந்த மினிபஸ் சாரதியும் பொறுப்புக் கூற நேர்ந்திருக்கும். அந்தக் காரின் சாரதி பொறுப்பற்ற விதத்தில் அசிரத்தையுடன் காரைச் செலுத்தியமை எந்த வகையிலும் ஏற்கத் தக்கதல்ல. தற்போது அடிக்கடி ஏற்படுகின்ற வாகன விபத்துக்களுக்குப் பொறுப்பற்ற விதத்தில் நடந்து கொள்கின்ற வாகன சாரதிகளே பொறுப்புக் கூற வேண்டும்.

*பொ.இராசநாயகம்,*
*மல்லாகம்.*



# விரதங்களில் மிகச் சிறந்தது மகாசிவராத்திரி

கலாவித்தகர்
திருமதி மலர்விழி கனகசபை

துர்முகி வருச, 2017 ஆம் ஆண்டுக்குரிய மகா சிவராத்திரி விரதம் இன்று வெள்ளிக்கிழமை இலங்கை உட்பட உலகெங்கிலும் பரந்து வாழுகின்ற சைவத் தமிழ் மக்களால் மிகவும் பக்திபூர்வமாக அனுஷ்டிக்கப்படுகின்றது. மாசி மாதத்தில் அமாவாசையில் இருந்து 14ஆவது சதுர்த்தசி அன்று வருவதே மகாசிவராத்திரியாகும். இந்தப் புனித நன்நாளில் சிவன்கோயிலுக்குச் சென்று ஈஸ்வரப் பெருமானை உள்ளன்போடு மனமுருகி வழிபட்டால், வாழ்க்கையில் முன்னேற்றம், மன, அமைதி மற்றும் வேண்டும் வரங்கள் கிடைப்பதுடன் இல்வாழ்க்கையில் பல சிறப்புக்கள் உண்டாகும் என புராண இதிகாசங்களில் கூறப்படுகின்றது. சிவராத்திரியன்று, இரவு நடு நிசியில் சதுர்த்தசி திதி இருப்பது முக்கியம் என வேத ஆகமங் களில் கூறப்பட்டுள்ளது. இந்த வருட சிவராத்திரி தினமான இன்று திரியோதசி திதி மு.இரவு 9.39 மணிவரை உள்ளது. அதற்குப் பின்னர் சதுர்த்தசி திதி கூடுகின்றது. இவ்விரண்டு திதிகளும் அன்று இரவு இருப்பதனால், இன்றைய சிவராத்திரியை உத்தம சிவராத்திரி என அழைக்கலாம். சிவராத்திரி அன்று திரியோதசி திதி பகலிலும், சதுர்த்தசி திதி இரவு முழுவதும் மறுநாள் முன்னிரவு 9.42 மணிவரையும் இருப்பதால் இந்தச் சிவராத்திரி அதி உத்தம சிவராத்திரியாகும்.

சகல இந்துமத மக்களும் அவரவர் விருப்பப்படி இந்தச் சிவராத்திரி நன்நாளில் ஆசார சீலர்களாக சிவன் கோயிலுக்குச் சென்று வழிபட்டும், இயலாதவர்கள் அருகில் உள்ள இந்துக் கோயில்களுக்குச் சென்று வழிபட்டும், அன்று இரவு முழுவதும் கண் விழித்து நான்கு சாமப் பூசைகளிலும் கலந்து சிவனுடைய நாமத்தை மனதில் இருத்தி உச்சரித்தால் வாழ்க்கையில் சகல சௌபாக்கியங்களும் விரைவில் கிடைக்கும் என வேத ஆகமங்கள் கூறுகின்றன. சிவராத்திரி விரதத்தை முறையாகக் கடைப்பிடிக்க வேண்டும். சிவராத்திரிக்கு முதல்நாள் ஒருவேளை மட்டுமே பகல் உணவு உண்ண வேண்டும். சிவராத்திரி அன்று அதிகாலையில் எழுந்து ஸ்ஞானம் செய்து, சூரியன் உதிக்கும்போது தங்கள் வீட்டு சுவாமி அறையில் செய்ய வேண்டிய பூசையை முடித்துப் பின்பு சிவன்கோயில்களுக்குச் சென்று பூசை வழிபாடுகளில் ஈடுபடுவது உத்தமம் என ஆகம விதிகளில் கூறப்படுகின்றது. அன்று மாலை சிவன்கோயிலுக்கு அர்ச்சனைப் பொருள்களுடன் சென்று நான்கு சாமப் பூசைகளிலும் கலந்து வழிபடலாம்.

> சிவராத்திரி அன்று இரவு நான்கு சாமங்களிலும் தூங்காமல் கண்விழித்து பூசை செய்து மறுநாள் விடியற்காலை ஸ்ஞானம் செய்து அனுஷ்டானங்களை முடித்துப் பின்னர் குருவை வணங்கி அந்தணர்களுக்கு வஸ்திரம், அரிசி, மரக்கறி முதலான தானங்களை வழங்கிய பின்னர் விரதத்தை முடிவுக்குக் கொண்டுவரும் பொருட்டு, கோயில்களிலோ அன்றி வீடுகளிலோ குடும்பத்தாருடன் சேர்ந்து உணவு உண்ணலாம்.

கோயில்களுக்குச் செல்ல இயலாதவர்கள் வீட்டிலும் மன அமைதியுடன் வழிபடலாம். வில்வ இலைகளைக் கொண்டு சிவனை அர்ச்சனை செய்வது மிக உத்தமம். சிவனது ஐந்தெழுத்து மந்திரமான “சிவாயநம” என்ற மந்திரத்தை உச்சரித்துப் பூசிக்க வேண்டும். இதன்போது லிங்கத்தை வைத்துப் பூசிப்பது உத்தமம். கோயில்களில் சிவபெருமானின் மூல மந்திரத்தை 108 முறை பாராயணம் செய்யவேண்டும். சிவராத்திரி அன்று இரவு நான்கு சாமங்களிலும் தூங்காமல் கண்விழித்து பூசை செய்து, மறுநாள் விடியற் காலை ஸ்ஞானம் செய்து அனுஷ்டானங்களை முடித்துப் பின் குருவை வணங்கி அந்தணர்களுக்கு வஸ்திரம், அரிசி, மரக்கறி முதலான தானங்களை வழங்கிய பின்னர், விரதத்தை முடிவுக்குக் கொண்டு வரும் பொருட்டு, கோயில்களிலோ அன்றி வீடுகளிலோ குடும்பத்தாருடன் சேர்ந்து உணவு உண்ணலாம்.

சிவராத்திரி நன்நாளில் உபவாசம் இருக்க முடியாதோர் நான்கு சாமப் பூசை முடிந்த பின், இளநீர், பால் பழங்கள் அருந்தலாம். விரதமிருந்தவர்கள் சிவராத்திரிக்கு மறுநாள் பகலில் உறங்கக் கூடாது. சிவனுடைய நாமங்களை உச்சரித்தும், சிவபுராணம் படித்தும் பகல் பொழுதைக் கழித்து, மாலையானதும் சிவனை வழிபட்டு அன்று இரவு உணவு எதுவும் உண்ணாமல் உறங்க வேண்டும். இதுவே வேத ஆகமங்களில் கூறப்பட்ட நியதி. சிவராத்திரி தினத்தன்று முழு உபவாசம் இருந்து சிவனை உள்ளன்போடு நான்கு சாமப் பூசைகளிலும் வணங்கினால், எல்லாம் வல்ல எம்பெருமான் நாம் கேட்ட வரங்களைத் தந்து வாழ்வில் சுபீட்சத்தையும்-முன்னேற்றத்தையும்-நன்மைகளையும் மனமிரங்கி அளிப்பார் என்பது இந்து மத மக்களின் நம்பிக்கை. எனவே, இன்றைய சிவராத்திரி நன்நாளில். இந்து மத மக்களாகிய நாம் சிவனை உள்ளன்போடு வணங்கி சிவராத்திரி விரதமிருந்து, இந்த மண்ணிலே நல்ல வண்ணம் வாழ்ந்து மனிதப் பிறவி எடுத்ததன் நற்பயனை அனுபவிக்க எல்லாம் வல்ல இறைவன் அருள்பாலிப்பாராக!

*கட்டுரையாளர்:*
*உதவிக்கல்விப்பணிப்பாளர் (அழகியல்)*
*தீவகக் கல்வி வலயம், வேலணை.*

# ஆண்களுக்கான
## மச்ச பலன்கள்



இரு புருவங்களுக்கு மத்தியில் மச்சம் இருந்தால் தீர்க்காயுள்.

நெற்றியின் வலப்புறத்தில் மச்சம் இருந்தால் எதிர்பாராத தனப்பிராப்தி கிடைக்கும்.

வலது புருவத்தில் மச்சம் இருந்தால் அதிகாரமான மனைவி அமைவார்.

வலது பொட்டில் மச்சம் இருந்தால் திடீரென பெரும் செல்வமும் புகழும் கிடைக்கும்.

வலது கண்ணில் மச்சம் இருந்தால் நண்பர்கள், உறவினர் மூலம் புகழ் கிடைக்கும்.

வலது கண்ணுக்குள் வெண்படலத்தின் மேற்புறத்தில் மச்சம் இருந்தால், அவர் ஆன்மிக சிந்தனையுள்ளவராக புகழ் பெற்று விளங்குவார்.

இரு கண்களில் ஏதேனும் ஒன்றில் வெண்படலத்தின் கீழ் புறத்தில் மச்சம் இருந்தால், அவர்கள் பல பிரச்சினைகளைச் சந்திப்பார்கள்.

இரு கண்களில் ஏதேனும் ஒரு வெளிப்புற ஓரத்தில் மச்சம் இருந்தால், அவர் வாழ்க்கை சீராக இருக்கும். இருப்பினும் தனது வாழ்நாளில் அவர் ஏதேனும் ஒரு வன்முறைச் சம்பவத்தை சந்திப்பார்.

இடது புருவத்தில் மச்சமிருந்தால், பணக்கஷ்டமான வாழ்க்கை அமையும்.இடது கண் வெண்படலத்தில் மச்சமிருந்தால் வறுமையான வாழ்க்கை அமையும். இருப்பினும் அதைச் சமாளிக்கும் பக்குவமும் இருக்கும்.

இடது கண்ணின் வலப்புறத்தில் மச்சம் இருந்தால் சொத்து விடயங்களில் சங்கடங்களைச் சந்திப்பார்கள். இருப்பினும் ஓரளவுக்கு சொத்தைச் சேகரித்து விடுவார்கள்.

இடது கண்ணின் இடப்புறத்தில் மச்சம் இருந்தால், உறவினர்களுடன் பிரச்சினை ஏற்பட்டு தனிநபர் ஆவார்கள். இருப்பினும் அவர்களது வாழ்நாளின் பிற்பகுதியில் அதிர்ஷ்டத்தை அடைவார்கள்.

மூக்கின் மேல் பகுதியில் மச்சம் இருந்தால் அவர்கள் எல்லா சௌகரியமும் பெற்றிடுவார்கள்.

மூக்கின் வலதுபுறத்தில் மச்சம் இருந்தால் நினைத்ததை நடத்தி முடிக்கும் வல்லமை பெற்றிருப்பார்கள்.மூக்கின் இடது புறத்தில் மச்சம் இருந்தால், எதையும் நம்பாதவர்களாக இருப்பார்கள். தவறான பெண்ணின் சிநேகிதமும் இவர்களுக்கு கிடைக்கும்.

மூக்கின் நுனியில் மச்சம் இருந்தால், அவர்கள் தயக்க குணம் உள்ளவர்களாக இருப்பார்கள், சற்று கர்வமும், சற்று பாதுகாப்பு உணர்வும் இவர்களிடம் மிகுந்திருக்கும்.

மூக்கின் கீழே மச்சமுள்ளவர்கள் கேடான வழிகளில் பணத்தை செலவிடுபவர்களாக இருப்பார்கள்.


நாசித்துவாரங்களுக்கு மேலே மச்சம் உள்ளவர்கள் நவநாகரிக மோகமுள்ளவர்களாக இருப்பார்கள். வசதியான வாழ்க்கையைக் கொண்டிருப்பார்கள்.

மேல் உதட்டிலோ அல்லது கீழ் உதட்டிலோ மச்சம் இருந்தால், அவர்கள் காதல் உணர்வு மிகுந்திருப்பார்கள்.

மோவாயில் மச்சம் இருந்தால், செல்வாக்கு, புகழ் இவற்றோடு சமூகத்தில் நல்ல மதிப்புப் பெற்றிருப்பார்கள்.

(தொடரும்)

## இது புதுசு



ரீசேட் வகைகளிலான மேற் சட்டைகள் (பிளவுஸ்கள்) நெற் வேலைப்பாடுகளுடன் தற்போது சந்தைக்கு வந்துள்ளன. இவை 500 ரூபாவில் இருந்து விற்பனை செய்யப்படுகின்றன.



## விரல் நகங்களை பராமரிப்பது எப்படி?

நகங்கள் உறுதியற்று உடைவதற்கு இரும்பு மற்றும் கல்சியம் ஆகிய சத்துக்களின் குறைபாடுகளே காரணம். நகத் தைப் பராமரிக்கும் எளிய வழிமுறைகளைப் பார்க்க லாம்.

நகங்களை வெட்டும் முன்னர் எண்ணெய் தடவி விட்டு, சிறிது நேரம் கழித்து வெட்டினால், விரும்பும் வடிவத்திலும், அழகாகவும் வெட்ட இயலும்.

தண்ணீரை மிதமாகச் சூடுபடுத்தி, சிறிது உப்புக் கலந்து, அதில் விரல்களை சிறிது நேரம் வைத்திருந்தால், விரல்கள் புத்துணர்ச்சியுடன் காணப்படும். சிலருக்கு நகம் கடினத் தன்மையுடன் இருப்பதால், நகத்தை வெட்டுவதற்குக் கஷ்டமாக இருக்கும். அப்படிப்பட்டவர்கள் குளித்தவுடன் நகத்தை வெட்டலாம். நகம் ஈரத்தன்மையுடன் இருப்பதால், எளிதாக வெட்டலாம். அதே போல், தேங்காய் எண்ணெய் தடவி சிறிது நேரம் கழித்து வெட்டினாலும் எளிதாக வெட்டலாம். நகங்கள் அடிக்கடி உடைந்து போகிறவர்கள், சிறிதளவு பேபி எண்ணெயில் நகங்களை மூழ்கும் படி வைத்தால், நகங்கள் உறுதியாகும்.

கிளிசரின் மற்றும் எலுமிச்சைச் சாறு கலந்து, அதை நகத்தில் தடவி சிறிது நேரம் கழித்துக் கழுவினால், நகங்கள் பளபளப்பாக இருக்கும். அதேபோல், பாதாம் எண்ணெயை நகங்களில் பூசி சிறிது நேரம் கழித்து, கடலை மாவினால் கழுவினாலும் நகங்கள் பளபளப்படையும்.

## வரலாற்றில் இன்றைய தினம்

1739 - இந்திய மொகலாய சாம்ராச்சியம் பேரரசர் முகமட் ஷாவின் படைகள் ஈரானிய ஆட்சியாளர் நடேர்ஷாவின் படைகளால் தோற்கடிக்கப்பட்டன.

1848 - பிரான்சின் அரசர் லூயிஸ் பிலிப் முடிதுறந்தார்.

1881 - சீனாவும், ரஷ்யாவும், சீன- ரஷ்ய உடன்பாட்டில் ஒப்பமிட்டன.

1916 - ஹென்சன் நோயாளிகளைத் தனிமைப் படுத்தும் ஜகியோவன் எனப்படும் சிகிச்சை நிலையம் கொரிய கவர்னர் லகனரால் தொடங்கப்பட்டது.

1918 - எஸ்தோனியர் சுதந்திரப் பிரகடனம் செய்தனர்.

1920 - நாஸிக் கட்சி தொடங்கப்பட்டது.

1920- நான்ஸி அஸ்ரர் மூன்று மாதங்களுக்கு முன்னர் நாடாளுமன்ற உறுப்பினராகத் தேர்ந்தெடுக்கப்பட்ட நிலையில் ஐக்கிய இராச்சிய நாடாளுமன்றத்தில் உரையாற்றிய முதல் பெண் நாடாளுமன்ற உறுப்பினரானார்.

1945- எகிப்திய பிரதமர் அஹமட் மஹிர் பாடா நாடாளுமன்றில் அறிக்கை ஒன்றை வாசித்த பின்னர் கொலை செய்யப்பட்டார்.

1976 - கியூபாவின் தற்போதைய அரசமைப்பு முறைப்படி நடைமுறைக்கு வந்தது.

1989 - அமெரிக்க விமான சேவை விமானம் - 811 நியூசிலாந்துக்குப் பறந்து கொண்டிருந்த வேளை அதன் கதவு ஒன்று திறந்ததில் வர்த்தக வகுப்பில் பயணித்த 9 பயணிகள் தூக்கி வீசப்பட்டனர்.

1992 - ஜெயலலிதாவின் 44ஆவது பிறந்த தினம் கடந்தவார கும்பகோண மகாமகத் திருவிழா இடரால் கொண்டாடப்படவில்லை.

1992 - மாற்றுத் தீர்வு இன்னும் இல்லை. எமது திடசித்தம் அசைக்கப்பட முடியாதென கொழும்புப் பத்திரிகைக்கு பிரபா செவ்வி.

1992- ஹெல உறுமய மீது நடவடிக்கை இல்லையென சுதந்திரக்கட்சி முடிவு.

1993 - ஆள்கள் காணாமற் போதல் விடயத்தில் சிறிலங்காவுக்கே முதலிடம் என ஐ.நா.மனித உரிமை ஆய்வுக் குழு தெரிவிப்பு.

2007 - வடகொரியா போன்றவற்றின் அச்சுறுத்தலைக் கண்காணிப்பதற்காக நான்காவது உளவு செயற்கைக் கோளை ஜப்பான் விண்ணில் ஏவியது.

2008 - கியூபா ஜனாதிபதி பிடல் காஸ்ட்ரோ 32ஆண்டு பதவியின் பின்னர் ராஜினாமா செய்தார். கம்யூனிஸ்ட் கட்சித்தலைவராக மேலும் 3 ஆண்டுகள் தொடர்ந்தார்.

2014- தமிழ் அரசியல் கைதி சிறையில் மர்மச் சாவு, தூக்கில் தொங்க விடப்பட்டாரா எனச் சந்தேகம்.

2014- வடக்கு-கிழக்குக்கான உதவிகளைத் தெற்கிற்கு மாற்ற அரசு முயற்சியென ஜேர்மன் தூதுவரிடம் வடக்கு முதலமைச்சர் தெரிவிப்பு.

2014 - தாய்லாந்தில் தொடர் போராட்டம். பிரதமர் பாங்கொக்கிலிருந்து வெளியேறினார்.

2014 - உலகின் மூத்த மனிதர் ஒலிஸ் ஹேடஸ் சோமர் 110 ஆவது வயதில் லண்டனில் சாவு.

2014 - படையினரின் ஆக்கிரமிப்பில் தமிழரின் சொந்த நிலங்கள். தடுத்து நிறுத்துமாறு மாகாண சபை உறுப்பினர் சி.சிவமோகன் கோரிக்கை.

## நாளை

**மாசி-13**

சனிக்கிழமை -25.02.2017

திதி: சதுர்த்தசி மு.இ. 09.42

நட்சத்திரம்: திருவோணம் கா.07.22

சுபநேரம்:03.29-04.59 வரை

ராகுகாலம்:09.29-10.59 வரை

ஜயோதா
உத்தியோகபூர்வ முடிவுகள்
சீட்டிழுப்பு வாரம் 1343
சீட்டிழுப்பு திகதி 2017.02.23
வெற்றி இலக்கங்கள்
17 39 58 62 T (ஆங்கில எழுத்து)
அடுத்த திங்கட்கிழமைக்கான ஜக்பொட்
ரூ. 18,218,575/-
தொ.பே: 011 4062002 / 0114062062 Web: www.dlb.lk
SMS: DLB<space>LOT<space>JY என டைப் செய்து 1919 இற்கு அனுப்பவும். அல்லது துரித அழைப்பு 1919
மஞ்சள் நிற டிக்கெட்டுக்கள் 2017.02.27 ஆம் திகதி திங்கட்கிழமை சீட்டிழுப்புக்கு செல்லுபடியாகும்.
வெற்றி பெறும் டிக்கெட்டுக்கள் 6 மாதங்களுக்கு செல்லுபடியாகும்.

உத்தியோகபூர்வ முடிவுகள்
Development Fortune
அபிவிருத்தி அதிர்ஷ்டம்
சீட்டிழுப்பு வாரம் 19
சீட்டிழுப்பு திகதி 23.02.2017 வியாழக்கிழமை
வெற்றி இலக்கங்கள் 18 28 41 57
சுப்பர் இலக்கம் 03
அதிர்ஷ்ட மாதம் ஜனவரி
அடுத்த மிகப்பெரிய ஜக்பொட் 7, 821, 486/=
அடுத்த சுப்பர் ஜக்பொட் 3, 390, 325/=
அடுத்த ஜக்பொட் 1, 087, 252/=
2017.02.25 திகதி சனிக்கிழமை இளஞ்சிவப்பு நிற டிக்கட்டுகள் சீட்டிழுப்புக்கு செல்லுபடியாகும்.
வெற்றி பெறும் டிக்கட்டுகள் 6 மாதங்களுக்கு செல்லுபடியாகும்.
அபிவிருத்தி லொத்தர் சபை
356, கலாநிதி கொல்வின் ஆர்.டீ சில்வா மாவத்தை, யூனியன் பிளேஸ், கொழும்பு 02.
தொலைபேசி: 011 333 546-47 துரித அழைப்பு 0114 824 824 www.dlb.lk

புதிய சுகாதார கற்கை நெறிகள் ஆரம்பம்
2016/2017 அரசாங்கத்தால் அங்கீகரிக்கப்பட்ட
தனியார் தாதியர் பயிற்சிப்பாடசாலை
சுகாதார பராமரிப்பு மற்றும் தாதியர் சேவையில் இணைந்து கொள்ள ஓர் அரிய சந்தர்ப்பம்.

இப்பயிற்சி நெறிகளில் இணைய ஆர்வமுள்ளவர்களிற்கு
தெரிவுப்பரீட்சையானது 25.02.2017
சனிக்கிழமை காலை 8.30 மணிக்கு
தாதிய பயிற்சிப்பாடசாலை
Institute of Medical Sciences, Green Memorial Hospital, Manipay.
கட்டண புலமைப்பரிசில்களும் வழங்கப்படும்.
மேலதிக தகவல்களுக்கு: தொலைபேசி இல.
021 225 6990, 021 320 3970, 077 7286 164
பயிற்சி இணைப்பாளர்
Institute of Medical Sciences, Green Memorial Hospital , Manipay

# அந்தியேட்டி அழைப்பும் நன்றி நவிலலும்



பிறப்பு
21.03.1933

இறப்பு
25.01.2017

யாழ். கலட்டியைப் பிறப்பிடமாகவும், நாவாந்துறையை வசிப்பிடமாகவும் கொண்ட

## திருமதி பாக்கியம் அருமைநாயகம்

அவர்களின் அந்தியேட்டிக்கிரியை இன்று (24.02.2017) வெள்ளிக்கிழமை மு.ப. 11 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெறும் அத்தருணம் தாங்கள் தங்கள் குடும்பசகிதம் வருகை தந்து அன்னாரின் ஆத்ம சாந்திப்பிரார்த்தனையிலும் அதனைத்தொடர்ந்து நடைபெறும் மதிய போசன நிகழ்விலும் கலந்து கொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

அமரர் அமரத்ததுவம் அடைந்த நேரம் சகல வழிகளும் உறுதுணை புரிந்து அஞ்சலி செலுத்திய உற்றார், உறவினர், நண்பர்கள் மற்றும் கண்ணீர் அஞ்சலிப்பிரசுரங்கள் வெளியிட்டோர்களுக்கும் மற்றும் வெளிநாட்டில் இருந்து அனுதாபம் தெரிவித்த எமது உற்றார், உறவினர், நண்பர்கள் மற்றும் எமது அருகில் இருந்து தோளோடு தோள் தந்த நண்பர்களுக்கும் எமது மனமார்ந்த நன்றிகளைத் தெரிவித்துக்கொள்கின்றோம்.

குறிப்பு - இந்த அழைப்பை தனிப்பட்ட அழைப்பாக ஏற்றுக்கொள்ளவும்.


187/2, மானிப்பாய் வீதி,
ஓட்டுமடம், யாழ்ப்பாணம்.
077 411 5387

குடும்பத்தினர்.

வேலை ஆள்கள் தேவை
1.கணக்காளர்
2.களஞ்சிய பொறுப்பாளர்
[சிங்களம் தெரிந்தவர் விரும்பத்தக்கது.]
தொடர்பு:-சிற்றி சப்பிளயர்ஸ்
இல. 129,ஸ்ரான்லி வீதி,
யாழ்ப்பாணம்.

SUPER BALL
சுப்பர் போல்
உத்தியோகபூர்வ முடிவுகள்
சீட்டிழுப்பு வாரம் 619
சீட்டிழுப்பு திகதி 23.02.2017
வியாழக்கிழமை
வெற்றி இலக்கங்கள்
10 49 53 57 K (ஆங்கில எழுத்து)
அடுத்த சுப்பர் ஜக்பொட்
ரூ.51,393, 719/=
தொ.பே: 011 4062002 / 0114062062 Web: www.dlb.lk
SMS: DLB<space>LOT<space>SB என டைப் செய்து 1919 இற்கு அனுப்பவும். அல்லது துரித அழைப்பு: 1919
நீல நிற டிக்கட்டுக்கள் 2017.02.25ஆம் திகதி சனிக்கிழமை சீட்டிழுப்புக்கு செல்லுபடியாகும்.
வெற்றி பெறும் டிக்கெட்டுக்கள் 6 மாதங்களுக்கு செல்லுபடியாகும்.

# கண்ணீர் அஞ்சலி



எமது பாடசாலை ஆசிரியை
திருமதி கமலேஸ்வரி நாகேந்திரம்
அவர்களின் பாசமிகு தாயார்

## திருமதி இலட்சுமிப்பிள்ளை முருகுப்பிள்ளை

22.02.2017 புதன்கிழமை காலமாகியதையிட்டு துயருற்றிருக்கும் அன்னாரது குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக்கொள்கின்றோம்.

பாடசாலைச் சமுகம்,
வரணி வடக்கு அ.த.க.பாடசாலை

(AJA/IN/860) (22,18)

வெள்ளவத்தையில் Hamers Avenue வில் நாள், கிழமை வாடகைக்கு 1,2, 3, 6 அறைகளுடன் கூடிய தனி வீடு Luxury House சகல வசதிகளுடன் (A/C, Fridge, Washing Machine, Hot Water, Cable TV, Kitchen உபகரணங்கள், (CarPark) வெளிநாட்டில் இருந்து வருபவர்களுக்கும் சுப காரியத்துக்கும் மணமகன், மணமகள் வீடாக பாவிப்பதற்கும் மிக உகந்தது வெள்ளவத்தை Market, Bus Stand இற்கு மிக அண்மையில் உள்ளது
077 766 7511/ 011 250 3552
(சத்தியா)

வெள்ளவத்தையில் குறைந்த நாள் வாடகைக்கு அறைகளைப் பெற்றுக்கொள்ள நாடுங்கள்.
(800- 3500 வரை)
UTHAYA REST / THAAS REST
58, HAMERS AVENUE WELLAWATTE TEL: 2503552 2361242 2360243
391/6, GALLE ROAD WELLAWATTE 2360515 2362586
Hot Line: 077 766 7511
வெள்ளவத்தை Station, Bus Stand, Market, Hospital ஆகிய இடங்களுக்கு மிக அண்மையில் அமைந்துள்ளது.

KINGS ELECTRONICS(PVT) LTD
கிங்ஸ் எலக்ரோனிக்ஸ்
SPECIAL OFFERS
LED TV'S
Samsung 32" -29900
Hisence 32" -24500
Sony 40" -64900
Hisence 24" -17900
Tcl 32" -21900
Panasonic 32" -28500




அழகிய, அதிநவீன தரத்தோடு மின் உபகரணங்கள், தளபாடங்கள், மற்றும் குழந்தைகளுக்கான பொருட்கள்



INNOVEX WASHING MACHINE
FIVE YEARS WARRANTY
34500/=



SAMSUNG R19 REFRIGERATOR
34900/=
WARRANTY 10 YEARS

SONY DVD Player



ONE YEAR WARRANTY
PRICE
RS 5,250/=

Furnitures
Toys
Electronics
Baby Care

Glass TV Stand
10,200/=



WEB: WWW.MYKINGS.lk
021-4546699
Facebook/kingsjaffna
12A, Point Petro Road, Jaffna
(வேம்படி சந்திக்கு அருகாமையில்)

## புதுக்குடியிருப்பு...

அறவழிப் போராட்டமும் உணவு தவிர்ப்பும் நேற்று 21ஆவது நாளாகவும் தொடர்ந்தது.

21 நாள்களாக அறவழிப் போராட்டத்தை முன்னெடுத்துவரும் மக்கள் கடந்த 14ஆம் திகதி முதல் உணவுதவிர்ப்புப் போராட்டத்திலும் ஈடுபட்டு வருகின்றனர். நேற்றைய தினமும் ஐந்தாம் கட்டமாக மூன்று பொதுமக்கள் தமது உணவு தவிர்ப்புப் போராட்டத்தை ஆரம்பித்தனர்.

உணவு தவிர்ப்புப் போராட்டத்தில் ஈடுபட்டுள்ள மக்களை முள்ளியவளை பிரதேச மக்கள் நேற்று நேரில் சென்று தங்கள் ஆதரவை தெரிவித்ததுடன் போராட்டத்திலும் ஈடுபட்டனர். (து-7)

## குற்றம்...

மாட்டார்கள் என்று ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியின் பொதுச் செயலாளரான அமைச்சர் மகிந்த அமரவீர தெரிவித்தார்.

நாடாளுமன்றத்தில் நேற்று நடைபெற்ற இலங்கைப் பொறியியற் பேரவை சட்டவரைவு மீதான விவாதத்தில் கலந்துகொண்டு உரையாற்றுகையிலேயே அவர் மேற்கண்டவாறு கூறினார்.


அவர் மேலும் தெரிவித்ததாவது:

இராணுவத்தினரை அரசியல் ரீதியான பழிவாங்கல்களுக்கு உட்படுத்துவதில்லை என்ற நிலைப்பாட்டிலேயே அரச தலைவர் மைத்திரிபால இருக்கின்றார். அரசின் நிலைப்பாடும் இதுவாகவே இருக்கின்றது. அவர்கள் ஒழுக்கமற்ற விதத்தில் - இராணுவ சட்டத் திட்டங்களுக்கு முரணான வகையில் செயற்பட்டிருந்தால் அவர்களுக்கு எதிராக நடவடிக்கை எடுக்கப்படும்.

புலனாய்வாளர்கள் என்ற போர்வையைப் பயன்படுத்தி எவருக்கேனும் அநீதி இழைத்திருந்தால், குற்றமிழைத்தவர் இராணுவம் என்ற காரணத்துக்காக அரசு அமைதியாக இருந்துவிட முடியாது. அதற்கு எதிராக நடவடிக்கை அவசியம். படையினரை எந்தவொரு சந்தர்ப்பத்திலும் அரசு பலிக்கடாவாக்காது. அவர்களைப் பாதுகாப்பதற்காக அரசு தீவிரமாகச் செயற்படும்.

மனிதநேயத்துடனேயே படையினர் போரை முடித்தனர் என்று நாம் நம்புகின்றோம். 99 சதவீதமான படையினர் ஒழுக்கமாகவே செயற்பட்டுள்ளனர். மீதமுள்ள ஒரு சதவீதத்தினர் தவறிழைத்திருக்கும் பட்சத்தில் நடவடிக்கை தேவை.

பாலியல் வன்புணர்வு, படுகொலை, ஊடகவியலாளர்கள் கடத்தல் போன்ற நடவடிக்கையில் படையினர் ஈடுபட்டிருந்தால் அவர்களுக்கு எதிராக தண்டனை வழங்கப்படுவதை மக்கள் எதிர்க்கமாட்டார்கள். அதே வேளை, இந்த நாட்டில் சகல மக்களுக்கும்சமஉரிமைவழங்கப்படவேண்டும். எவருக்கும் பாகுபாடு காட்டப்படக் கூடாது - என்றார். (து-5)



## பிலக்குடியிருப்பு மக்களின் போராட்ட களத்தில்

**வேலை ஆள்கள் தேவை**

மீசாலையில் அமைந்துள்ள நிமல் வெல்டிங் அன் ஹாட்வெயார் கடை ஒன்றிற்கு வேலை ஆள்கள் (ஆண்,பெண்) தேவை. (ஒட்டு வேலை தெரிந்த ஆண்கள் விரும்பத்தக்கது.)

அம்மன் வீதி,
புத்தூர் சந்தி,
கொடிகாமம்.

தொடர்பு :
021 490 3188
077 345 6552
077 279 2811

## 25 நாள்களைக்...

இந்தப் போராட்டத்துக்கு நாளுக்கு நாள் ஆதரவு அதிரித்த வண்ணம் உள்ளது. நேற்று யாழ்ப்பாணப் பல்கலைக்கழக வவுனியா வளாக மாணவர்கள் நேரில் சென்று தமது ஆதரவைத் தெரிவித்தனர்.

புதுக்குடியிருப்பு வணிகர் கழக உறுப்பினர்களும் பிலக்குடியிருப்பு மக்களை நேரில் சென்று சந்தித்து ஆதரவைத் தெரிவித்ததுடன் போராட்டத்திலும் கலந்துகொண்டனர். (த-7)

## மாணவர்...

இரண்டுபேர் உயிரிழந்தனர். இவர்களது கொலை தொடர்பில் ஐந்து பொலிஸார் கைது செய்யப்பட்டு விளக்கமறியலில் வைக்கப்பட் டுள்ளனர்.

இந்த வழக்கு விசாரணை நேற்று யாழ்ப்பாண நீதிவான் மன்றுக்கு விசாரணைக்கு வந்தது. சந்தேகநபர்களான ஐந்து பொலிஸாரும் நேற்று மன்றில் முன்னிலையாகியிருந்தனர்.

வழக்கை விசாரித்த யாழ்ப்பாண நீதிவான் மன்றின் பதில் நீதிவான் வி.ரி.சிவலிங்கம் சந்தேக நபர்களுக்கான விளக்கமறியலை எதிர்வரும் மார்ச் மாதம் 9ஆம் திகதி வரை நீடித்தார்.

யாழ்ப்பாணம் குளப்பிட்டிச் சந்தியில் வைத்து கடந்த ஆண்டு ஒக்ரோபர் மாதம் 20ஆம் திகதி இரவு மோட்டார் சைக்கிளில் பயணித் துக்கொண்டிருக்கும்போது யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தின் 3ஆம் வருட கலைப்பீட மாணவர்களான விஜயகுமார் சுலக்சன், நடராஜா கஜன் ஆகிய இரண்டு மாணவர்களும் துப்பாக்கிச் சூட்டுக்கு இலக்காகி உயிரிழந்தனர் என்பது குறிப்பிடத்தக்கது. (த-ரி)

## வீடக்கு...

சாதகமாக வெளியிடப்பட்டு வருகின்றன. இவ்வாறான அரசியல் கட்சிகள், அரசியல் பிரதிநிதிகளுக்கு எதிராக ஏன் அரசு நடவடிக்கை எடுக்கவில்லை.

இவ்வாறு மகிந்த ஆத ரவு அணி நாடாளுமன்ற உறுப்பினர் பத்ம உதய சாந்த குணசேகர கேள்வி எழுப்பினார்.

நாடாளுமன்றத்தில் கேள்வி நேரத்தில் கருத் துத் தெரிவிக்கையி லேயே அவர் மேற்கண் டவாறு குறிப்பிட்டார்.

தமிழீழ விடுதலைப் புலிகளால் படுகொலை செய்யப்பட்டவர்களது விவரங்களை மாவட்ட ரீதியாகக் கோரியுள்ள உதய சாந்த, நேற்றைய அமர்வில் அம்பாறை மாவட்டத்தில் விடுதலைப் புலிகளினால் படுகொலை செய்யப்பட்டவர்களின் விவரங்களைக் கோரியிருந்தார்.

இதற்குப் பதில் அளித்த சட்டம், ஒழுங்குகள் அமைச்சர் சாகல ரத்நாயக்க, மட்டக்களப்பு, வவுனியா, அம்பாறை மாவட்டங்கள் உள்ளடங்கலாக 8 மாவட்டங்களின் தகவல்களைக் கோரியுள்ளனர். சுமார் 10 ஆண்டுகளுக்கு முன்பான தகவல்கள் என்பதால் இவைசம்பந்தமான முழுமையான அறிக்கை வழங்க போதியளவு காலம் தேவைப்படும்.

பொலிஸாருக்குக்கிடைக்கப் பெற்றுள்ள தக வல்களுக்கு அமைவாக தமிழீழ விடுதலைப் புலிகளினால் அம்பாறை மாவட்டத்தில் சிங்களவர்கள் ஆயிரத்து 107, தமிழர்கள் 584, முஸ்லிம்கள் 232 உள்ளடங்கலாக ஆயிரத்து 923 பேர் படு கொலை செய்யப்பட்டுள்ளனர். ஈ.பி.டி.பி. அரசியல் உறுப்பினர்கள் மூவர் உள்ளடங்கு வதுடன் 757 அரச ஊழியர்களும் படு கொலை செய்யப்பட்டுள்ளனர் – என்றார்.

இடையில் குறுக்கு வினா எழுப்பிய உதய சாந்த, இவ்வாறான பெரிய அழிவை ஏற்படுத்திய விடுதலைப் புலிகள் தொடர்பில் பொலிஸில் செய்யப்பட்டுள்ள முறைப்பாடுகளுக்கு எடுக்கப்பட்டுள்ள நடவடிக்கை என்ன? காணாமற்போனவர்களைக் கண்டறிய காரி யாலயம் அமைக்க முடிந்த அரசால் படுகொலை செய்யப்பட்டவர்க ளுக்கு நியாயமான தீர்வை வழங்க முடியாதது ஏன்? என வும் கேள்வி எழுப்பினார்.

மேலும் கருத்துத் தெரிவித்த அவர், பிரிவினை வாதச் செயற்பாடுகள் வடக்கு, கிழக்கில் அதிகரித்துள்ளமை சில சம்பவங்கள் மூலம் உணர முடியும். சில அரசியல் கட்சிகளினதும், நாடாளுமன்றத்தைப் பிரதிநிதித்துவப்படுத்தும் பிரதிநிதித்துவப்படுத்தாத ஏனைய மக்கள் பிரதிநிதிகளினதும் கருத்துக்களும் இதற்குச் சாதகமாக வெளியிடப்பட்டு வருகின்றன. இவ்வாறான அரசியல் கட்சிகள், அரசியல் பிரதிநிதிகளுக்கு எதிராக எடுக்கப்பட்டுள்ள நடவடிக்கை என்ன? – என்றார்.


இது சம்பந்தமாக முன்னெடுக்கப்படும் விசாரணைகளில் நீங்கள் குறிப்பிடும் தகவல் உறுதி செய்யப்படுமாயின் அதற்கு எதிராக நடவடிக்கை எடுப்போம், என்று சட்டம், ஒழுங்குகள் அமைச் சர் சாகல ரத்நாயக்க தெரிவித்தார். (த-5)

## 150 கிலோ...

சோதனையிட்டனர். அதில் கஞ்சாப் போதைப் பொருள் பொதிகள் உள்ளமை கண்டறியப் பட்டது. இந்தியாவில் இருந்து கடத்தி வந்திருக்க லாம் என்று நம்பப்படும் சுமார் 150 கிலோ கிராம் கஞ்சாப் போதைப் பொருள் பொதிகள் கைப்பற்றப்பட்டன. கஞ்சாப் பொதிகள் கடத்தப்பட்ட போது, படகில் வைத்து 5 பேர் கைது செய்யப்பட்டனர். அவர்கள் விசாரணைக்கு உட்படுத்தப்பட் டுள்ளனர்' என்று பொலிஸார் தெரிவித்தனர். (வ-4,101,106)

## மரண அறிவித்தல்

### மார்க்கண்டு சிவசுப்பிரமணியம்



ஏழாலை மேற்கைப் பிறப்பிடமாகவும், வசிப்பிடமாகவும் கொண்ட மார்க்கண்டு சிவசுப்பிரமணியம் நேற்று (23.02.2017) வியாழக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற மார்க்கண்டு - முத்துப்பிள்ளை தம்பதியரின் அன்புமகனும் காலஞ்சென்ற தம்பையா - இளையபிள்ளை தம்பதியரின் அன்புமருமகனும் காலஞ்சென்ற பாக்கியவதியின் அன்புக்கணவரும் நடேசமூர்த்தி, சத்திய மூர்த்தி, சியாமிளாதேவி, கிருஷ்ணமூர்த்தி, மஞ்சுளாதேவி ஆகியோரின் அன்புத்தந்தையும் காலஞ்சென்றவர்களான செல்லம்மா, பரிமளம் மற்றும் அழகம்மா, பரமேஸ்வரி, மகேஸ்வரி காலஞ்சென்ற தங்கச்சிப்பிள்ளை ஆகியோரின் சகோதரரும் சோதிமாலா காலஞ்சென்ற தவரஞ்சினி மற்றும் சபேசராசா, ராஜகுமாரி, மகேசன் ஆகியோரின் அன்புமாமனாரும் துவாரகன், திவாகரன், கார்த்திகேயன், காண்டீபன், கார்த்திகா, அஜித்குமார், கிசானா ஆகியோரின் அன்புப்பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (24.02.2017) வெள்ளிக்கிழமை நண்பகல் 12 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக உசத்தியோடை இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

**மில்லேன்,**
**ஏழாலை மேற்கு, ஏழாலை.**

**தகவல்:**
**குடும்பத்தினர்**

## மரண அறிவித்தல்

### திருமதி நாகேஸ்வரி செல்வராஜா



3 ஆம் குறுக்குத்தெரு, யாழ்ப்பாணத்தைப் பிறப்பிமாகவும் முத்திரைச் சந்தியை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி நாகேஸ்வரி செல்வராஜா நேற்று (23.02.2017) வியாழக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான சிவகடாசம்-இரத்தினம் தம்பதியரின் மூத்தபுதல்வியும் காலஞ்சென்ற செல்வராஜாவின் அன்பு மனைவியும் காலஞ்சென்ற கனகரத்தினம், பாலசிங்கம், பவனோஸ்வரி, கமலராணி ஆகியோரின் அன்புச் சகோதரியும் காலஞ்சென்ற சிவாஜினி, மீனலோஜினி, ராஜினி (ஜேர்மன்), குமுதினி (கனடா), நாகலோஜினி (பபி), முத்திரசந்தி, சிறிதரன் (USA), முரளிதரன் (சவுதி), காலஞ்சென்ற பாஸ்கரன், பகீரதன்(ஜேர்மனி) ஆகியோரின் அன்புத் தாயாரும் குகமூர்த்தி, வாசுதேவன் (ஜேர்மன்), குனேந்திரன்(ஜேர்மன்), முத்தழகன் (கனடா), யோகேந்திரன் (அரசடி), விஜியா(USA), கோகிலவாணி (நீர்கொழும்பு), சிவரஞ்சினி, கஜி(ஜேர்மன்) ஆகியோரின் மாமியாரும் பிந்துகாசினி, பிருந்துஷா, சாருகன், கவின், ரூபன், தேவா, மிம்மிபிரியா, ராதா, தாரணி, வினோ, அனோஜன், நூர்திஸான், சமிரா, ஜனனி, ஜனனன் (சூட்டி. யோகேஸ்வரன்), கஜன் (**நியூ விஷ்ணு மோட்டோர்ஸ், ஆனைப்பந்தி**), மிரோஜன், லோஜித்தா ஆகியோரின் அன்புப் பேர்த்தியும் நவீன், யருன், இமயா ஆகியோரின் அன்புப் பூட்டியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் 27.02.2017 திங்கட்கிழமை முற்பகல் 11.00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக செம்மணி இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

**11/14 A.P.C. லேன்,**
**முத்திரைச்சந்தி, யாழ்ப்பாணம்.**
**(பேரன்) கஜன்-077 474 7217**

**தகவல்:**
**நாகலோஜினி (மகள்-பபி)**

## மரண அறிவித்தல்

### திருமதி பூமணி கனகரத்தினம்

**(S.K யாழ். மோட்டோர்ஸ் உரிமையாளரின் மனைவி)**



நாச்சிமார் கோயிலடியைப் பிறப்பிடமாகவும், ஓட்டுமடத்தை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி பூமணி கனகரத்தினம் 20.02.2017 திங்கட்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான செல்லத்துரை -அன்னம்மா தம்பதியரின் அன்பு மகளும் காலஞ்சென்றவர்களான சிவசம்பு - தெய்வானைப்பிள்ளை தம்பதியரின் அன்புமருமகளும் காலஞ்சென்ற கனகரத்தினத்தின் பாசமிகு மனைவி யும் காலஞ்சென்றவர் களான இரத்தினம் சோமசுந்தரம் மற்றும் யோகம்மா காலஞ்சென்றவர்களான திருநாவுக்கரசு வனிதமலர் ஆகியோரின் அன்புச் சகோதரியும் காலஞ்சென்றவர்களான பாக்கியம், மகேஸ்வரி மனோன்மணி சுப்பிரமணியம் ஆகியோரின் மைத்துனியும் பாக்கியம், துரைராஜசிங்கம் (போதகர்), குதுகலகுமாரி, துரைசிங்கம்(Denmark), நிர்மலகுமாரி, வசந்தகுமாரி (Swiss), பிரபாகரன் (France), பாஸ்கரன், ரஜனி ஆகியோரின் தாயும் காலஞ்சென்ற சண்முகராசா மற்றும் மங்களேஸ்வரி, நாதன் (துர்க்கா ரேடிங்வேக்ஸ்) காலஞ்சென்ற தில்லைநாதன் மற்றும் யோகராசா (Swiss), ரஞ்சிதவதனி (France), செந்தில்குமார் ஆகியோரின் மாமியும் குமுதினி, சுபாஸ்கரன் (Swiss), சாந்தினி (Swiss) ஜெயந்தினி, கஜன், ஜனுஜா, ரிஷாலினி, சிந்துஜா, தர்சலா, பகீரன் (London), டினேஷ் (London), கிஷோக்குமார் (Singapore), கேசுமார், உஷானி, பூவாஸ், நோவாஸ், லீசா (Swiss), விதுரா, பிரான்சிகா, தனுசன் (France) ஆகியோரின் பேர்த்தியும் கம்சிகன், டக்ஷனா, வெனிஷ்ரா, அலன், அபி ஆகியோரின் பூட்டியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (24.02.2017) வெள்ளிக்கிழமை நண்பகல் 12 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக கோம்பயன்மணல் இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

**21/1, ஓட்டுமடம் வீதி,**
**யாழ்ப்பாணம்.**

**தகவல்:**
**குடும்பத்தினர்.**



**மேடம்:** நல்லவர்களின் ஆலோசனையும், உதவியும் கிடைக்கும். தொழில், வியாபாரத்தில் தேவையான மாற்றம் செய்வீர்கள். வருமானம் அதிகரிக்கும். பெண்கள் விருந்து, விழாவில் பங்கேற்பர்.



**இடபம்:** எதிர்கால வளர்ச்சிக்கு வழியுண்டாகும். தொழிலில் கூடுதல் உழைப்பால் வருமானத்தைத் தக்க வைப்பீர்கள். பணியாளர்கள் பணிச்சுமையைத் திறம்படச் சமாளிப்பர். பெண்கள் மதிப்பு மிக்க பொருள்களைப் பாதுகாப்பது நல்லது.



**மிதுனம்:** குடும்பத்தினர் அதிருப்திக்கு ஆளாகலாம். தொழிலில் வளர்ச்சி பெற விடாமுயற்சி தேவை. லாபம் சுமாராக இருக்கும். பணியாளர்கள் சுதந்திரமின்மையால் அவதிப்படுவர். பிள்ளைகளின் செயற்பாடு நிம்மதிக்கு வழிவகுக்கும்.



**கடகம்:** நண்பர்களின் உதவி கேட்டுப் பெறுவீர்கள். தொழில், வியாபாரத்தில் வளர்ச்சிப் பணி எளிதில் நிறைவேறும். வருமானம் படிப்படியாக அதிகரிக்கும். பெண்கள் வீட்டு உபயோகப் பொருள் வாங்குவர். ஆரோக்கியம் பலம் பெறும்.



**சிங்கம்:** சுயலாபத்துக்காக சிலர் உங்களை அணுகலாம். தொழிலில் எதிர்பார்த்த வருமானம கிடைக்கும். பணியாளர்களுக்கு விரும்பிய இடமாற்றம் கிடைக்கும். பெண்களுக்குத் தாய் வீட்டினரின் அன்பும் ஆதரவும் கிடைக்கும்.






**கன்னி:** வழக்கத்துக்கு மாறாக பணியில் பொறுப்பு அதிகரிக்கும். தொழில், வியாபாரத்தில் லாபம் சுமாராக இருக்கும். பணியாளர்கள் பணிவிடயமாக வெளியூர் செல்வர். வாகனப் பயணத்தில் மிதவேகம் பின்பற்றவும்.



**துலாம்:** செயல்களில் தடுமாற்றம் ஏற்படலாம். தொழிலில் இலக்கு நிறைவேற கூடுதல் அவகாசம் தேவைப்படும். ஆதாயம் சுமாராக இருக்கும். பணியாளர்கள் பணிவிடயமாக வெளியூர் செல்வர்.




**விருச்சிகம்:** வாழ்வில் இனிய அனுபவம் காண்பீர்கள். தொழில், வியாபாரத்தில் லாபம் திருப்திகரமாக இருக்கும். பணியாளர்கள் விரும்பிய சலுகை கிடைக்கப் பெறுவர். மாணவர்கள் ஆர்வத்துடன் படிப்பர்.



**தனுசு:** எதிலும் முன்யோசனையுடன் செயற்படுவது நல்லது. தொழில், வியாபாரத்தில் லாபம் சுமாராக இருக்கும். பணியாளர்கள் சுதந்திரமின்மைக்கு ஆளாகலாம். பெண்கள் குடும்ப நலனுக்காகப் பாடுபடுவர்.



**மகரம்:** சாதுரியமாகச் செயற்பட்டு வருவீர்கள். தொழில், வியாபாரத்தில் புதிய சாதனை உருவாகும். வருமானம் பன்மடங்கு உயரும். பணியாளர்கள் சலுகை பெறுவர். மனைவியின் அன்பில் மனம் மகிழ்வீர்கள்.



**கும்பம்:** எதிர்பார்த்த உதவி கிடைக்க தாமதமாகலாம். தொழில், வியாபாரத்தில் இடையூறை சரி செய்வது நல்லது. லாபம் சுமார். பணியாளர்கள் பணிச்சுமையைச் சமாளிக்க முடியாமல் திணறுவர்.



**மீனம்:** உற்சாக மனப்பான்மையுடன் செயற்படுவீர்கள். தொழில், வியாபாரத்தில் திட்டமிட்ட இலக்கு சிறப்பாக நிறைவேறும். லாபம் அதிகரிக்கும். பணியாளர்கள் பாராட்டு வெகுமதி பெறுவர்.

## மாகாண...

விளையாட்டுத்துறை அமைச்சர் தயாசிறி ஜயசேகர இதனைத் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

19ஆவது திருத்தச்சட்டம் கொண்டுவரப்பட்டு அரச தலைவருக்கு உரித்தாகவிருந்த பல்வேறு அதிகாரங்கள் பல நிறுவனங்களுக்கு பகிர்ந்தளிக்கப்பட்டன. புதிய அரசமைப்பொன்று கொண்டுவரப்பட வேண்டுமாயின் பொது வாக்கெடுப்பொன்று கட்டாயம் நடத்தப்பட வேண்டும்.

கடந்த அரச தலைவர் தேர்தலின்போது பொது வாக்கெடுப்புக்குச் செல்லும் வகையில் எந்தவொரு நடவடிக்கையையும் மேற்கொள்ள மாட்டேன் என்று அரச தலைவர் தனது தேர்தல் விஞ்ஞாபனத்தில் கூறியிருந்தார்.

அதன்படி சிறிலங்கா சுதந்திரக் கட்சி பொது வாக்கெடுப்புக்குச் செல்லும் வகையிலான எந்தவொரு பரிசீலனையையும் மேற்கொள்ளாது. ஆளுநரின் அதிகாரங்கள் குறைக்கப்பட்டு மாகாண சபைகளுக்கு அதிகாரங்கள் வழங்கப்படவேண்டுமாயின் நிறைவேற்று அரச தலைவர் முறைமை கட்டாயம் இருக்க வேண்டும் என்ற உறுதியான நிலைப்பாட்டில் சிறிலங்கா சுதந்திரக் கட்சி இருக்கின்றது- என்றார். (த-4)

## திருக்கேதீஸ்வரத்தில்...

தெரிவித்தனர். இன்று அதிகாலை 5 மணிக்கு திருவனந்தல் பூசை வழிபாட்டுடன் ஆரம்பமாகும் திருக்கேதீஸ்வரர் ஆலய சிவராத்திரி நிகழ்வுகள் நாளை நண்பகல் 12 மணிக்கு இடம்பெறும் உச்சிக் காலப் பூசையுடன் நிறைவடையும்.

இன்று வெள்ளிக்கிழமை காலை 6 மணிக்கு கும்ப பூசை, 8 மணிக்கு காலைப் பூசை, 10 மணிக்குக் கும்ப பூசை, மதியம் 12 மணிக்கு உச்சி காலப் பூசை, பிற்பகல் 2 மணிக்கு திருவனந்தல், 3 மணிக்கு கும்ப பூசை, 4.30 மணிக்கு மகா பிரதோச பூசை, 5 மணிக்கு மாலைப் பூசை, முன்னிரவு 6 மணிக்கு முதலாம் சாம கும்ப பூசை, 8 மணிக்கு முதலாம் சாம பூசை, 9 மணிக்கு இரண்டாம் சாம கும்ப பூசை, 10.30 மணிக்கு இரண்டாம் சாமப் பூசை, 11 மணிக்கு 3ஆம் சாம கும்ப பூசை என்பன நடைபெற்று மீண்டும் நள்ளிரவு 12 மணிக்கு லிங்கோற்பவ பூசையான 3ஆம் சாமப் பூசை, பின்னிரவு 2 மணிக்கு 4ஆம் சாம கும்ப பூசை, பின்னிரவு 3 மணிக்கு 4ஆம் சாமப் பூசை, அதிகாலை 4 மணிக்குத் திருக் கதவடைத்தல், 4.15 மணிக்கு திருவனந்தல், 5.30 வசந்த மண்டபப் பூசை ஆகியன இடம்பெற்று பின்னர் நண்பகல் 12 மணிக்கு உச்சிகாலப் பூசையுடன் சிவராத்திரி விழா நிறைவடையும். (த-21)

## தனி ...

மும்முரமாக ஈடுபட்டுள்ளது. புதிய அரசமைப்புக் குறித்து பொது வாக்கெடுப்பு நடத்தப்பட்டு அது வெற்றியடைந்தாலென்ன தோல்வியடைந்தாலென்ன அது கூட்டமைப்புக்குச் சாதகமாகவே அமையும்.

இவ்வாறு மகிந்த அணி நேற்றுக் குற்றம் சுமத்தியது.

பத்தரமுல்லையில் அமைந்துள்ள முன்னாள் அரச தலைவர் மகிந்த ராஜபக்சவின் அலுவலகத்தில் நேற்று நடைபெற்ற செய்தியாளர் சந்திப்பில் நாடாளுமன்ற உறுப்பினரான கெஹலிய ரம்புக்வெல இதனைத் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

ஐ.நா மனித உரிமைகள் சபையில் அமெரிக்கா கொண்டுவந்த தீர்மானத்துக்கு இலங்கை அரசு இணை அனுசரணை வழங்கியிருந்தது. இந்தத் தீர்மானம் இலங்கையின் தேசிய பாதுகாப்புக்கு அச்சுறுத்தலாக அமைவதோடு நாட்டின் இறையாண்மையைப் பாதிக்கும் என்று நாம் பலமுறை சுட்டிக் காட்டினோம். இந்த விடயம் தொடர்பில் எதிர்க்கட்சியின் தலைவர் இரா.சம்பந்தன், அயலுறவு அமைச்சர் மங்கள சமரவீர வழங்கிய வாக்குறுதிகளை நிறைவேற்ற வேண்டும் என்று வலியுறுத்தியுள்ளார்.

அரச தலைவர் மைத்திரிபால சிறிசேன, அமெரிக்க அரச தலைவர் ட்ரம்புக்கு எழுதிய கடிதத்தில் இலங்கைக்கு எதிராக அமெரிக்காவால் கொண்டுவரப்பட்ட தீர்மானம் தங்களது சுயாதீனத்தைப் பாதிப்பதாகவும், தங்களை அமைதியாக இருக்கவிடுங்கள் என்று சுட்டிகாட்டியுள்ளார்.

இதே கூட்டு அரசுதான் இலங்கைக்கு எதிராகக் கொண்டுவரப்பட்ட தீர்மானத்துக்கு ஆதரவளித்தது. அதற்கான அனுசரணையை இந்தக் கூட்டு அரசின் சார்பில் அயலுறவு அமைச்சர் மங்கள சமரவீரவே கொடுத்திருந்தார். தற்போது இவ்வாறு கூறுவதால் என்ன நடக்கப் போகிறது?

தேர்தல் காலத்தில் தமிழ் மக்களின் வாக்குகளைப் பெற்றுக்கொள்வதற்காக இந்த அரசு, தமிழ்த் தலைவர்களுக்குப் பல்வேறு வாக்குறுதிகளை வழங்கியிருக்க கூடும். ஆனால், மகிந்த ராஜபக்சவின் தேர்தல் விஞ்ஞாபனத்தில் அரசமைப்பு மாற்றமொன்று ஏற்பட வேண்டுமெனவும், அந்த மாற்றம் பொது வாக்கெடுப்பின் ஊடாக நடைபெறவேண்டுமெனவும் தெரிவித்திருந்தார்.

ஆனால், தமிழ்த் தேசியக் கூட்டமைப்புத் தற்போது பொது வாக்கெடுப்புக்குச் சம்மதித்துள்ளது.. அரசமைப்பைப் பொது வாக்கெடுப்புக்கு விடுவதால் ஏற்படும் வெற்றியும், தோல்வியும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்புக்குச் சாதகமாகவே அமையும். பொது வாக்கெடுப்பில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தீர்மானங்கள் எற்கப்படாவிட்டால் சிங்கள மக்களின் பெரும்பான்மை ஆனது சிறும்பான்மை மக்களைப் பாதிப்பதாகச் சுட்டிக்காட்டி ஐக்கிய நாடுகள் சபையிடம் தனிநாட்டுக் கோரிக்கையைக் கூட்டமைப்பு முன்வைத்து அதனைப் பலப்படுத்தும் – என்றார். (த-4)

## கூட்டாட்சி...

கூட்டாட்சி முறையில் அதிகாரங்கள் பகிரப்படுத்தல் மற்றும் நாடாளுமன்ற ஒதுக்கப் பட்ட ஆசன முறைமை என்பவற்றின் ஊடாக அதனைச் செய்யலாம் என்று குறிப்பிட்டுள்ளார். ஐ.நா. சிறப்பு நிபுணர், இலங்கைக்கு மேற்கொண்ட பயணம் தொடர்பில் சமர்ப்பித்துள்ள சிறப்பு அறிக்கையிலேயே மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

அவர் தனது பரிந்துரைகளில் மேலும் தெரிவித்துள்ளதாவது:

கூட்டு அரசு தேசிய நல்லிணக்கத்துக்காகவும் அரசமைப்பு மறுசீரமைப்புக்காகவும் பல வேலைத் திட்டங்களை முன்னெடுத்து வருகிறது. அரசுக்கும் நாட்டின் சமூகங்களுக்கும் இடையிலான நம்பிக்கை கட்டியெழுப்பப்படவேண்டிய தேவை காணப்படுகிறது. குற்றவாளிகள் தண்டிக்கப்படாத நிலைமை ஆராயப்படாமல் உள்ளது. தற்போது முன்னெடுக்கப்பட்டு வரும் நல்லிணக்கச் செயற்பாடுகள் சிறுபான்மை மக்களின் உரிமையை உறுதிப்படுத்துவதிலேயே தங்கியிருக்கின்றன.

அரசமைப்பு மறுசீரமைப்புச் செயற்பாடுகளும் நிலைமாறு கால நீதி தொடர்பான செயற்பாடுகளும் எப்போதும் இல்லாதவாறான சிறந்த எதிர்காலத்திற்கான சந்தர்ப்பத்தை இலங்கைக்கு வழங்கியுள்ளது.

காணாமற்போனோரைக் கண்டறிவதற்கான அலுவலகம் விரைவாக இயங்குவதற்கான நடவடிக்கை முன்னெடுக்கப்படவேண்டும். சிறுபான்மை மக்களின் விடயங்களை ஆராயும் நோக்கில் அரசமைப்புக்கு உட்பட்ட சிறப்புச் சுயாதீன ஆணைக்குழு நிறுவப்பட வேண்டும்.

தாம் ஒதுக்கப்பட்டுள்ளவர்களாகச் சிறுபான்மை மக்கள் கருதுகின்றமையைத் தடுத்து அந்த மக்கள் பாதுகாப்பை உணரும் வகையில் நடவடிக்கை வேண்டும்.

பல்மொழி சமூகங்களுக்கிடையிலான சமூக உறவு அதிகாரிகளை நியமிப்பதற்கு நான் பரிந்துரை செய்கிறேன். அனைத்து அரச நிறுவனங்களிலும் மாகாண அலுவலகங்களிலும் பொலிஸ் நிலையங்களிலும் முப்படைகளிலும் இவ்வாறு அதிகாரிகள் நியமிக்கப்படவேண்டும்.

அரசமைப்புத் தொடர்பான செயற்பாடுகள் மக்களுக்கு அனைத்துக் கட்டங்களிலும் அறிவிக்கப்படவேண்டும். வெறுக்கத்தக்க பேச்சுக்கள் மூலமாக அநீதிகளுக்கு உட்படுத்துகின்றவர்களையும் வன்முறைகளை தூண்டுகின்றவர்களையும் சட்டத்தின் முன் நிறுத்த வேண்டும்.

பயங்கரவாதத் தடைச் சட்டம் உடனடியாக நீக்கப்படவேண்டும். அதற்குப் பதிலாகக் கொண்டுவரப்படும் புதிய சட்டமானது பன்னாட்டுத் தரத்திற்கு அமையவேண்டும். தடுத்து வைக்கப்பட்டுள்ளவர்களின் நிலைமைகள் உடனடியாக மீளாய்வு செய்யப்பட வேண்டும் – என்றுள்ளது. (த-5)

## காணிகளை...

நடைபெற்ற காணி எடுத்தல் சட்டத்தின் கீழான ஒழுங்குவிதிகளை அங்கீகரிப்பது தொடர்பான விவாதத்தில் பதிலளித்து உரையாற்று கையிலேயே அமைச்சர் மேற்கண்டவாறு கூறினார்.

வடக்கிலுள்ள காணிப் பிரச்சினை தொடர்பில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் வன்னி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் சிவசக்தி ஆனந்தன் சுட்டிக்காட்டியிருந்தார். இதற்கு அமைச்சர் பதிலளித்து உரையாற்றும்போது, 30 வருடங்களாக வடக்கு மாகாணம் போர்க்களமாகவே காட்சியளித்தது. அதனால்தான் அங்கு மக்களின் காணிகளில் படையினரை நிலை நிறுத்தவேண்டிய சூழ்நிலை ஏற்பட்டது. தற்போது அங்கு சமாதானம் மலர்ந்துள்ளது. காணிகள் படிப்படியாக விடுவிக்கப்பட்டு வருகின்றன. எதிர்காலத்தில் மேலும் பல காணிகள் விடுவிக்கப்படவுள்ளன. அதற்குரிய நடவடிக்கைகள் விரைவில் எடுக்கப்படும். இந்த விடயத்தில் அரச தலைவர் செயலணி சிறப்பாகச் செயற்பட்டு வருகின்றது.

வடக்கு-கிழக்கிலிருந்து ஒரே இரவில் இராணுவத்தினரை வெளியேற்றிவிட முடியாது. அங்கு நிலையான சமாதானம் ஏற்பட்ட பின்னர் படிப்படியாக இராணுவத்தினர் அகற்றப்படுவார்கள். வழங்கிய வாக்குறுதியை அரச தலைவர் ஒருபோதும் மீறமாட்டார் – என்றார். (த-5)

## எமது...

கடும் நோய்க்கு உள்ளானபோதும் சிகிச்சை பெறாது தொடர்ந்தும் போராட்டத்தில் ஈடுபட்டுள்ளார். கிளிநொச்சி மாவட்டத்தில் போர் இடம்பெற்ற காலத்தில் வலிந்து காணாமல் ஆக்கப்பட்ட வர்கள் மற்றும் இராணுவத்திடம் ஒப்படைக் கப்பட்டவர்களின் விடுதலை மற்றும் தெளிவான வெளிப்படுதலை வலியுறுத்தி கிளிநொச்சி கந்தசுவாமி ஆலய முன்றலில் இரவு பகலாக உறவுகள் தொடர் போராட்டத்தில் ஈடுபட்டுள்ளனர்.

இவர்களின் போராட்டத்தில் கிளிநொச்சிச் சந்தை வர்த்தகர்களும் நேற்றுக் கலந்து கொண்டு ஆதரவளித்தனர்.

அரசியல்வாதிகளை நம்பி நாங்கள் இந்தப் போராட்டத்தில் ஈடுபடவில்லை. மக்களை நம்பியே இந்தப் போராட்டத்தில் ஈடுபட்டுள்ளோம். விரும்பினால் அரசியல்வாதிகள் எங்களுடன் கலந்துகொள்ளலாம். சந்தை வர்த்தகர்கள் ஆதரவு வழங்கியதுபோல மாவட்டத்தில் உள்ள அமைப்புக்களும் மக்களும் எங்களுக்கு ஆதரவு வழங்கவேண்டும். உரிய தீர்வு கிடைக்கும்வரை போராட்டம் தொடரும். தீர்வு கிடைக்காத பட்சத்தில் போராட்ட வடிவங்கள் மாற்றம் பெறும். நிச்சயமாக உணவு ஒறுப்புப் போராட்டமாக இருக்காது என்று கிளிநொச்சி மாவட்ட காணாமல் ஆக்கப்பட்ட குடும்பங்களின் இணைப்பாளர் தெரிவித்தார்.

இந்த போராட்டத்தில் கலந்து கொண்டுள்ள தாய் ஒருவர் நோய்வாய்ப்பட்டுள்ளார். அவருக்கு ஏற்கனவே மாரடைப்பு வந்ததாகவும் தெரிவிக்கப்பட்டது. எனினும் பனி வெயில் பாராது அவர் போராட்டத்தில் ஈடுபட்டுள்ளார். அவர் கடும் நோய்க்கு உள்ளானபோதும் சிகிச்சை பெறாது தொடர்ந்தும் போராட்டத்தில் ஈடுபட்டுள்ளார். (த-4-6)


## சிவராத்திரியை...

இவ்வாறு சைக்கிளில் திருக்கேதீஸ் வரத்துக்குச் செல்லவுள்ளனர்.

இன்று வெள்ளிக்கிழமை அதிகாலை 4.30 மணிக்குச் சித்தன்கேணி சிவன் கோயிலில் இருந்து சைக்கிளில் தமது பயணத்தை ஆரம்பித்து, நண்பகல் 12 மணியளவில் திருக்கேதீஸ்வரத்தைச் சென்றடைவார்கள்.

கடந்த ஆண்டும் இவர்கள் சிவராத்திரி தினத்தில் சித்தன்கேணியில் இருந்து சைக்கிள் மூலம் திருக்கேதீஸ்வரத்துக்குச் சென்றிருந்தனர். (த-17)

# தனி மரம்



ஒரு காட்டில் பெருந்தொகையான மரங்கள் நின்றன. எல்லா மரங்களும் மிக நேராகவும் உயரமா கவும் வளர்ந்திருந்தன. அவற்றில் ஒரு மரம் மட்டும் சற்றுக் குறுகியதாகவும் பல பகுதிகளில் கோணலாகவும் காணப் பட்டது. அந்த மரம் மற்றைய மரங் களோடு ஒப்பிட்டு தன்னை மிகவும் தாழ்வாக எண்ணிக் கொண்டது. மிகவும் கவலையும் அடைந்தது.

"எல்லா மரங்களும் நேராகவும் உயர மாகவும் உள்ளனவே. பார்ப்பதற்கு எவ்வளவு அழகாகவும் உள்ளன. நான் மட்டுமே இப்படிக் கோணலாகவும் குட்டையாகவும் அவலட்சணமாகவும் உள்ளேனே?" என்று தினமும் மனம்வருந்திக் கொண்டிருந் தது. ஒருநாள் காட்டு மரங்களை வெட்டுவோர் சிலர் அந்தக் காட்டுக்குள் புகுந்தனர். அங்கிருந்த நேர் சீரான உயர்ந்த மரங்கள் பலவற்றைக் கோடரி களால் விறுவிறுவென்று அடியோடு தறித்து வீழ்த்தினர்.

அப்போது கோணலாகவும் குறுகியதாகவும் நின்ற அந்த மரத்தின் அருகில் வந்தனர் சிலர். "இந்த மரம் எமக்குப் பயன் படாது. இதிலிருந்து நேரான பலகை எதுவும் அரிந்தெடுக்க முடியாது. இதை வெட்ட வேண்டாம்" என்றான் ஒருவன். மற்றவர்களும் அதனை வெட்டாது விட்டுச் சென்றனர்.

தன் அவலட்சணமே தன்னைக் காத்தது என்று மகிழ்ந்தது அந்த மரம்.

**எந்தத் தீமைக்குள்ளும் ஒரு நன்மை உண்டு. எல்லாம் நன்மைக்கே**

# கொன்றை வேந்தன்

(நேற்று வெளிவந்த பகுதியின் தொடர்ச்சி)

3. கிட்டாதாயின் வெட்டென மற

ஒருவன் தான் ஆசைப்பட்ட பொருள் கிடைக்காது விடின், அதனை மறந்துவிட வேண்டும். பல காரணங்களால் நாம் ஆசைப்பட்ட பொருள் எமக்கு கிடைக்காது என்ற முடிவுக்கு வந்தால், அதன் நினைப்பை விட்டொழிக்க வேண்டுமே தவிர, அதையே எண்ணி எண்ணி ஏங்கிக் கொண்டிருக்கக் கூடாது. அப்படியில்லையாயின் அந்த ஏக்கம் எமது மனதைக் கெடுக்கும். உற்சாகத்தைக் குலைக்கும். சோம்பேறியாக்கும். உழைப்பை, எமது உயர்வை அழித்து விடும்.

4. குற்றம் பார்க்கில் சுற்றம் இல்லை

பிறர் குற்றங்களைப் பெரிதாக நினைத்தால், எமக்கு உறவினர் என்று எவரும் இருக்க முடியாது. எமது உற்றார், உறவினர், சுற்றத்தார் யாவரும் ஒரே மாதிரியானவர்கள் அல்லர். அறியாமையால் அவர்கள் செய்த குற்றங்களைப் பெரிதாக நாம் கருதுவோமாகில் எல்லோரும் எமக்குப் பகைவராகி விடுவர். எமக்கு சுற்றத்தவர் என்று எவரும் இருக்க மாட்டார்கள். உறவுகளும் இல்லாது போய்விடும்.

5. தந்தை சொல்மிக்க மந்திரம் இல்லை

தந்தையின் ஆலோசனையை விடச் சிறந்ததாக வேறு எவரது ஆலோசனையும் இருக்காது. ஒரு மகனுடைய வாழ்வை வளமாக்க எவரது பலர் ஆலோசனை கூறினாலும். எல்லாவற்றையும் விட தந்தையின் ஆலோசனையே சிறந்ததாகும். மற்றவர் களை விட அவருக்குத்தான் தனது மகனின் நல்வாழ்வில் அதிக அக்கறை இருக்க முடியும். தந்தையின் ஆலோசனைக்கு மேம்பட்டதாக வேறு எவரது ஆலோ சனையும் இருக்க முடியாது.

6. தாயிற் சிறந்தொரு கோயிலும் இல்லை

தாயைப் பார்க்கிலும் சிறப்புப் பொருந்திய ஒரு ஆலயம் வேறெங்கும் இல்லை. இவ்வுலகில் நாம் தோன்றுவதற்குக் காரணமானவர் தாய். நாம் சீரும் சிறப்புமாக வாழ்வதற்கு வழி வகுப்பவரும் அவரே. இத்தகைய தாயின் பெருமையைப் புனிதப்படுத்தி ஒப்புமை கூற கோயிலைவிடச் சிறந்த புனிதமான இடம் வேறில்லை. ஆகவே வணங்கக் கூடிய தெய்வம் உள்ள கோயில் தாயே அன்றி வேறில்லை என்பதாகும்.

(தொடரும்)

# நிறுத்தற் குறியீடுகள்

அழகான கோலங்கள் அமைய முதலில் போடப்படுபவை புள்ளிகளே. அந்தப் புள்ளிகளை இணைத்தே கோலங்கள் வரையப்படுகின்றன. இவ்வாறே எழுதப்படும் விடயங்களின் பொருளை நன்கு புலப்படுத்துவதற்கு புள்ளிகளாக அமைபவை நிறுத்தற்குறியீடுகள். பொருத்தமான இடங்களில் பொருத்தமான இக் குறியீடுகள் அமைவதால் எழுதப்படும் விடயத்தின் பொருள் நன்கு புலப்படுவதோடு, எழுதப்பட்ட விடயத்துக்கு ஒரு அழகும் ஏற்படுகிறது.

பேசும்போது ஒருவர் தனது குரலைத் தாழ்த்தியும், உயர்த்தியும் சில விநாடிகள் தாமதித்தும், நிறுத்தியும் கருத்துக்களைத் தெளிவாக மற்றவர்களுக்கு எடுத்துரைப்பார். ஆனால், அதே கருத்துக்களை எழுத்தில் மற்றவர்களுக்குக் கொடுக்கும்போது அந்தச் செயற்பாடுகளை இந்தக் குறியீடுகள் நிறைவேற்றி விடயத்தைத் தெளிவாகவும், அழகாகவும் புரிந்துணர வைக்கின்றன. இந்தக் குறியீடுகளுடன் சொற்களுக்கிடையே விடப்படும் அளவான இடைவெளிகளும் எழுதப்படும் விடயத்தை மேலும் தெளிவுபடுத்த இன்றிய மையாதவை.

1. **முற்றுப் புள்ளி (.)** வாக்கிய முடிவைக் காட்டுவது முற்றுப்புள்ளி.
   உ+ம் தம்பி பாடம் படிக்கிறான்.
2. **காற்புற்றி (,)** பல பொருள்களின் பெயர்களை ஒரு தொடராக வாசிக்கும் போது அவற்றைத் தனித் தனியே இனம் கண்டு வாசிப்பதற்கு வசதியாக காற்புள்ளி இடப்படும்.
   உ+ம் சந்தையில் காய்கறிகள், பழங்கள், மீன்வகை என்பனவற்றை வாங்கினோம்.
   மாம்பழம், வாழைப்பழம், பலாப்பழம் என்பனவற்றை முக்கனிகள் என்பர்.
   கடிதங்களில் முகவரி எழுதும் போதும் இந்தக் குறியீடு பயன்படுத்தப்படுகிறது.
3. **வினாக்குறி (?)** ஒரு வாக்கியம் வினா வாக்கியமாக அமையும் பொழுது அவ் வாக்கியத்தின் இறுதியில் இந்தக் குறியீடு இடப்படும்.
   உ+ம் நீ இன்று பாடசாலைக்கு வருவாயா?
   இலங்கையின் தலைநகரம் எது?
4. **வியப்புக்குறி (!)** (மெய்ப்பாட்டுக்குறி) வியப்பு, இரக்கம், அச்சம், மகிழ்ச்சி முதலிய உணர்ச்சிகளை வெளிப்படுத்த இந்தக் குறியீடு இடப்படும்.
   உ+ம் ஆகா! அழகோ அழகு
   ஐயோ! பாவம்
   பாம்பு! பாம்பு!
   தலைவா வருக! வருக!
5. **அடைப்புக்குறி (.....)** எழுத்துப் பகுதிகளின் இடையே சில பொருள்களுக்கு விளக்கம் அல்லது சிலரின் கருத்துக்களை மேற்கோள் காட்ட வேண்டிய இடங்களில் அடைப்புக்குறிக்குள் அவை எழுதப்படும்
   உ+ம் அவர் முத்தமிழும் (இயல், இசை, நாடகம்) கற்றவர்.
6. **மேற்கோட்குறி ("......")** ஒருவர் கூறிய கூற்றை அவர் கூறியவாறே எடுத்துக் காட்டும்போது இரட்டை மேற்கோட்குறி இடப்படும்.
   உ+ம் பாரதிதாசன் "தமிழுக்கும் அமுதென்று பேர்" என்று பாடியுள்ளார்.
7. **அரைப்புள்ளி (;)** ஒத்த தொடர்புடைய நீண்ட வாக்கியத்தைத் தொடர்புபடுத்தும் தனிவாக்கியங்களின் இறுதியில் அரைப்புள்ளி இடப்படும்.
   உ+ம் வானம் கறுத்தது; மின்னல் மின்னியது; இடி இடித்தது; மழை பொழிந்தது.
8. **முக்காற்புள்ளி (:)** பிரதான கூற்று ஒன்றுக்குப் பின்னால் அதற்கான விளக்கங்கள் அமையுமிடத்து பிரதான கூற்றின் பின் இந்தக் குறியீடு எழுதப்படும்
   உ+ம் உயிர் வாழ்க்கைக்கு உயிர்நாடி மழையே: மழையின் றேல் அரசனும் இல்லை:
   ஆண்டியும் இல்லை: உலகில் உயிர்களே இல்லை என்றாகும்.


## வருமுன் காப்போம்

கண்ட கண்ட இடங்களில்
காணும் பொருள்கள் யாவையும்
உண்ண என்றும் விரும்பினால்
உடலை நோய்கள் தீண்டுமே!

திறந்திருக்கும் பண்டத்தில்
ஈக்கள் வந்து மொய்க்குமே
அதனை நாமும் உண்பதால்
தொற்று நோய்கள் பரவுமே

சுத்தமற்ற கடைகளில்
சுவை நிறைந்த உணவுகள்
நித்தம் நித்தம் உண்ணுவோர்
நிரையாய் நோயைத் தேடுவர்

வந்த நோய்க்கு வைத்தியம்
இங்கு நமக்குத் தேவையோ
வீட்டில் பாகம் செய்வதை
விரும்பி உண்டு மகிழுவோம்




# சிப்பியிலே முத்து



நவ இரத்தினங்களில் ஒன்றான முத்து கடலில் வாழும் சிப்பியிலுள்ளே உருவாகின்றது. கடலில் வாழும் சிறிய தூசுகள் போன்ற சில நுண்ணுயிர்கள் சில சந்தர்ப்பங்களில் தவறுதலாக சிப்பியின் வாய் வழியாக அதனுள்ளே சென்று விடுகின்றன. உடனே சிப்பிக்கு ஒரு உறுத்தல் உணர்வு தோன்றும். இந்த உணர்வு காரணமாக உள்ளே வந்த பொருள் மீது "நாக்கர்" என்ற திரவத்தை சிப்பி சொரிந்து விடும். இந்தத்திரவம் பட்டதும் உள்ளே வந்தது உயிர் உள்ளதாக இருந்தால் இறந்து விடும். மண் போன்ற பொருளாயிருந்தாலும் அதன் மேல் இத்திரவம் பல அடுக்குகளாகச் சொரியப்பட்டு அது இறுகி முத்தாக மாறும். முத்து ஒன்று சிப்பியிலுள்ளே முழு வளர்ச்சியடைய ஏறக்குறைய 15 ஆண்டுகள் எடுக்கும்.

ஜப்பானிய மக்கள் முத்துச் சிப்பியின் வாய் வழியே சிறுதானியம் ஒன்றைப் போட்டு விடுவார்கள். அதன் மேல் நாக்கர் திரவம் சொரியப்பட்டு நல்ல முத்து ஒன்று பெறப்படும். சீனர் இதைப் போன்றே முன்னர் சிறிய புத்தர் சிலை ஒன்றை சிப்பியுள் வைத்து பின்னர் காலம் கடந்து முத்துத் திரவத்தால் மேற்பூச்சுப்பூசப்பட்ட புத்தர் சிலைகளைப் பெற்றுக் கொண்டார்கள்.

Facebook : UTHAYAN.PRINT
Twitter : UTHAYANPRINT

## இன்றைய மோதல்கள்

யாழ்ப்பாணம், பெப். 24

**யாழ். மாவட்ட கூடைப்பந்து**

யாழ்ப்பாணம் மாவட்ட கூடைப் பந்தாட்டச் சங்கம் தனது அங்கத்துவக் கழகங்களுக்கு இடையில் நடத்தும் லீக் முறையிலான கூடைப்பந்தாட்டத் தொடரின் (பெண்களுக்கான) ஆட்டங்கள் கொக்குவில் இந்துக் கல்லூரியின் கூடைப்பந்தாட்டத் திடலில் இடம்பெற்று வருகின்றன. இந்தத் தொடரில் இன்று வெள்ளிக்கிழமை பிற்பகல் 3.15 மணிக்கு இடம்பெறும் ஆட்டத்தில் கே.ஸி.ஸி.ஸி. விளையாட்டுக் கழக அணியை எதிர்த்து பட்டர்பிளை விளையாட்டுக் கழக அணி மோதவுள்ளது. மாலை 4.45 மணிக்கு இடம்பெறும் ஆட்டத்தில் கே.கே.எஸ். விளையாட்டுக் கழக அணியை எதிர்த்து சிவன் விளையாட்டுக் கழக அணி மோதவுள்ளது.

**சரஸ்வதி வி.க. கால்பந்தாட்டம்**

உரும்பிராய் சரஸ்வதி விளையாட்டுக் கழகம் நடத்தும் கால்பந்தாட்டத் தொடரின் ஆட்டங்கள் உரும்பிராய் இந்துக் கல்லூரி மைதானத்தில் இடம்பெற்று வருகின்றன. இன்று பிற்பகல் 3.45 மணிக்கு இடம்பெறும் ஆட்டத்தில் சென். மைக்கல் அணியை எதிர்த்து நவஜீவன்ஸ் அணி மோதவுள்ளது.

மாலை 4.45 மணிக்கு இடம்பெறும் ஆட்டத்தில் திருக்குமரன் அணியை எதிர்த்து நவிண்டில் கலைமதி அணி மோதவுள்ளது. (ம-23)




## வென்றது சிவன்

யாழ்ப்பாணம், பெப். 24

யாழ்ப்பாண மாவட்ட கூடைப்பந்தாட்டச் சங்கம் தனது அங்கத்துவக் கழகங்களுக்கு இடையில் நடத்தும் லீக் முறையிலான தொடரில் நேற்றுமுன்தினம் இடம்பெற்ற ஆட்டமொன்றில் சுன்னாகம் சிவன் விளையாட்டுக் கழக அணி வெற்றிபெற்றது.

கொக்குவில் இந்துக் கல்லூரியின் கூடைப்பந்தாட்டத் திடலில் நேற்றுமுன்தினம் இடம்பெற்ற இந்த ஆட்டத்தில் சிவன் அணியை எதிர்த்து பட்டர்பிளை அணி மோதியது. இதில் சிவன் விளையாட்டுக் கழக அணி 49:19 என்ற புள்ளிகளின் அடிப்படையில் வெற்றி பெற்றது. (ம-23)

# வயாவிளான் மத்திய கல்லூரி கரப்பந்தாட்டத்தில் சம்பியனானது

யாழ்ப்பாணம், பெப். 24

வலிகாம கல்வி வலய பாடசாலைகளுக்கு இடையிலான கரப்பந்தாட்டத்தில் 20 வயதுக்குட்பட்ட பெண்கள் பிரிவில் வயாவிளான் மத்திய கல்லூரி அணி சம்பியன் கிண்ணத்தைச் சுவீகரித்தது.

மல்லாகம் மகா வித்தியாலய மைதானத்தில் நேற்றுமுன்தினம் நடைபெற்ற இந்த இறுதியாட்டத்தில் வயாவிளான் மத்திய கல்லூரி அணியை எதிர்த்து இளவாலை கன்னியர்மடம் மகா வித்தியாலய அணி மோதியது. இதில் வயாவிளான் மத்திய கல்லூரி அணி 25:6, 25:17 என்ற புள்ளிகள் அடிப்படையில் முதல் இரு செற்களையும் கைப்பற்றி 2:0 என்ற நேர் செற் கணக்கில் வெற்றிபெற்று சம்பியன் கிண்ணத்தைச் சுவீகரித்தது. மூன்றாமிடத்தை அளவெட்டி அருணோதயக் கல்லூரி அணி தன தாக்கியது. (ம-422)



## கிண்ணம் வென்றது மகாஜனா

யாழ்ப்பாணம், பெப். 24

வலிகாம கல்வி வலய பாடசாலைகளுக்கு இடையிலான கரப்பந்தாட்டத்தில் 16 வயதுக் குட்பட்ட பெண்கள் பிரிவில் தெல்லிப்பழை மகாஜனக் கல்லூரி அணி சம்பியனானது. மல்லாகம் மத்திய கல்லூரி மைதானத்தில் நேற்றமுன்தினம் நடைபெற்ற இந்த இறுதியாட்டத்தில் தெல்லிப்பழை மகாஜனக் கல்லூரி அணியை எதிர்த்து இளவாலை மெய்கண்டான் மகா வித்தியாலய அணி மோதியது. இதில் தெல்லிப்பழை மகாஜனக் கல்லூரி அணி 25:15, 25:19 என்ற புள்ளிகள் அடிப்படையில் முதல் இரு செற்களையும் கைப்பற்றி 2:0 என்ற நேர் செற் கணக்கில் வெற்றிபெற்று சம்பியன் கிண்ணத்தைச் சுவீகரித்தது. மூன்றாமிடத்தை அளவெட்டி அருணோதயக் கல்லூரி அணி பெற்றது. (ம-422)

## போதனா வைத்தியசாலை அணி எல்லாளன் அணியை வீழ்த்தியது

யாழ்ப்பாணம், பெப். 24

உரும்பிராய் சரஸ்வதி விளையாட்டுக் கழகம் நடத்தும் கால்பந்தாட்டத் தொடரில் நேற்றுமுன்தினம் இடம்பெற்ற ஆட்டமொன்றில் யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலை அணி வென்றது.

சரஸ்வதி விளையாட்டுக்கழக மைதானத்தில் இடம்பெற்ற இந்த ஆட்டத்தில்யாழ். போதனாவைத்தியசாலை அணியை எதிர்த்து நவக்கீரி எல்லாளன் அணி மோதியது. இதில் யாழ். போதனா வைத்தியசாலை அணி 2:0 என்ற கோல் கணக்கில் வெற்றி பெற்றது. (ம-23)

## பற்றிக்ஸ்— சென். ஜோன்ஸ் இன்று எதிர்த்துப் பலப்பரீட்சை

யாழ்ப்பாணம், பெப். 24

யாழ்ப்பாணம் சென். ஜேன்ஸ் கல்லூரி -யாழ்ப்பாணம் சென். பற்றிக்ஸ் கல்லூரி ஆகியவற்றின் 19 வயதுப்பிரிவு அணிகளுக்கு இடையிலான டெஸ்ட் ஆட்டம் ஒன்று சென். பற்றிக்ஸ் கல்லூரி மைதானத்தில் இன்றும் (வெள்ளிக்கிழமை) நாளையும் (சனிக்கிழமை) இடம் பெறவுள்ளது. (ம-23)




## கொக்குவில் இந்து. - பற்றிக்ஸ் ஆட்டம் சமநிலையில் முடிந்தது

யாழ்ப்பாணம், பெப். 24

இலங்கை பாடசாலைகள் துடுப்பாட்டச் சங்கம் 19 வயதுப் பிரிவினருக்கு இடையில் நடத்திவரும் தொடரில், நேற்றுமுன்தினம் நடைபெற்ற சென். பற்றிக்ஸ் - கொக்குவில் இந்துக் கல்லூரி அணிகளுக்கு இடையிலான ஆட்டம் சமநிலையில் முடிந்தது. கொக்குவில் இந்துக் கல்லூரி மைதானத்தில் கடந்த செவ்வாய் மற்றும் புதன்கிழமைகளில் இந்த ஆட்டம் நடைபெற்றது.

நாணயச் சுழற்சியில் வெற்றி பெற்ற கொக்குவில் இந்துக் கல்லூரி அணி முதலில் களத்தடுப்பைத் தீர்மானித்தது. இதன்படி முதலில் துடுப்பெடுத்தாடிய சென். பற்றிக்ஸ் கல்லூரி அணி 314-9 என்ற நிலையில் ஆட்டத்தை இடைநிறுத்தியது. றொசான் 91 ஓட்டங்களையும், மெனிக் 64 ஓட்டங்களையும், கஸ்ரோ 56 ஓட்டங்களையும் பெற்றனர். பந்துவீச்சில் தனுசன் 3 இலக்குகளையும், விதுசன் 2 இலக்குகளையும், றெஜான், நிர்மலதாஸ், துசியந்தன், டனுசன் ஆகியோர் தலா ஓர் இலக்கையும் கைப்பற்றினர்.

பதிலுக்குக் களமிறங்கிய கொக்குவில் இந்துக் கல்லூரி அணி 224 ஓட்டங்களில் சகல இலக்குகளையும் இழந்தது. பானுசன் 73 ஓட்டங்களையும், றொசான் 54 ஓட்டங்களையும், நிமலதாஸ் 32 ஓட்டங்களையும் பெற்றனர். பந்துவீச்சில் றதீசன் 5 இலக்குகளையும், ராஜ்போல் 2 இலக்குகளையும், நிதுசன், அனோசன் இருவரும் தலா ஓர் இலக்கையும் கைப்பற்றினர்.

இரண்டாம் இன்னிங்ஸிற்காக களமிறங்கிய பற்றிக்ஸ் அணி 287 ஓட்டங்களில் சகல இலக்குகளையும் இழந்தது. அனோசன் 169 ஓட்டங்களைக் குவித்தார். பந்துவீச்சில் டனுசன் 3 இலக்குகளை வீழ்த்தினார். இரண்டாவது இன்னிங்ஸிற்காக களமிறங்கிய கொக்குவில் 64-4 என்றிருந்த நிலையில் நான் முடிவுகாண ஆட்டம் சமநிலையில் முடிந்தது. (ம-23)



## மோகனதாஸ் வி.க. ஆவரங்கால் மத்தி நவஜீவன்ஸ் அணிகள் வென்றன

யாழ்ப்பாணம், பெப். 24
யாழ்ப்பாணம் மாவட்ட கரப்பந்தாட்டச் சங்கம் நடத்தும் 23 வயதுப் பிரிவுக்கு உட்பட்டவர்களுக்கான தொடரில் நேற்றுமுன்தினம் இடம்பெற்ற ஆட்டங்களில் மட்டுவில் மோகனதாஸ், உடுப்பிட்டி நவஜீவன்ஸ், ஆவரங்கால் மத்திய விளையாட்டுக் கழக அணிகள் வெற்றிபெற்றன.

அரியாலை கண்டி வீதி பண்ணை வளாகத்தில் ஆட்டங்கள் இடம்பெற்று வருகின்றன. நேற்றுமுன்தினம் இடம்பெற்ற முதலாவது ஆட்டத்தில் நீர்வேலி காமாட்சி அம்பாள் அணியும், மட்டுவில் மோகனதாஸ் அணியும் மோதின. இதில், மட்டுவில் மோகனதாஸ் அணி 2:0 என்ற செற் கணக்கில் வெற்றிபெற்றது.

தொடர்ந்து இடம்பெற்ற ஆட்டத்தில், உடுப்பிட்டி நவஜீவன்ஸ் அணியும், நீர்வேலி ஐக்கிய அணியும் மோதின. இதில் உடுப்பிட்டி நவஜீவன்ஸ் அணி 2:0 என்ற செற் கணக்கில் வெற்றிபெற்றது.

கொடிகாமம் ஒளி விளையாட்டுக் கழக அணிக்கும் ஆவரங்கால் மத்திய விளையாட்டுக் கழக அணிக்கும் இடையிலான ஆட்டத்தில் ஆவரங்கால் மத்திய விளையாட்டுக் கழக அணி 2:0 என்ற செற் கணக்கில் வெற்றி பெற்றது. (ம-23)



## ஆட்டம் காண்கிறது ஆஸ்திரேலிய அணி

இந்தியாவுக்கு எதிரான முதலாவது டெஸ்ட் ஆட்டத்தின் நேற்றைய முதல் நாளில் யாதவின் மிரட்டல் வேகத்தில் தடுமாற்றம் கண்டது ஆஸ்திரேலியா. எனினும் அந்த அணியின் பின்வரிசை சிறந்த போராட்டத்தை வெளிப்படுத்துகிறது.

நாணயச் சுழற்சியில் வெற்றிபெற்ற ஆஸ்திரேலிய அணி முதலில் துடுப்பெடுத்தாடத் தீர்மானித்தது. ஆரம்ப வீரர்களான ரென்சொவ் மற்றும் வோர்ணர் இருவரும் சிறந்த அடித்தளத்தை அமைத்துக் கொடுத்தனர். இணைப்பாட்டமாக 82 ஓட்டங்கள் பகிரப்பட்டிருந்த நிலையில் 38 ஓட்டங்களுடன் வீழ்ந்தார் வோர்ணர்.

பதின்ம ஓட்டங்களுடன் ஜெயந் யாதவின் சுழலில் பவிலியன் திரும்பினார் சோன் மார். ஸ்ரீவ் சிமித்தை வெளியேற்றினார் அஸ்வின். 22 ஓட்டங்களுடன் ஹான்ட்ஸ்ஹொமுக்கு முடிவு கட்டினார் ஜடேயா.

ஒரு முனையில் முன்னணி வீரர்கள் தடுமாறினாலும் மறுமுனையில் சிறந்த ஆட்டத்தை வெளிப்படுத்தி அரைச்சதம் கடந்தார் ரென்சொவ். 68 ஓட்டங்களுடன் ரென்சொவை வீழ்த்தினார் அஸ்வின். 166 ஓட்டங்களுக்கு முதல் 5 இலக்குகளையும் இழந்தது ஆஸ்திரேலியா.

பின்னர் திடீர் தடுமாற்றம் கண்டது ஆஸ்திரேலிய அணி. வேட் 8 ஓட்டங்களுடனும், கெபி, லையன் இருவரும் ஓட்டமெதனையும் பெறாத நிலையிலும் யாதவின் வேகத்தில் பவிலியன் திரும்பினர். 205 ஓட்டங்களில் 5 இலக்குகளை இழந்தது ஆஸ்திரேலியா. எனினும் அதிரடியாகத் துடுப்பெடுத்தாடி 3 சிக்சர்களுடன் அரைச்சதம் கடந்தார் ஸ்ராக். நாள் முடிவில் ஆஸ்திரேலியா 256-9 என்றுள்ளது. ஸ்ராக் 57 ஓட்டங்களுனும் ஹசில்வூட் ஓர் ஓட்டத்துடனும் களத்தில் உள்ளனர். (ம)


## செயலமர்வு

யாழ்ப்பாணம் மாவட்ட கூடைப்பந்தாட்ட மத்தியஸ்தர்களுக்கான செயலமர்வொன்று கொக்குவில் இந்துக் கல்லூரியின் கூடைப்பந்தாட்டத்திடலில் இன்று இடம்பெறவுள்ளது. காலை 8.30 மணிமுதல் நடைபெறவுள்ள அனைத்து கூடைப்பந்தாட்ட மத்தியஸ்தர்கள் மற்றும் கூடைப்பந்தாட்ட மத்தியஸ்தர்களாகப் புதிதாக இணைய விரும்புவோர் இந்த செயல் அமர்வில் கலந்து கொள்ளமுடியும் என யாழ்ப்பாண மாவட்ட கூடைப்பந்தாட்ட மத்தியஸ்தர் சங்கத் தலைவர் எஸ். வல்லவக் குமாரன் அறிவித்தார். (ம-23)

## நியூசி. – தென்னாபிரிக்கா 3ஆவது ஆட்டம் நாளை

நியூசிலாந்து – தென்னாபிரிக்க அணிகளுக்கு இடையிலான ஒருநாள் தொடரின் மூன்றாவது ஆட்டம் நாளை நடைபெறவுள்ளது.

தொடரில் ஐந்து ஆட்டங்கள். முடிவடைந்த இரு ஆட்டங்களில் முதலாவதில் தென்னாபிரிக்காவும் இரண்டாவதில் நியூசிலாந்தும் வெற்றிபெற்று 1:1 என்ற நிலையில் உள்ளன. இதனால் நாளைய ஆட்டத்தில் வெற்றிபெறும் அணி தொடரில் ஆதிக்கம் செலுத்தும் என்பதால் இந்த ஆட்டத்தில் விறுவிறுப்புத் தன்மை இருக்கவே செய்யும். உலகக் கிண்ணத் தொடரின் அரையிறுதியில் நியூசிலாந்திடம் அடைந்த தோல்விக்கு இந்தத் தொடரில் பதிலடி கொடுப்போம் என்று தென்னாபிரிக்க அணித்தலைவர் வில்லியர்ஸ் தெரிவித்திருந்தார். இதுவும் இந்தத் தொடரில் அதிக எதிர்பார்ப்புக்கள் இருக்க முக்கிய காரணமாக உள்ளது. (ம)



## வயாவிளான் மத்திய கல்லூரி கரப்பந்தாட்டத்தில் சம்பியன்

யாழ்ப்பாணம், பெப். 24
வலிகாமம் கல்வி வலய பாடசாலைகளுக்கு இடையிலான கரப்பந்தாட்டத்தில் 18 வயதுக்குட்பட்ட பெண்கள் பிரிவில் வயாவிளான் மத்திய கல்லூரி அணி சம்பியனானது.

மல்லாகம் மத்திய கல்லூரி மைதானத்தில் நேற்றுமுன்தினம் இந்த இறுதியாட்டம் நடைபெற்றது. வயாவிளான் மத்திய கல்லூரி அணியை எதிர்த்து இளவாலை மெய்கண்டான் மகா வித்தியாலய அணி மோதியது. மூன்று செற்களைக் கொண்டதாக ஆட்டம் அமைந்தது. முதலாவது செற்றை 25:14 என்ற புள்ளிகளின் அடிப்படையில் வயாவிளான் மத்திய கல்லூரி அணி கைப்பற்றி 1:0 என்று முன்னிலை வகித்தது. ஆட்டத்தில் தனது இருப்பைத் தக்கவைக்க இரண்டாவது செற்றைக் கைப்பற்ற வேண்டும் என்ற நெருக்கடி மெய்கண்டான் மகா வித்தியாலய அணிக்கு ஏற்பட்டது.

எனினும், தனது ஆதிக்கத்தைத் தொடர்ந்து தக்கவைத்த வயாவிளான் மத்திய கல்லூரி அணி இரண்டாவது செற்றையும் 25:03 என்ற புள்ளிகளின் அடிப்படையில் கைப்பற்றி 2:0 என்ற நேர் செற் கணக்கில் வெற்றிபெற்று கிண்ணம் வென்றது. இந்தப் பிரிவில் மூன்றாமிடத்தை தெல்லிப்பழை மகாஜனக் கல்லூரி அணி பெற்றது. (ம-422)

## ஆப்கானிஸ்தான் சிம்பாப்வே நான்காவது ஆட்டம் இன்று

ஆப்கானிஸ்தான் – சிம்பாப்வே அணிகளுக்கு இடையிலான ஒருநாள் தொடரின் நான்காவது ஆட்டம் இன்று நடைபெறவுள்ளது.

தொடரில் ஐந்து ஆட்டங்கள் முடிவடைந்த முதல் மூன்று ஆட்டங்களின் அடிப்படையில் ஆப்கானிஸ்தான் அணி 2:1 என்று முன்னிலையில் உள்ளது. இதனால் இன்றைய ஆட்டத்தில் வெற்றிபெறவேண்டும் என்ற நெருக்கடி சிம்பாப்வேக்கு இருக்கவே செய்கிறது.

இந்தத் தொடர் இரு சிறு அணிகளுக்கு இடையிலான தொடராக அமைந்தாலும் டெஸ்ட் கிரிக்கெட்டின் போக்கைத் தீர்மானிக்கப் போகும் தொடராகவும் அமைந்துள்ளது. தற்போது இந்தியா, இலங்கை, பாகிஸ்தான், பங்களாதேஷ், ஆஸ்திரேலியா, இங்கிலாந்து, நியூசிலாந்து, தென்னாபிரிக்கா, மேற்கிந்தியத் தீவுகள், சிம்பாப்வே ஆகிய பத்து அணிகளே டெஸ்ட் கிரிக்கெட்டில் விளையாடி வருகின்றன. இந்த எண்ணிக்கையை 12 ஆக உயர்த்துவதற்கு அதாவது ஆப்கானிஸ்தான் மற்றும் அயர்லாந்து அணிகளுக்கும் டெஸ்ட் அந்தஸ்தை வழங்குவதற்கு பன்னாட்டு கிரிக்கெட் சபை பரிசீலித்து வருகிறது. இதனால் தன்னை டெஸ்ட் கிரிக்கெட்டுக்குத் தகுதியான அணியென்று காண்பிக்க இந்தத்தொடரை ஆப்கானிஸ்தான் வெல்ல வேண்டிய தேவை உள்ளது. (ம)



## ரிச்சட்ஸ், சச்சின், லாரா ஆகியோரின் கலவையே கோக்லி ஆஸ்திரேலிய சுழல் ஜாம்பவான் சேன் வோர்ன் புகழாரம்

ரிச்சட்ஸ், சச்சின், லாரா ஆகியோரின் கலவையாக விராட் கோக்லி உள்ளார் என்று ஆஸ்திரேலிய அணியின் முன்னாள் சுழல் ஜாம்பவான் சேன் வோர்ண் புகழாரம் சூட்டினார்.

இந்தியா–ஆஸ்திரேலியா அணிகளுக்கு இடையிலான டெஸ்ட் ஆட்டம் தற்போது நடைபெற்று வருகிறது. ஆட்டத்தின் முன்பு நேற்று உரையாற்றுகையிலேயே அவர் இவ்வாறு குறிப்பிட்டார்.

தற்போதைய நிலவரத்தின்படி கோக்லியே உலகின் ஆகச்சிறந்த வீரர். அதில் எந்தச் சந்தேகமும் இல்லை. அவர் அதிவேகத்தில் பன்னாட்டு ஆட்டங்களில் சதங்களைக் குவித்து வருகிறார். ரிச்சட்ஸ், சச்சின், லாரா ஆகிய 3 பேரின் கலவையாக உள்ளார். நான் கோக்லியின் மிகப்பெரிய ரசிகன். அவரது ஆட்டத்தை மிகுந்த ஆர்வத்துடன் பார்ப்பேன். தலைமைத்துவத்திலும் ஆக்ரோசமாகச் செயற்படுகிறார்.



இந்தியா – ஆஸ்திரேலியா இடையேயான டெஸ்ட் தொடரில் இந்தியா தொடரை வெல்ல அதிகமான வாய்ப்பு இருக்கிறது. அந்த அணியைச் சொந்த மண்ணில் வீழ்த்துவது என்பது எப்போதுமே சவாலானது. சுழற்பந்து வீரர்களான அஸ்வினும், ஜடேஜாவும் மிகவும் நேர்த்தியாக பந்து வீசி வருகிறார்கள். இருவரும் ஆஸ்திரேலிய வீரர்களுக்கு சவாலாக இருப்பார்கள்.

ஆஸ்திரேலிய அணியில் சிறந்த தலைவர்களின் கீழ் நான் விளையாடியது அதிர்ஷ்டமே. நான் விளையாடிய காலத்தில் சச்சின், லாரா இருவருக்கும் பந்துவீசுவது சவாலானது. களத்தில் நிலைத்து விட்டால் பாடாய்ப்படுத்தி விடுவார்கள் என வோர்ண் மேலும் தெரிவித்தார். (ம)

## இந்திய வீரர்களுக்கு சம்பள உயர்வு

இந்திய கிரிக்கெட் வீரர்களின் சம்பளங்கள் பல மடங்கு உயர்த்தப்படவுள்ளன என்று இந்திய ஊடகங்கள் சில குறிப்பிட்டன.

இந்திய கிரிக்கெட் கட்டுப்பாட்டுச் சபை ஏ, பி, சி என மூன்று பிரிவாக தனது வீரர்களுடன் ஒப்பந்தம் செய்துள்ளது. 'ஏ' பிரிவில் இடம்பெற்றுள்ள வீரர்களுக்கு வருடத்துக்கு ஒரு கோடியும், 'பி' பிரிவில் இடம்பெற்றுள்ள வீரர்களுக்கு 60 லட்சமும், 'சி' பிரிவில் இடம் பெற்றுள்ள வீரர்களுக்கு 35 லட்சமும் தற்போது வழங்கப்படுகிறது. இந்தத் தொகை பல மடங்குகளால் அதிகரிக் கப்படவுள்ளது. 'ஏ' பிரிவில் உள்ள வீரர்களுக்கு 5 கோடி ரூபாவும், 'பி' பிரிவில் உள்ள வீரர்களுக்கு 2 கோடி ரூபா வும், 'சி' பிரிவில் உள்ள வீரர் களுக்கு ஒரு கோடி ரூபாவும் வழங்கப்படவுள்ளன.

தற்போது 'ஏ' பிரிவில், டோனி, கோக்லி, ரகானே, அஸ்வின் ஆகிய நால்வருமே உள்ளனர்.

ரெய்னா, ரோகித் சர்மா, முரளி விஜய், தவான், அம்பதி ராயுடு, புஜாரா, புவனேஸ்வர் குமார், உமேஷ் யாதவ், இசாந்த் சர்மா, முகமது சமி ஆகிய வீரர்கள் 'பி' பிரிவில் உள்ளனர்.

அமித் மிஸ்ரா, அக்சர் பட் டேல், ஸ்டுவர்ட் பின்னி, விருத்திமான் சகா, மொகித் சர்மா, வருண் ஆரோன், கரண் சர்மா, ரவிந்திர ஜடேஜா, ராகுல், குல்கர்னி, ஹர்பஜன் சிங் ஆகியோர் 'சி' பிரிவில் உள்ளனர்.

புதிய ஒப்பந்தத்தில் வீரர்களின் நிலைகளும் மாற்றம் செய்யப்படவுள்ளது. (ம)

போட்டிப் பரீட்சை வகுப்புக்கள்
SLAS
Open / Limited
காலம்
பிரதி சனி , ஞாயிறு தினங்களில்
9.00-2.00 pm
விரிவுரையாளர்கள்
P.உமாசங்கர்
P.கமல்தாசன்
மற்றும்
துறைசார்விரிவுரையாளர்கள்.
நாவலர்
கல்வி நிலையம்
ஆனைப்பந்தி, யாழ்.நகர்
077 469 6695



## ரியல் மட்ரிட் அணியை பந்தாடியது வலன்சியா

ஐரோப்பியக் கழகங்களுக்கு இடையிலான கால்பந்துத் தொடரில் நேற்றுமுன்தினம் ஆட்டத்தில் ரியல் மட்ரிட் அணியை வென்றது வலன்சியா.

ஆட்டம் ஆரம்பித்து நான்காவது நிமிடத்திலேயே மட்ரிட்டின் கோலைப் பதிவுசெய்தார் சனா. அடுத்த ஐந்து நிமிடங்களில் பிறிதொரு கோலைப் பதிவுசெய்து மட்ரிட்டுக்கு அதிர்ச்சி மேல் அதிர்ச்சி கொடுத்தார் ஒரென்லா. 2:0 என்று ரியல் மட்ரிட்டை அடக்கி ஆண்டது வலன்சியா. முதல்பாதியின் முடிவுவரை வேறெந்தக் கோலும் பதிவாகவில்லை.

இரண்டாம் பாதியில் அதாவது ஆட்டத்தின் 46ஆவது நிமிடத்தில் ரியல் மட்ரிட்டின் முதல் கோலைப் பதிவுசெய்தார் றொனால்டோ. 2:1 என்று வலன்சியாவின் ஆதிக்கத்துடன் ஏனைய நிமிடங்களும் உருண்டோட முடிவில் ரியல் மட்ரிட்டை தோற்கடித்தது வலன்சியா. (ம)

யப்பான் சைக்கிள் மலிவு விற்பனைக்கு
யாழ். மண்ணில் மீண்டும் உதயம். Original Japan Ladies & Gents சைக்கிள்கள் R/C மலிவு விற்பனைக்கு உண்டு.
விலை 6500/= இல் இருந்து
ராசிக் சைக்கிள் பஜார்
கொட்டடி லைடன் சந்தி, யாழ்ப்பாணம்.
0777905333

## தலைமையை எடைபோட இது தருணம் கிடையாது

### இப்படிக் கூறுகிறார் கோக்லி

தனது தலைமைத்துவத்தை எடைபோட இது சரியான தருணமல்ல என்று இந்திய அணி யின் டெஸ்ட் தலைவர் கோக்லி தெரிவித்தார்.

இந்தியா – ஆஸ்திரேலியா அணிகளுக்கு இடையிலான டெஸ்ட் தொடர் நேற்று ஆரம்பமானது. தொடர் தொடர்பாக நேற்றுமுன்தினம் நடைபெற்ற செய்தியாளர் சந்திப்பில் கலந்துகொண்டு கருத்துத் தெரிவிக்கையிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

'ஒவ்வொரு தொடர் முடிந்த பின்னும் என்னை நானே சுயபரிசோதனை செய்து கொள்வதில்லை. தொடர்களில் வெற்றி பெறவேண்டும் என்பதே ஒரே குறிக்கோளாக இருக்கும். அணி வீரர்கள் நன்றாக விளையாடினால் தலைமைத்துவம் சிறந்ததாகவும் சுலபமானதாகவும் இருக்கும். அதேநேரம் மற்ற வீரர்கள் சரியாக விளையாடவில்லை என்றால், தலைமை மீது அதிக அழுத்தங்கள் வைக்கப்படும்' என கோக்லி மேலும் தெரிவித்தார். (ம)

வேலை ஆட்கள் தேவை
ANDRA
DIGITAL IMAGE
கோண்டாவிலில் இயங்கும் எமது வேலைத் தளத்திற்கு
வேலை ஆட்கள் 30 பேர் தேவை
கோண்டாவிலில் இருந்து 3Km தூரத்திற்குள் வசிப்பவர்களுக்கு முன்னுரிமை வழங்கப்படும்.
➢ கவர்ச்சிகரமான சம்பளத்துடன் மேலதிக கொடுப்பனவுகள் வழங்கப்படும்!
➢ தங்குமிட வசதியும் உண்டு!
➢ முன் அனுபவம் தேவையில்லை!
➢ ஆண்கள் மட்டும்
சனிக்கிழமை (25.02.2017) காலை 9.00 மணிமுதல் மதியம் 12:30 மணிவரை நேர்முகத் தேர்வு நடைபெறும்.
379,Kasthuriyar Road, Jaffna.
0772607614 | 0777481696

## விராட் கோக்லியை அதிகம் சீண்டவும்

### இப்படிக்கு வாக்

இந்தியாவுக்கு எதிராக நடைபெற்றுவரும் டெஸ்ட் தொடரில் ஆஸ்திரேலிய வீரர் விராட் கோக்லியுடன் வார்த்தை மோதலில் ஈடுபடவேண்டும் என்று வலியுறுத்தினார் ஆஸ்திரேலிய அணியின் முன்னாள் தலைவர் ஸ்ரீவ் வாக்.

கோக்லியை சீண்டினால் அவர் மேலும் பலம்பெறுவார். எனவே அவருடன் வார்த்தை மோதல்களில் ஈடுபடுவதை ஆஸ்திரேலிய வீரர்கள் தவிர்க்க வேண்டும் என்று வோர்ணர் தெரிவித்திருந்த நிலையில் வார்த்தை மோதலில் ஈடுபடவேண்டும் என்று வாக் வலியுறுத்தினார்.

ஆட்டத்தின் ஆரம்பத்திலேயே கோக்லியை வார்த்தை மோதலுக்கு இழுத்து கவனத்தை திசைதிருப்பி விட வேண்டும் என்று நான் ஒருபோதும் சொல்லமாட்டேன். ஏனெனில் அவ்வாறான நடவடிக்கை கோக்லியிடம் சரிவராது. ஆனால் கோக்லி, படிப்படியாக ஓட்டங்களைக் குவிக்கத் தொடங்கும் போது அவரை வார்த்தை மோதலுக்கு இழுக்கலாம். அப்படிச் செய்தால் எல்லோரையும் போலவே கோக்லியும் தடுமாறுவார் என்பது எனது கணிப்பு. எனவே வார்த்தை மோதலில் ஈடுபடாமல் தள்ளி நிற்காமல் அவருடனும் ஆஸ்திரேலிய வீரர்கள் வார்த்தை மோதலில் ஈடுபடவேண்டும் என வாக் மேலும் தெரிவித்தார். (ம)



## டோனியை நீக்கியதில் சேவாக்குக்கு மகிழ்ச்சி

புனே அணியின் தலைமைப் பொறுப்பில் இருந்து டோனி நீக்கப்பட்டமை தனக்கு மகிழ்ச்சி என்று தெரிவித்தார் சேவாக்.

இந்திய அணி கண்ட ஆகச் சிறந்த தலைவர்களில் டோனி ஒருவர். அவர் புனே அணியின் தலைவராகச் செயற்பட்டார். நடப்பு வருடத்திலும் அவர் புனேயின் தலைவராகத் தொடர்ந்தால் பஞ்சாப் அணி புனேயை வீழ்த்த சிரமப்பட்டிருக்கும். எனவே டோனியின் நீக்கத்தால் பஞ்சாப் வெற்றிபெறும் என்ற நம்பிக்கை வந்துள்ளது என்று சேவாக் மேலும் தெரிவித்தார். பஞ்சாப் அணியின் ஆலோசகராக சேவாக் உள்ளமை குறிப்பிடத்தக்கது. (ம)

போட்டிப்பரீட்சை வகுப்புக்கள் யாழ்ப்பாணக் கல்லூரி பட்டப்படிப்புக்கள் பிரிவு (யாழ். ஆஸ்பத்திரி வீதி, கொமர்ஷல்வங்கியருகில்) 076 688 3394, 021 222 3382
SLAS OPEN, Limited
சனி, ஞாயிறு 9.00 - 3.00 நடைபெறும் ஆரம்பம் - இன்று வெள்ளி 9.00 - 3.00
சட்டமாணி நுழைவு வெள்ளி (இன்று), சனி, ஞாயிறு 9.00 - 3.30 மணிவரை
*கடந்தகால வினாத்தாள்கள் *எதிர்பார்க்கை வினாக்கள்
*சிங்கள மொழி கருத்தரங்கு விடயங்கள்
முகாமைத்துவ உதவியாளர்
வங்கி பரீட்சைகள் போன்ற அனைத்து பரீட்சைகளுக்குமான வகுப்புக்கள் நடைபெறுகின்றன.

இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிக்கேசன் (பிறைவேற்) லிமிட்ரெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361 ஆம் இலக்கத்தில் உள்ள அவர்களது பணிமனையில் 24.02.2017 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.